
# மாவீரன் நெப்போலியன்

## வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்




பானுகுமார்

# மாவீரனுக்கு அர்ப்பணிப்பு

உன் உயரம் கண்டு நகைத்தவரை
உதாசினப் படுத்தி எழுந்தாய்!
என் உயரம் இதுவென்று
எழுந்தாய் வியந்தது உலகம்!

பூ விரலின் நுனியில்
பூமிப்பந்தை நிறுத்தும்
வல்லமை கொண்ட நீ
வரலாறு படைத்தாய்

ஐரோப்பிய நாடுகளை
சொக்கட்டான் ஆடியதை
சுற்றும் பூமி கண்டு
சொக்கித்தான் போனது.

சுழலும் உலகின் ஒரு
பகுதி வரலாற்றை
எழுதி இயக்கி
நடித்தவன் நீ.

உலக உருண்டையில்
நீதான் பூமத்திய ரேகை
அன்று நீ போட்ட அடித்தளங்கள்
இன்று உலக வரலாறு.

நீ காட்டிய நாட்டுப்பற்றும்
ஊட்டிய தன்னம்பிக்கையும்
விதைத்திட்ட விடாமுயற்சியும்
எம் மக்களும் பெற வேண்டும்.

# துணை நின்ற நூல்கள்


1. History of Europe 1789-1948 - P.C. THOMAS
2. Napolean 1956 - FISHER. H.A.L.
3. Bonapartism - FISHER. H.A.L.
4. Napolean, Londan 1973 - BOWLE JOHN.
5. Napolean-Far and Against 1949 - GEYL. P.
6. Napolean and Pope - HALEN E-E-Y.
7. Life of Napolean - HASSALL
8. The French Revolution and Napolean - HAZAN.
9. The mind of Napolean, 1955 - HEOLD J.C.
10. Napolean - AUDWIG. E.
11. Napolean and the Awakening of Europe, 1954 - MARKAM. F.M.H.
12. Europe Service Napolean - THOMSON, OAVID.
13. Napolean Bonaparte - SLOANE.
14. Napolean Studies - ROSE. J.H.
15. மாவீரன் மூவர் - லோகிதாசன்.
16. மாவீரன் நெப்போலியன் - சி. நடராஜன்
17. சக்ரவர்த்தி நெப்போலியன் - அ.லெ. நடராஜன்
18. வீரப்பெருமக்கள் நால்வர் - V.S.V. இராகவன்

# வாழ்த்துரை

**ஆ. தேவதாஸ்காந்தி, எம்.காம்., எச்.டி.சி.,**
கூடுதல் பதிவாளர்
(ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சி திட்டம்).
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர்
அலுவலகம், சென்னை - 10.

"பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு
பலகோடி நூறாயிரம்
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா - உன்
சேவ்வடி செவ்வித் திருக்காப்பு"

★★★

திரு. பானுகுமார் அவர்களால் எழுதப்பட்ட **'நெப்போலியன் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்'** என்ற இந்நூலானது படித்துப் பயன் பெறத் தக்கது. எத்தனையோ வரலாற்று நூல்கள் நெப்போலியன் வரலாறு பற்றி வெளிவந்துள்ளன. நாமும் படித்துள்ளோம். ஆனால் அவற்றைக் கோர்வையாய் ஆர்வமாய் படிக்கும், புரிந்து கொள்ளும் சிரமம் நமக்குத் தெரியும். அத்தகைய சிரமமின்றி விரும்பிப் படிக்கும் தன்மையுடையதாக உள்ளது.

இந்நூலைப் படிக்கும் பொழுது வெறும் தனித்தனி துணுக்குகளாக இல்லாமல் மாவீரன் நெப்போலியனது முழு வரலாற்றையும் தெளிவாக அறியும்படி தேர்ந்து ஆய்ந்து எடுத்தாண்டுள்ளார். இதனைப் படிக்கும் பொழுது எனக்கொரு சந்தேகம். ஆசிரியர் நெப்போலியன் வரலாறு கூற வந்தாரா? இல்லை திருக்குறள் கருத்துக்களுக்கு எவ்வாறு எடுத்துக்காட்டாக, சான்றாக வாழ்ந்தார் எனக் கூற

வந்தாரா? அத்துணை குறள்கள், ஆங்காங்கு பல அறிஞர் பெருமக்களது கருத்துக்கள், மேற்கோள்கள், ஆகியவற்றைச் சுவைபட நூலில் ஆங்காங்கே பொருத்தமுறக் கூறியுள்ளார்.

நெப்போலியனது தன்னம்பிக்கை, வீரம், நாட்டுப்பற்று, சமத்துவம், பிரபஞ்ச அறிவு, உழைப்பு, நிர்வாகத்திறன், விருந்தோம்பல், கண்ணியம், பெண்களை மதித்தல் ஆகிய நற்பண்புகளைக் கூறியதோடு மட்டுமின்றி அவரது ஏழ்மை, வறுமை, வறுமையிலும் செம்மை, அனைத்துப் பண்புகளையும் கூறியுள்ளார். இதனால் எளிய, வறிய குடும்பத்தில் பிறந்தோரும், இத்தகைய நற்பண்புகள் பெற்றிருந்தால் நிச்சயம் நினைத்ததைச் சாதிக்கலாம், ஊழையும் உட்பக்கம் காணலாம், வானம் அவர் வசப்படும் என எடுத்துரைத்துள்ளார்.

'ஒருவர் வளர்ச்சியைக் கண்டு பொறுக்க முடியாதவர்களின் ஏக்கப் பார்வைதான் பொறாமை' என்ற ஆசிரியரின் விளக்கம் உன்னதமானது.

வாழ்க்கையில் வெற்றிபெற வேண்டும் என்ற விருப்பமும் கனவுகளும் அனைத்து இளைஞர்களுக்கும் உண்டு. ஆனால் கனவு காண்பதோடு மட்டுமின்றி, அவற்றை வெற்றி பெறுவதற்கான வழிமுறைகளையும் தெரிந்து, வாழ்வில் வெற்றிகள் பல பெற்று, திண்ணிய மனத்தினராய், வையத்தூள் வாழ்வாங்கு வாழ வாழ்த்துகிறேன்.

**"எண்ணிய எண்ணியாங்கு எய்துவர் எண்ணியர்**
**திண்ணிய ராகப் பெறின்"**

- குறள்

சென்னை,
05-07-2004

அன்புடன்
**தேவதாஸ்காந்தி**

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்,**
(இன்று ஒரு தகவல்)
உதவி இயக்குநர் (ஓய்வு,)
அகில இந்திய வானொலி,
சென்னை.

# அணிந்துரை

1821 ஆம் ஆண்டு
மே மாதம் ஐந்தாம் தேதி
உலக வரலாறு மறக்க முடியாத ஒரு நாள்
ஆமாம்

மாவீரன் நெப்போலியன் அன்றைக்குத்தான் இம்மண்ணுலகை விட்டு மறைந்து போனான். செயின்ட் ஹெலினா தீவில் சிறை வைக்கப்பட்டிருந்த அவன், வயிற்றுப் புற்று நோயினால் இறந்து போனான் என்று ....

அன்றைய பிரிட்டிஷ் அரசு அதிகார பூர்வமாக அறிவித்தது. ஆனால் அந்த வீரன் தனது நாட்குறிப்பிலே இப்படி எழுதியிருந்தான்.

"நான் பிரிட்டிஷ்காரர்கள் நியமித்த கொலை காரர்களால் கொல்லப்பட்டுக் கொண்டிருக்கிறேன்." (1821 - மே - 2) இறந்து போவதற்கு மூன்று நாள்கள் முன்னதாக எழுதப்பட்டிருந்த குறிப்பு இது. இந்தச் செய்தியை அன்றைய பிரிட்டிஷ் அரசு மறுத்தது.

"பிரிட்டிஷ் அரசின் மீது ஒரு பழியை நெப்போலியன் சுமத்தியிருக்கிறார்."

உடலைத் தோண்டி எடுத்துச் சோதனை செய்யவும் அன்றைய அரசு அனுமதிக்கவில்லை.

அதன் பிறகு 140 ஆண்டுகள் ஓடிவிட்டன. 1961ல் கிளாஸ்கோ நகரைச் சேர்ந்த இரு டாக்டர்கள் அந்த

மாபெரும் வீரனின் மறைவுக்குப் பின்னால் இருக்கும் உண்மையைக் கண்டுபிடிக்க முயன்றார்கள்.

ஒரு தொல்பொருள் காட்சி சாலையில் அது கிடைத்தது. நெப்போலியன் இறந்து போன அன்று காலையில் முடிவெட்டிக் கொண்டபோது.... எடுத்து அவருடைய அன்பர்களால் பாதுகாக்கப்பட்ட முடி அது. தடய அறிவியல் முறையில் அதை ஆராய்ந்தார்கள். ஆர்சனிக் விஷம் அவர் உணவில் கலக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதைக் கண்டுபிடித்தார்கள். அந்த வீரன் நாட்குறிப்பில் எழுதியிருப்பதும் உண்மை என்பது இந்த உலகத்துக்குப் புரிந்தது.

அந்த உண்மை வீரனின் வரலாறு இங்கே சுவையான நிகழ்ச்சிகளாகச் சொல்லப்படுகிறது.

**இதைக் கையில் எடுத்துவிட்டால் படித்து முடித்துவிட்டுத்தான் கீழே வைக்க முடியும்.**

அந்த அளவுக்குச் சிறப்பாக இதைச் செய்து முடித்திருக்கிறார் இந்நூலாசிரியரும் எனது இனிய நண்பருமான பானுகுமார் அவர்கள்.

பல நூல்களைப் படித்து உண்மை விவரங்களை சேகரித்து, ஒழுங்குப்படுத்தி ஓர் அழகிய நூலாக உருவாக்கியிருக்கிறார்.

**நெப்போலியன் வாழ்வில் நடந்த நிகழ்வுகளைப் படிக்கிறபோது நமக்குள்ளே ஒரு நம்பிக்கை வெளிச்சம் உற்பத்தியாவதை உணர முடிகிறது. அதுவே இந்நூலின் வெற்றி.**

அவரது செயல் பாராட்டுக்குரியது.

**நல்வாழ்த்துகள்.**

சென்னை,
12.06.2004

அன்புடன்
**தென்கச்சி சுவாமிநாதன்.**

# என்னுரை

"நம் உள்ளத்தில் படிந்துள்ள இறைவனின் தெய்வீக மூச்சுக் காற்றின் வெப்பமே எழுத்து"

- கவிஞர் ஒவிட்

"தன்னம்பிக்கை என்னுடைய வெற்றிக்கு காரணம்". "முடியாது என்ற சொல் என் அகராதியில் கிடையாது" இந்தப் பொன்மொழிகளை, பள்ளி மாணவனாய் இருந்த போது என் புத்தகங்களில் எழுதி வைத்துக் கொள்வது என் வழக்கம்.

இந்தப் பொன் மொழிகள் மாணவப் பருவத்திலேயே என்னுடன் கலந்து விட்டது. எப்படியோ இந்தப் பாதிப்பு இளம் வயதிலேயே என்னுள் ஊறிவிட்டது.

இந்த அடிப்படையே எழுத்துலகில் என்னுடைய படைப்புகளின் போதும் நெப்போலியனின் பொன்மொழிகள் இயற்கையாக இடம்பெற்றன. பொதுவாக என்னுடைய கதைகள், கட்டுரைகள், கவிதைகள் அனைத்திலும் எப்படியாவது நெப்போலியனின் பொன்மொழிகள் இடம் பெற்றுவிடும்.

என்னுடைய நண்பர் கன்னியாஸ்திரி சிஸ்டர் அல்போன்சா தாளவாடியில் தலைமை ஆசிரியராகப் பணிபுரிந்து சேவை செய்து வருகிறார். ஒரு சமயம் என்னுடைய படைப்புகள் பற்றி உரையாடிக் கொண்டிருந்தார். "நெப்போலியனின் தன்னம்

பிக்கையும், வீரமும் உங்களிடம் ஆழமான பாதிப்புகளை ஏற்படுத்தி விட்டனவே?" என்று வியந்தார். "ஒரு பாராட்டு என்னை ஆறு மாதத்திற்குச் சுறுசுறுப்பாக வேலை செய்ய வைக்கும்" என்று மார்க்ட்வென் சொன்னது போல் இவருடைய பாராட்டில் மகிழ்ந்து போனேன். நெப்போலியன் பொன்மொழிகள் இல்லாத என் படைப்புகள் வருவது அரிது என்று பெருமையாகக் கூறினேன். தீடிரென்று "நெப்போலியனுக்குப் போப் ஆண்டவரைப் பிடிக்காதோ?" என்று சிஸ்டர் கேட்டார். எனக்குப் பதில் சொல்லத் தெரியவில்லை. உடனே அவரிடம் நெப்போலியனின் முழு வரலாறையும் இன்னும் நான் முழுமையாகப் படிக்கவில்லை என்று என் குறையை ஒப்புக் கொண்டேன்.

இந்த நிகழ்ச்சியே நெப்போலியன் வரலாறு முழுவதையும் படிக்க வித்திட்டது. நெப்போலியன் பற்றி பல்வேறு வரலாற்று ஆசிரியர்களின் நூல்களைப் படிக்கப் படிக்க நெப்போலியன் மீது எனக்கு மேலும் பற்றும் பாசமும் ஏற்பட்டது. அந்த மாவீரனின் வாழ்க்கையில் ஏற்பட்ட முன்னேற்றத்தைக் கண்டு ஆச்சரியமடைந்தேன். துன்பத்திலும் நிலை தடுமாறாத அவரது சமநோக்குத் தன்மை கண்டு வியந்தேன். அவரது குணநலப் பண்புகளை நம் வாசகர்களின் முன்னேற்றத்துக்குப் பயன்படும் வகையில் புத்தகம் எழுதலாம் என்று கருதினேன்.

இந்தச் சமயத்தில் பத்திரிக்கையில் ஒரு செய்தி படித்து வியந்து போனேன். ஆண்டுதோறும் தனிப்பட்ட

ஒருவரைப் பற்றி எழுதப்பட்ட நூல்கள் வெளி வருகின்றன. அப்படி வெளிவந்த நூல்களில் ஐந்து பேர்களைப் பற்றிய நூல்களே இதுவரை அதிகமாக விற்பனை ஆகியுள்ளது. அந்த ஐந்து நபர்கள் 1. **ஏசு நாதர்** (5152 நூல்கள்) 2. **ஆப்ரஹாம் லிங்கன்** (2313 நூல்கள்) 3. **நெப்போலியன்** (2155 நூல்கள்) 4. **ஷேக்ஸ்பியர்** (3172 நூல்கள்) 5. **ஜார்ஜ் வாஷிங்டன்** (1735 நூல்கள்) இவர்கள் யாருமே 20 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்கள் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. இந்தச் சாதனை 2004 ஆம் ஆண்டிலும் தடையின்றித் தொடர்கிறது.

தனிப்பட்ட நெப்போலியனைப் பற்றி ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கில் நூல்கள் வந்து கொண்டிருக்கும்போது நெப்போலியனைப் பற்றி எப்படி எதைப்பற்றி எழுதுவது என்று மலைத்துப் போயிருந்தேன். இந்தச் சிந்தனையில் இருந்து கொண்டிருந்தபோது மகாத்மா காந்தி, பாரதியார் ஆகியோர் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள் என்ற புத்தகங்களைப் படிக்க நேர்ந்தது. என் எண்ணத்திலும் திடீரென்று பொறி தட்டியது. நாமும் "மாவீரன் நெப்போலியன் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்" என்ற தலைப்பில் எழுதலாம் என்று முடிவு செய்தேன்.

நெப்போலியனது வாழ்வில் நாம் தெரிந்து கொள்ள வேண்டிய அறிந்து கொள்ள வேண்டிய பின்பற்ற வேண்டிய நிகழ்ச்சிகள் ஏராளமாக இருந்தன. அவற்றில் எதை விடுவது எதைச் சேர்ப்பது என்று முடிவுக்கு வர இயலவில்லை. அம் மாவீரனது வாழ்வில் ஏற்பட்ட

நிகழ்ச்சிகள் அனைத்துமே உலக மக்கள் அனைவரும் படித்துப் பயன் பெறத்தக்கவை. இருப்பினும் முக்கியமான 100 நிகழ்ச்சிகளை எனது உத்தியில் எழுதினேன்.

இந்தப் புத்தகம் பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கும் ஏன் அனைத்து தரப்பினருக்குமே ஒரு ஊன்று கோலாக உற்சாகப் பானமாக, ஏணிப்படியாக அமையும் என்பதில் ஐயமில்லை.

இந்நூல் எழுத வரலாற்றில் பட்டம் பெற்ற என் துணைவியார் என்னை அடிக்கடி ஊக்கப்படுத்தினார். அவருக்கு முதல் நன்றி. புத்தகம் வரக் காரணமாயிருந்த சிஸ்டர் அல்போன்சா அவர்களுக்கும், அணிந்துரை வழங்கிய திரு. தென்கச்சி சுவாமிநாதன் அவர்களுக்கும், வாழ்த்துரை வழங்கிய திரு.தேவதாஸ்காந்திஅவர்களுக்கும், ஒளியச்சு செய்தோர், அச்சிட்டோர், பதிப்பகத்தார் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வழக்கம்போல் வாசக அன்பர்கள் இப்புத்தகத்தை வரவேற்பார்கள் என்று நம்புகிறேன். இந்நூலைப் படிக்கும் நீங்களும் உங்கள் குடும்பத்தினரும் உடல்நலம், நீளாயுள், நிறைசெல்வம், உயர்புகழ், மெய்ஞானம் பெற எல்லாம் வல்ல இறைவனிடம் பிரார்த்திக்கிறேன்.

**இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க**

120, அரிசிக் கடைத் தெரு,
மன்னார்குடி.
25-09-2004

அன்புடன்,
பானுகுமார்

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | கருவிலே போர்க்களம் | 17 |
| 2. | அச்சமென்பதில்லை | 19 |
| 3. | விளையும் பயிர் முளையிலே | 20 |
| 4. | லட்சியத்தில் உறுதி | 22 |
| 5. | கண்ணியமே போதும் | 24 |
| 6. | அவமதிப்பு | 25 |
| 7. | பிராயச்சித்தம் | 26 |
| 8. | செய்நன்றி | 28 |
| 9. | நெப்போலியன் கணக்கு | 30 |
| 10. | சிக்கனம் | 32 |
| 11. | கோஷாப்பெண்ணே | 33 |
| 12. | இடுக்கண் களையும் நட்பு | 35 |
| 13. | பொறுமை | 37 |
| 14. | முதல் விழுப்புண் | 38 |
| 15. | அறுவை சிகிச்சை | 40 |
| 16. | பிறர்துயர் துடைப்பவன் | 41 |
| 17. | வீரத்தைப் போற்றுதல் | 43 |
| 18. | எழுத்தாற்றல் | 44 |
| 19. | மற்றவரின் உணர்ச்சிக்கு மதிப்புக் கொடுத்தல் | 46 |
| 20. | திருமணத்தில் தூக்கம் | 47 |
| 21. | கணவனின் பெருமைகள் | 49 |
| 22. | ஒழுக்கமே உயிர் | 50 |
| 23. | காதல் கடிதம் | 52 |

| | | |
|---|---|---|
| 24. | நகைச்சுவை பதில் | 53 |
| 25. | ஆழ்ந்த தூக்கம் | 54 |
| 26. | உழைப்புக்கு முதலிடம் | 56 |
| 27. | தேவதூதன் | 57 |
| 28. | கருமமே கண் | 59 |
| 29. | தவற்றை ஒத்துக் கொள்ளுதல் | 60 |
| 30. | எழைகளின் அரசர் | 62 |
| 31. | இந்தியா மீது காதல் | 63 |
| 32. | இஸ்லாமியப் பற்று | 64 |
| 33. | பிரபஞ்ச அறிவு | 66 |
| 34. | வைர மோதிரம் | 67 |
| 35. | நான்கு உபாயங்கள் | 68 |
| 36. | குடி உயர கோனுயரும் | 70 |
| 37. | சமத்துவம் | 71 |
| 38. | மன்னிக்கத் தெரிந்த உள்ளம் | 72 |
| 39. | மனக் கவலைக்கு மருந்து | 74 |
| 40. | வெற்றியின் இரகசியம் | 75 |
| 41. | தாயின் எச்சரிக்கை | 77 |
| 42. | முடி சூட்டும் விழா | 78 |
| 43. | வீரனின் பயம் | 80 |
| 44. | ஜெர்மானிய இளைஞனின் வியப்பு | 81 |
| 45. | விசுவாசம் | 82 |
| 46. | யானைக்கும் அடிசறுக்கும் | 83 |
| 47. | மதிக்கத் தெரிந்தவன் | 85 |
| 48. | தாயின் விருப்பத்தை நிறைவேற்றல் | 87 |
| 49. | தலைக்கு வந்தது | 88 |
| 50. | குழந்தை ஏக்கம் | 89 |

| | | |
|---|---|---|
| 51. | விவாக இரத்து | 90 |
| 52. | வாளின் மீது ஆசை | 92 |
| 53. | கொடை வள்ளல் | 94 |
| 54. | மாவீரனை எதிர்த்த பெண் | 95 |
| 55. | வாரிசும் 21 குண்டுகளும் | 96 |
| 56. | போர்த் தந்திரங்கள் | 97 |
| 57. | ஏக்கம் | 99 |
| 58. | பிரான்சின் தேவை என்ன? | 100 |
| 59. | திட்டமே உயர்வு | 102 |
| 60. | அரவணைக்கும் பண்பு | 103 |
| 61. | கண்ணீர் காணிக்கை | 104 |
| 62. | வெற்றிக் களிப்பு | 106 |
| 63. | இரண்டாம் ஜஸ்டினியன் | 108 |
| 64. | பிச்சைக்காரர்களுக்கு மறுவாழ்வு | 109 |
| 65. | பெண்ணின் பெருமை உணர்தல் | 110 |
| 66. | அழகியின் காதல் வலை | 112 |
| 67. | மனுதர்மம் | 113 |
| 68. | சகிப்புத் தன்மை | 114 |
| 69. | வீழ்ச்சிக்கு வித்து | 116 |
| 70. | சிறந்த தீர்ப்பு | 118 |
| 71. | விருந்தோம்பல் | 119 |
| 72. | புலவர்களின் பாராட்டு | 120 |
| 73. | தலைவிதியை மாற்ற முடியாது | 121 |
| 74. | உட்பகை | 124 |
| 75. | எதிரியின் புகழ்மாலை | 125 |

| | | |
|---|---|---|
| 76. | உருக்கமான பேச்சும் கண்ணியமான நடத்தையும் | 127 |
| 77. | எனக்கொரு நீதி உங்களுக்கு ஒரு நீதியா? | 128 |
| 78. | காதல் மனைவிக்குக் கடைசி கடிதம் | 130 |
| 79. | காதல் மனைவி மறைவு | 131 |
| 80. | வந்தது தான் போகும் | 132 |
| 81. | கிண்டல் | 133 |
| 82. | வசீகரத் தன்மை | 134 |
| 83. | பச்சோந்திகள் | 136 |
| 84. | 100 நாட்கள் | 137 |
| 85. | மனக்கலக்கமில்லாதவன் | 138 |
| 86. | கடைசி வணக்கம் | 140 |
| 87. | குழந்தை மனம் | 141 |
| 88. | துன்பம் வரும்போது சிரியுங்கள் | 142 |
| 89. | புலிப் பசித்தாலும் | 143 |
| 90. | வரலாற்று ஆசிரியர் | 145 |
| 91. | குளோப்பில் கீறல் | 147 |
| 92. | வீர சகாப்தத்தின் கண்ணீர் | 148 |
| 93. | அது ஒரு மனப்பக்குவம் | 149 |
| 94. | பிரிட்டிஷ் சிறுமியின் புத்தகம் | 150 |
| 95. | நட்பின் அவசியம் | 151 |
| 96. | தன்னம்பிக்கை | 152 |
| 97. | கடைசி வார்த்தை | 154 |
| 98. | நினைப்பே நடப்பு | 155 |
| 99. | கல்லறையில் கருவறை தரிசனம் | 157 |
| 100. | அவர் ஒரு சகாப்தம் | 158 |

# 1. கருவிலே போர்க்களம்

"**தா**யைப் போல பிள்ளை நூலைப் போல சேலை" என்பது பழமொழி. தாயின் உள்ளம் போல் குழந்தை அமைவதால் இப்பழமொழி வழக்கில் இருந்து வருகிறது. கர்ப்ப காலத்தில் தாயின் எண்ணங்கள், செயல்கள் எல்லாம் கருவிற்கு இயல்பான குணமாக அமையும். எண்ணம் என்பதே உடலின் ஜீவகாந்தம், உயிர் அணுக்களோடு சேர்ந்து உடல் முழுவதும் பரவி நிற்கும் நிலைதானே! இந்த நிலையில் தாயின் எண்ணம் செயல்கள் இயல்பாக குழந்தைக்கு அமைந்து விடுகிறது.

பக்தப் பிரகலாதன் தாய் லீலாவதியின் வறிற்றில் இருந்தபோது, நாராயணன் மகிமைகளை நாரதர் கூறிவந்தார். கருவில் ஊட்டிய நாராயண மந்திரத்தைப் பிரகலாதனிடமிருந்து, தந்தை இரணியனால் மாற்ற முடியவில்லை.

பாரதப்போர் தவிர்க்க முடியாதது! போர் எப்படி இருக்கும்? என்ற போர் வர்ணனைகளை அர்ச்சுணன் மனைவி கர்ப்பவதி சுபத்திரையிடம் நாரதர் கூறிவந்தார். நாரதர் சொன்ன போர்க் கதைகளை, போர் முறைகளைக் கேட்ட சுபத்திரையின் வயிற்றில் இருந்த அபிமன்யு, வீர அபிமன்யுவாக போர் வீரனாக உருவெடுத்தான். இதே போன்றுதான் கரு உண்டானபோதே போர்க்களம் கண்டார் நெப்போலியன்.

இத்தாலிக்கு மேற்கே சுமார் 100 மைல் தூரத்திலும் பிரான்ஸ் நாட்டின் தென்கிழக்கே சுமார் 200 மைல் தொலைவிலும் மத்திய தரைக்கடலில் உள்ளது கார்சிகா

தீவு. இது நீண்ட நெடுங்காலமாக இத்தாலியின் ஒரு பகுதியாக இருந்தது. இங்குதான் சார்லஸ் என்பவர் தனது மனைவியுடன் வாழ்ந்து வந்தார். அப்போது பிரான்ஸ் மன்னர் 15-ஆம் லூயி கார்சிகா தீவினைக் கைப்பற்றினார். அதன்பின் கார்சிகா பிரான்ஸ் நாட்டின் பகுதியாக மாறியது.

கார்சிகாவைக் கைப்பற்றிய பிரான்ஸ் நாட்டு வீரர்களுடன் கார்சிகா நாட்டினர் அடிக்கடி விடுதலைப் போர் நடத்தினர். இந்த விடுதலைப்போரில் சார்லசும் அவரது மனைவி லெடிசியா ரமோலியும் வாள் ஏந்திப் போரிட்டு வந்தனர். ஒரு சமயம் போர்க் களத்தில் வெற்றி வாகை சூடிய ரமோலி கூடாரத்தின் உள்ளே நுழைந்தார் 25 வயதான சார்லஸ். கூடாரத்தின் உள்ளே 17 வயதான அவரது மனைவி தன் மூத்தக் குழந்தைக்குப் பால் கொடுத்துக் கொண்டிருந்தாள். அவள் மார்பிலே ஒரு குழந்தை. கருவிலே ஒரு குழந்தை. இருப்பினும் கணவனுடன் விடுதலை வேண்டி வாள் ஏந்தி போராடி வந்தாள் வீரமங்கை. அந்த வீரமங்கையின் கருவில் நெப்போலியன் இரண்டாவது குழந்தையாக வளர்ந்து கொண்டிருந்தான். கருவுற்றிருக்கும்போது போர்ப்பணி செய்வதால் நமக்குப் பிறக்கப்போகும் புதல்வன் போர் வீரனாக இருப்பான் என்று கணவனும் மனைவியும் அடிக்கடி கூறி மகிழ்ந்தனர்.

ரமோலியின் தந்தை ஒரு ராணுவ அதிகாரியாக இருந்தவர். போர் வீரர்கள் குடும்பத்தில் வந்த தாயின் கருவிலேயே போர்ச் சூழலில் உருவாகி ஊக்கம் பெற்று வளர்ந்து வந்த குழந்தை 1769 ஆம் ஆண்டு மாதம் 15 ஆம் நாளன்று மாவீரனாகப் பிறந்தான் நெப்போலியன். மூதாதையர்கள் இரத்தமும், தாய் தந்தையர் இரத்தமும்

போர்ச் சூழலை அடிப்படையாகக் கொண்டு உருவானதாகும். இதனால் தான் கருவிலேயே போர்முனை கண்ட வீரன், பிரான்ஸ் நாட்டின் சக்ரவர்த்தியாக வளர்ந்தான். உலக வீரர்களின் வரிசையில் முதலாவதாகக் கருதப்படுகிறார்.

## 2. அச்சமென்பதில்லை

ஐந்து வயதில் பெற்றோர்கள் நெப்போலியனைப் பள்ளியில் சேர்த்தனர். சிறுவன் நெப்போலியனது உடல் உறுதியையும், சிந்திக்கும் திறனையும் வாக்கு உறுதியையும் கண்டு ஆசிரியர்கள் வியந்தனர். நெப்போலியனுக்கு அப்போது வயது 8. எப்போதும் தாயின் மடியில் தான் சிறுவன் தூங்குவான். ஒருநாள் தாயின் மடியில் தூங்கும் சிறுவன் காணவில்லை. பெற்றோர்கள் பதைபதைத்தனர். கவலையுற்றனர். ஊர் முழுவதும் தேடினர். சிறுவன் நெப்போலியனைக் காணவில்லை. இரவு நெருங்கி விட்டது. நடுநிசிவரை தேடியும் கண்டுபிடிக்க முடியவில்லை.

கடைசியில் ஊருக்கு வெளியே குளத்தின் அருகில் உட்கார்ந்திருந்தான். நடு இரவில் துள்ளும் மீன்களைக் கண்டு மகிழ்ச்சியுடன் இரசித்துக் கொண்டிருந்தான். நடு இரவு அச்சமே அவனிடம் இல்லை.

சிறுவனைக் கண்ட தாய் அணைத்து முத்தமிட்டார். கண்ணீர் விட்டார். "மகனே இந்த இரவில் உனக்குப் பயமில்லையா?" எனக் கேட்டார்.

"பயமா? "அப்படின்னா என்னம்மா?" என்று கேட்டான். "இளங்கன்று பயமறியாது" என்பது

மட்டுமல்ல. பயம் என்பதே கடைசிவரை நெப்போலியனுக்குக் கிடையாது. அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே என்பது நெப்போலியன் சிறுவதிலேயே வளர்ந்த பண்பாக உருவாகியது.

சிறுவன் நெப்போலியனுக்குத் தனிமை பிடிக்கும். விளையாட்டுப் பருவத்தில் நெப்போலியனுக்கு மன உறுதியும், மனத்திண்மையும், இயற்கையை இரசிக்கும் தன்மையும், மோனமும் தனிமையும் இயல்பாகவே அமைந்திருந்தன.

சிறுவதிலே அச்சத்தை வென்றவர் நெப்போலியன். இந்தத் தைரிய உணர்வே பின்னாளில், “போர்க்களத்தில் அச்சம் வந்தால் நிச்சயம் அவன் பகைவனுக்குக் கைதியாக வேண்டியதுதான்” என்றும் “வெல்லப்பட்டு விடுவோம் என்று பயப்படுபவன் நிச்சயம் தோல்வி அடைவான்” என்றும் உலகினருக்குச் சொல்லி வைத்தார்.

## 3. விளையும் பயிர் முளையிலே

நெப்போலியன் தந்தை சார்லஸ் போனபார்ட் பிரெஞ்சு நாட்டின் ஆதிக்கத்திலிருந்து கார்சிகா தீவை விடுதலை பெறப் போரிட்டு வந்தார். ஆனால், குடும்ப சூழ்நிலை காரணமாக நாளடைவில் தனது கார்சிகா விடுதலையைக் கைவிட்டுவிட்டார். பிரெஞ்சு அரசின் ஆதரவாளராக மாறினார். இதனால், அவருக்கு பிரெஞ்சு நாட்டில் இருந்து சலுகைகள் கிடைத்தன. ஆண்டுக்கு இரண்டாயிரம் பிராங்குகள் மன்னர் மான்யம் கிடைத்தது.

இதனைப் பயன்படுத்தி சார்லஸ் போனபார்ட் தனது இரு புதல்வர்களையும் அழைத்துக் கொண்டு பிரான்ஸ் சென்றார். அங்குப் பிரான்சு கவர்னர் மற்றும் மன்னரின் சிபாரிசில் தனது இரு புதல்வர்களையும் கல்விச் சாலையில் சேர்த்தார்.

மூத்த மகன் ஜோசப்பை மதகுருமார்கள் பள்ளியில் சேர்த்தார். அடுத்த மகன் நெப்போலியனை இராணுவப் பள்ளியில் சேர்ந்தார். அப்போது நெப்போலியனின் வயது பத்து. மாணவன் நெப்போலியன் கூச்ச சுபாவம் உள்ளவன். மற்ற மாணவர்களிடமிருந்து ஒதுங்கி தனிமையில் இருந்தான். நெப்போலியன் மற்ற பிள்ளைகளோடு விளையாடும் போது அவனிடம் தனித்தன்மை இருந்தது. வள்ளலார் கூறியதைப் போல் தனித்து இருந்தான். விழித்து இருந்தான், ஆனால் பசித்திருந்தான். என்ன பசி? புத்தகப் பசியாக இருந்தான். எப்போதும் புத்தகமும் கையுமாக இருந்தான். நிறைய புத்தகங்களை ஆழ்ந்து படித்தான். சரித்திரம், பூகோளம், கணிதம் ஆகியவற்றை அதிகம் படித்தான். படிக்கும்போது குறிப்பு எடுத்துக் கொள்வான். இந்தியா, எகிப்து, பிராமணர்கள், பிரமிட் போன்ற குறிப்புகள் எழுதி வைத்துள்ளான். வரலாற்று நூல்கள் அதிகம் படித்தான். பின்னாளில் வரலாறு படைக்கப்போகும் நெப்போலியன் வால்டேர், ரூசோ, மகாபிரடிரிக் செய்த போர்கள், பிரிட்டனின் வரலாறு, அலெக்சாண்டரின் நாட்குறிப்பு, பிளேட்டாவின் குடியரசு, புளூடார்க் ஆகிய நூல்களைப் படிப்பான். இளவயதில் நெப்போலியனின் பேச்சிலும், மூச்சிலும் வீரம் வெளிப்பட்டது. பெற்றோரும் மற்றோரும் கூறும் வீரர்களின் கதைகளைக் கேட்டுத் தன்னை மறந்து

மகிழ்ச்சி அடைவான். "இந்தப் பிள்ளை வெளிப்பார்வைக்கு ஒரு கிளிஞ்சல் போலிருப்பார். ஆனால் உள்ளுக்குள் ஓர் எரிமலையே பொங்கி வழிந்து கொண்டிருக்கிறது" என்று பள்ளி ஆசிரியர் நெப்போலியனைப் பற்றிக் கூறியுள்ளார். தனது மனதில் "பிரெஞ்சுக்காரர்களுக்கு அவர்களின் இடைவார் தான் சொந்தம். அதில் உறைந்திருக்கும் வாள் எனக்குத்தான் சொந்தம்" என்று வீரத்தை நம்பிக்கையை வளர்த்துக் கொண்டிருந்தான்.

மற்ற மாணவர்களைக் காட்டிலும் புத்தி கூர்மை உள்ளவனாகவும், அடிக்கடி தனிமையில் சிந்திப்பவனுமாக இருந்தான். சிறிய வயதிலேயே இத்தகைய நல்லியல்புகளுடன் தோன்றி வளர்ந்தான். விளையும் பயிர் முளையிலே தெரியுமல்லவா?

## 4. இலட்சியத்தில் உறுதி

இராணுவப் பள்ளியில் படித்துக் கொண்டிருந்த போதே நெப்போலியனின் இலட்சியம் இரத்தத்தில் வேரூன்றியிருந்தது. ராணுவப் பள்ளியில் சிறுவன் நெப்போலியன் தனக்கு என்று தோட்டத்தில் ஒதுக்கப்பட்ட இடத்தை கவனமுடன் பாதுகாத்து வந்தான். அந்த இடத்திற்கு வேலி போட்டு பாதுகாப்பு வளையம் அமைத்தான். யாரையும் தன் தோட்டத்தில் அனுமதிக்க மாட்டான். அவனிடம் அனுமதி வாங்கி அவன் தோட்டத்திற்குச் செல்வது கடினம். தன் தோட்டத்திற்குள் வேறு யாரும் வரக்கூடாது என்பான் மற்றப் பையன்களுடைய இடத்திலும் போய் வேலி போட்டு விடுவான். அவர்களது இடத்தில் உரிமை கொண்டாடுவான்.

சிறுவயதிலேயே ஆக்கிரமிப்பு எண்ணத்தை லட்சியமாகக் கொண்டான். எதிலும் முதலில் இருக்க வேண்டும் என்ற எண்ணம் அவனிடம் மேலோங்கி இருந்தது. தன் தந்தைக்கு எழுதிய ஒரு கடிதத்தில் "தொழிலாளர்களுக்குத் தலைவனாக இருப்பதையே எனது மனம் நாடும். கலைஞர்களின் கடைக்குட்டியாக இருந்து வால் பிடிப்பதை என் மனம் விரும்பாது" என்று எழுதியிருந்தான்.

"இந்தச் சிறுவன் கல் போன்ற உறுதியான உள்ளம் கொண்டவன். எரிமலை போன்ற வெடித்துச் சிதறும் உணர்ச்சிக் கொந்தளிப்புகள் உள்ளே இருப்பதை வெளியே காட்டிக்கொள்ளாமல் இருப்பதிலிருந்து இதனைத் தெரிந்து கொள்ளலாம்" என்று நெப்போலியனின் ஆசிரியர் கூறினார்.

காலத்தின் அருமையை உணர்ந்த நெப்போலியன் தனது இலட்சியம் நிறைவேறிட சில வினாடிகளையும் வீணாக்காமல் இளவயதிலேயே எல்லாக் கலைகளிலும் தேர்ச்சி பெற்று முதல் மாணவனாக திகழ்ந்தான்.

கல்லூரியில் படிக்கும்போது ஒருநாள் தன் தாய்க்கு ஒரு கடிதம் எழுதினான். இக்கடிதத்தில் அவனது நோக்கம் தெளிவாக தெரிந்தது.

"வாளின் துணை கொண்டும், ஹோமர் காவியத்தின் தெளிவாலும் இந்த உலகத்தை நான் ஆட்கொள்ளும் சக்தி படைத்தவனாவேன்" என்று அக்கடிதத்தில் தான் வாழ்நாள் நோக்கத்தை இலட்சியத்தைக் குறிப்பிட்டிருந்தான்.

தான் செல்லும் பாதையை நோக்கத்தைத் தெளிவாகச் சிறுவயதிலேயே வரையறுத்துக் கொண்டதால் தான் வெற்றிப்படியில் நெப்போலியனால் எளிதாக மேலே ஏற முடிந்தது.

# 5. கண்ணியமே போதும்

இராணுவப் பள்ளியில் பிரபுக்களின் குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்கள் அதிகம் படித்தனர். செல்வச் செழிப்புள்ள மாணவர்கள் எல்லோரும் ஆடிப்பாடி மகிழ்ச்சியாகப் பொழுதைக் கழித்தனர். அதிகம் வசதி உள்ள மாணவர்கள் மத்தியில், ஏழ்மை நிலையில் படித்துக் கொண்டிருந்த நெப்போலியன் பல அவமதிப்புகளுக்கும் கிண்டகளுக்கும் உள்ளானான். ஆனால் தனது குறிக்கோளில் உள்ளம் தளரவில்லை.

பிரெஞ்சு நாடு மிகவும் குளிர்ப்பிரதேசமாகும். இராணுவப் பள்ளியில் எல்லோரும் கோட் அணிந்து கொண்டிருப்பார்கள். நெப்போலியனின் கோட்டோ, முழங்கால் வரை நீண்டு அதுவும் பழைய கோட்டாக இருந்தது. நெப்போலியன் நல்ல கோட்டு உடுத்திக் கொள்ளாததைப் பார்த்து மற்ற மாணவர்கள் கேலிச்சிரிப்பு சிரித்தனர். நெப்போலியனின் கோட்டுக்களில் பணம் ஏதுமிருக்காது. அவனுக்கும் காசும் ஒரு பொருட்டல்ல. ஆனால் மற்ற மாணவர்களின் கோட் பையில் பணம் புரளும். இது குறித்து தனது தந்தைக்கு ஒருநாள் கடிதம் எழுதினான். அக்கடிதத்தில் பணம் அவர்களுக்குத் தேவை. எனக்குக் கண்ணியம் ஒன்றே போதும்" என்று எழுதியிருந்தான்.

பணம் மட்டும் இருந்தால் போதுமா? குணங்கள் வேண்டுமே? கண்ணியம், கடமை, கட்டுப்பாடு, ஒழுக்கம், நேர்மை, வீரம், உழைப்பு, உறுதி, பணிவு,

கனிவு, துணிவு, ஈகை, இரக்கம், அன்பு, உறுதி போன்ற பண்புகளின் உறைவிடமாக நெப்போலியன் திகழ்ந்தார்.

"ஒரு சொட்டுத் தேன்" 'கனிவான சொல்' ஆயிரக்கணக்கான ஈக்களை ஈர்க்கும். ஆனால் டன்டன்னாக விஷத்தை அடுக்கி வைத்தாலும் "கடுஞ்சொல்" ஒரு 'ஈ' கூட வாராது" என்று நெப்போலியன் கூறுவார்.

# 6. அவமதிப்பு

தனது ஏழ்மையின் காரணமாகக் குடும்பச் சூழ்நிலையின் காரணமாக இராணுவப் பள்ளியில் சிறுவன் நெப்போலியன் மற்ற மாணவர்களிடமிருந்து ஒதுங்கியே இருந்தான். ஆனால் அவனது உள்ளமே உறுதியையும் தன்னம்பிக்கையும் உயர் இலட்சியத்தையும் துணை கொண்டிருந்தது. இதனை உணராத மற்ற மாணவர்கள் நெப்போலியன் தட்டுத் தடுமாறி பேசும் பிரெஞ்சு மொழி பேசுவதை கேலி செய்தனர். பிரெஞ்சு நாட்டு சிறுவர்கள் கார்சிகா நாட்டுச் சிறுவனான நெப்போலியனிடம் மரியாதை குறைவாக நடந்தார்கள். கேலியும் கிண்டல்களையும் காட்டினார்கள். இகழ்ந்து பேசினார்கள். நெப்போலியனின் பொறுமை இதனை எல்லாம் சகித்துக் கொண்டது.

ஒருநாள் சக மாணவர் நெப்போலியனைப் பார்த்து "கார்சிக்காரர்கள் வீரம் நிறைந்தவர்களாயின் எங்களிடம் ஏன் தோல்வி அடைந்தீர்கள்?" என்று நையாண்டியாகவும் குத்தலாகவும் கேட்டான்.

"எண்ணிக்கை பலம் காரணமாக பிரெஞ்சுக்காரர்கள் எங்களை வெற்றிப் பெற்று விட்டார்கள். பத்து பேருக்கு ஒருவர் என்று நிலையில் கார்ச்சிகாரர்கள் பிரெஞ்சுக்காரர்களுடன் போர் புரிய வேண்டியிருந்தது. இதனால் பிரெஞ்சுக்காரர்கள் வெற்றி பெற்றுவிட்டனர். பொறுத்திருந்து பார். பிரெஞ்சுக்காரர்களை என்ன பாடு படுத்துகிறேன்" என்று ஆவேசமாக அதே நேரத்தில் உறுதியுடன் பதிலுரைத்தான் நெப்போலியன்.

பொறுத்தார் பூமியாள்வார். தனக்கு ஏற்பட்ட அவமதிப்புகளைத் தாங்கிக் கொண்ட நெப்போலியன் உள்ளத்திலே உறுதியை வளர்த்துக் கொண்டான்.

## 7. பிராயச் சித்தம்

நெப்போலியன் பிரெய்ன் நகரத்தின் இராணுவக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தான். குடும்பத்தின் வறுமை ஒருபுறம் பிரெஞ்சு மொழி தெரியாமல் கிதாள மொழியில் பேசும் சிரமம் ஒருபுறம். இதனால் சக மாணவர்களின் இழிவான பேச்சுக்கள். ஆனால் சிறுவன் நெப்போலியன் இதனையெல்லாம் பொருட்படுத்தவில்லை. தன்னுடைய படிப்பில் கவனம் செலுத்தி வந்தான். தனது நோக்கத்தில் தெளிவாக இருந்தான்.

1784 ஆம் ஆண்டு மழைக்காலம். பனி மழைகள் புல்வெளியில் உறைந்து கிடந்தன. மாணவர்கள் எவரும் வெளியில் சென்று விளையாட முடியவில்லை. சிறுவன் நெப்போலியன் மட்டும் தன் நண்பர்களுடன்

துணிச்சலுடன் வெளியே வந்து பனிக்கட்டியில் ஒரு அரண்மனை கட்டினான். இதன் அழகைக் காண ஊர் மக்கள் கூட்டம் கூட்டமாக வந்தனர். நெப்போலியனுக்கு மகிழ்ச்சியுடன் உற்சாக ஊற்றும் ஊற்றெடுத்தது.

மக்கள் பார்த்து கவரும் வண்ணம் உடனடியாக ஒரு நாடகக் காட்சியை உருவாக்கினான். தன் நண்பர்களை இரண்டு பிரிவாகப் பிரித்தான். தன்னுடைய கோட்டையைத் தாக்க ஒரு பிரிவு. மற்றொரு பிரிவு கோட்டையைக் காக்க வேண்டும் என்பது நாடகத்தின் கதை. இக்காட்சிகளை நெப்போலியன் நண்பர்களுக்கு விவரித்துக் கொண்டிருந்தான். அதில் ஒரு மாணவன் நெப்போலியனுக்குக் கீழ்ப்படியவில்லை. சினமுற்ற நெப்போலியன் அவனை ஓங்கி அறைந்து விட்டான். அடி காயமாகி விட்டது. அவனுக்கு நெற்றியில் நிலையான தழும்பாகவும் மாறிவிட்டது. இதனால் நெப்போலியன் மிகவும் மன வேதனையடைந்தான்.

வாழ்விலும் தாழ்விலும் நட்பினை மறக்காமல் இருக்கும் உயர் பண்புடையவன் நெப்போலியன். உயர் நிலையிலும் தன் முன் நிலை மறந்து விடாத பண்பு எக்காலத்தும் மாறுபடாமல், தளராமல் நண்பனைத் தாங்குவதே நட்பிற்கு அரசிருக்கையாகும் என்ற வள்ளுவரின் கருத்தைக் கொள்கையாகக் கொண்டவன் நெப்போலியன்.

நெற்றித் தழும்புடன் அந்தப் பழைய பள்ளி மாணவன் பிரான்ஸ் நாட்டின் சக்ரவர்த்தி நெப்போலியனைப் பார்க்க வந்தான். தன்னுடைய வறுமையினை நெப்போலியனிடம் கூறினான். நெப்போலியன் அவன் நெற்றியின் தழும்பைப் பாச

உணர்வுடன் தோழமை உணர்வுடன் தடவிப் பார்த்தான். கடையெழு வள்ளல்களைப் போல் பள்ளித் தோழனின் வறுமையைப் போக்கினான். தன் பள்ளித் தோழனுக்கு இராணுவத்தில் உயர் பதவி வழங்கினான். தன் இளமைக்கால கோபத்தின் தழும்புக்குப் பிராய்ச்சித்தம் செய்தான். நட்பின் இலக்கணத்திற்கு வரலாறு படைத்தான். இது தான் நெப்போலியனின் மாண்பு.

## 8. செய்நன்றி

நெப்போலியன் அப்போது இராணுவக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தான். கல்லூரி வாசலிலே பாட்டி ஒருத்தி பழக்கடை வைத்திருந்தாள். பணக்கார மாணவர்கள் பாட்டியிடம் ஆப்பிள், ப்ளம் போன்ற பழங்களை வாங்கிச் சாப்பிடுவார்கள். பாட்டியின் ஏழ்மையையும் கிண்டலடிப்பார்கள். நெப்போலியனும் பாட்டியிடம் காசு இருக்கும் போது பழங்கள் வாங்கிச் சாப்பிடுவான்.

எப்போதாவது தனது பழக்கடையில் பழம் வாங்கிச் சாப்பிடும் நெப்போலியனின் பண்பு, தோற்றம், ஏழ்மை மூன்றும் பாட்டிக்குப் பிடித்துவிட்டது. கையில் காசு இல்லாததால்தான் நெப்போலியன் தினமும் கடைக்கு வருவதில்லை என்று உணர்ந்தாள்.

“தம்பி நீ தினமும் என்னிடம் வந்து பழங்களை வாங்கிக் கொள்” என்றாள் பாட்டி. “எதையும் இலவசமாகவோ, கடனாகவோ, பெற்றுக் கொள்வதில்லை” என்று மறுத்துவிட்டான் சிறுவன் நெப்போலியன்.

நெப்போலியனின் குணங்களும், பண்புகளும் பாட்டியை ஆச்சரியப்படுத்தி விட்டன. "தம்பி, நான் முதியவள், பெரியவள், நான் சொல்வதைக் கேள்! பழங்களுக்கு எப்படியும் நீ காசுகொடுத்துவிடுவாய். தயவு செய்து பாட்டி சொல்லைத் தட்டாமல் தினமும் பழங்கள் வாங்கிச் சாப்பிடு. எனக்கு இது மன நிறைவைத் தரும்" என்றாள்.

நெப்போலியனும் பாட்டியின் அன்பில், உறவில் திளைத்துப்போய் தினமும் பழங்கள் சாப்பிட்டு வந்தான்.

ப்ரெய்ன் இராணுவக் கல்லூரி படிப்பை முடித்தவுடன் பாட்டியிடம் விடைபெற்றுச் சென்றான் நெப்போலியன். "பாட்டி பயிற்சி முடிந்துவிட்டது. பாரிசுக்குப் போய் வருகிறேன். உனக்குக் கொஞ்சம் கடன் தரணும். கையில் காசில்லை" என்றான்.

"மாவீரனாகப் போய் வா தம்பி. வாழ்க்கையில் முன்னேறு" என்று வாழ்த்தி கண்ணீர்மல்க பாட்டி விடைகொடுத்தாள். பாட்டியை இனி பார்க்க முடியாத வேதனையால் நெப்போலியனின் கண்களும் குளங்களாயின.

ஒரு நாள் பாட்டியின் பழக்கடை முன்பு சக்ரவர்த்தி நெப்போலியன் படை சூழ நின்றான். பாட்டி அரசரைப் பார்த்து நடுங்கினாள். பாட்டிக்குச் சக்ரவர்த்தி நெப்போலியனைத் தெரியவில்லை.

"உன் கடன்காரன் வந்திருக்கிறேன் பாட்டி" தன்னுடைய கடன் பாக்கியைப் பாட்டியிடம் கொடுத்தான். பாட்டி உற்றுப் பார்த்தாள். புரிந்து கொண்டாள். வறுமை நிலைமையிலும் நல்ல பழங்களாக

இரண்டு எடுத்துக் கொடுத்தாள். பாட்டியினைக் கட்டி அணைத்து முத்தமிட்டான் நெப்போலியன். ஒரு பணமுடிப்பைத் தந்து பாட்டியின் வறுமையை நீக்கினான்.

"இன்னும் ஏதாவது வேண்டுமா?" என்று பாட்டியிடம் கேட்டான் நெப்போலியன்.

எதிரே உள்ள இராணுவக் கல்லூரியில் தன் பேரனைப் படிக்க வைக்க உதவி கேட்டாள். பாட்டியின் கோரிக்கையை நிறைவேற்றினார். இறக்கும் வரையில் பாட்டிக்கு ஓய்வு கால ஊதியம் வழங்கினார். கல்வி, ஏழைக்கும் வேண்டும் என்ற காமராஜரின் கனவை அன்றே செயல்படுத்தினான் நெப்போலியன்.

**"காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும்**
**ஞாலத்தின் மாணப் பெரிது"**

"நன்றி" என்ற சொல்லுக்கு வரலாறு படைத்தவன் மாவீரன்.

# 9. நெப்போலியனின் கணக்கு

நெப்போலியன் தன் 15 வயதுவரை பாரிஸ் நகரின் இராணுவக் கல்லூரியில் படித்து வந்தான். கல்லூரியில் 300 மாணவர்களில் நெப்போலியனும் ஒருவன். கல்லூரி மாணவர்கள் ஆடம்பர வாழ்க்கையில் படித்து வந்தனர். நெப்போலியனோ கருமமே கண்ணாக இலட்சியத்தை எய்தும் படிப்பாக வெறியாக படித்துக் கொண்டிருந்தான். மாணவன் நெப்போலியன் நேரத்தை வீணடிக்க மாட்டான். படிப்பில்தான் கவனம்

செலுத்துவான். இராணுவ வீரன் கல்லூரி தரும் ஆடம்பர வாழ்க்கையை விரும்ப மாட்டான்.

ஒரு சமயம் வகுப்பில் கடினமான கணக்கு ஒன்று தரப்பட்டது. எவருக்கும் விடை கண்டுபிடிக்கமுடிய வில்லை. எல்லோரும் ஓய்ந்து விட்டனர். மாணவன் நெப்போலியன் மனம் தளரவில்லை. விடாமுயற்சியும், அயராத உழைப்பும் அவனைக் கணக்கிற்கு விடை காண முற்பட்டது. சோம்பலை வெற்றிக் கொண்ட நெப்போலியனிடம், கணக்கும் நிமிட நேரம் நடுங்கிக் கொண்டுத்தான் இருந்தது. "எப்படியும் கணக்கிற்கு விடை இருந்து தானே ஆக வேண்டும்" என்று நெப்போலியன் முயற்சி செய்தான். 72 மணி நேர கடும் முயற்சிக்குப் பிறகு விடை கண்டுபிடித்தான்.

ஓய்வின்றி உழைப்பவர் விதியை வெல்லலாம் என்பார் திருவள்ளுவர். முயற்சி திருவினையாக்கு மல்லவா? முயற்சி என்றால் சாதாரண முயற்சியா? மற்ற மாணவர்கள் எல்லாம் ஓய்ந்து உட்கார்ந்த போதும், 72 மணி நேரம் பசி நோக்காமல் கண் தூங்காமல் மெய் வருத்தம் பாராமல் இருந்து உழைத்த உழைப்பல்லவா? நெப்போலியனின் மன உறுதியையும் தளராத போராட்டக் குணத்தையும் வெற்றியடைய வேண்டும் என்ற இலட்சியக் குணத்தையும் உலகுக்கு பறை சாற்றும் கணக்கின் விடைதான் அன்று நெப்போலியன் கண்டுபிடித்தது. கணித மேதை இராமானுஜரும் இப்படித்தான் யாருக்கும் தெரியாத கணக்குப் புதிர்களை எல்லாம் அவிழ்த்து விடுவாராம்.

இந்த கணக்கு விடையை **நெப்போலியன் கணக்கு** வரலாற்று அறிஞர்கள் போற்றி வருகின்றனர்.

# 10. சிக்கனம்

15 வயதில் இராணுவப் பயிற்சியை முடித்தான் நெப்போலியன். ஒரு ஆண்டுகாலம் இராணுவ வீரனாகப் பணியாற்றினார். நெப்போலியன் திறமையும் ஊக்கமும் பதினாறாவது வயதில் "லெப்டினெண்ட்" ஆக பதவி உயர்வு வாங்கிக் கொடுத்தது. இராணுவப் பள்ளியில் படிக்கும் போது வறுமையில் இருந்தபோது கடைபிடித்த சிக்கனத்தை "லெப்டினெண்ட்" ஆக மாறிய பின்பும் கடைபிடித்தான்.

தனது தந்தையார் இறந்த செய்தி கேட்டு தாய் ரமோலிக்கும் சகோதரர் ஜோசப்பிற்கும் ஆறுதல் கூறி கடிதங்களை எழுதினார். தந்தையற்ற தனது குடும்பத்தில் உள்ள தம்பி, தங்கைகள் அனைவரையும் வளர்ப்பதற்கு உதவி புரிந்தான். இதனால் மேலும் அதிக சிக்கனத்தைக் கடைப்பிடித்தான். தனது குடும்பத்திற்காக தனது இன்பதுன்பங்களைத் தியாகம் செய்தான். தன்னைப் போன்ற இராணுவ அதிகாரிகள் ஆடம்பரமும் உல்லாசமுமாக மது அருந்தி, மங்கையர்களை நாடி இருப்பதைக் கண்டு கொள்வதில்லை. அவர்களை **"முன்னேற்றத் தெரியாத அப்பாவிகள்"** என்று தனது நாட்குறிப்பில் எழுதி வைத்துள்ளான். செய்யும் தொழிலைத் தெய்வமாகக் கருதினான்.

இந்நிலைமையில் நெப்போலியனை இத்தாலி நாட்டின் எல்லையோரம் உள்ள வேலன்ஸ் நகருக்கு பணி மாற்றினார்கள். இது சுமார் 640 கிலோ மீட்டர் தூரமாகும். சிக்கனம் கருதிய நெப்போலியன் இந்தத் தூரத்தை நடந்தே கடந்தார்.

தந்தைக்கு மகன் ஆற்ற வேண்டி கடமைகளாக, தந்தைக்குப் பின் குடும்பத்தைக் காப்பாற்றினார். குடும்ப வறுமையைச் சிக்கனத்தின் மூலம் விரட்டினார். இந்தச் சிக்கனமே பிரெஞ்சு நாட்டின் சக்ரவர்த்தியாக இருந்த போதும் கடைபிடித்தார்.

அவரது அவைப் பிரமுகர்கள் ஆடம்பர உடை அணிந்திருந்த போதும் சக்ரவர்த்தி நெப்போலியன் சாதாரண எளிமையான ஆடைகளைத் தான் அணிவார். முக்கிய நிகழ்ச்சிகளுக்கும் மட்டும் பட்டாடைகள் அணிவார். நைலான் ஆடைகளை வழக்கமாக அணிவார். பொடிபோடும் வழக்கமுள்ளவர். அந்தப் பொடி டப்பா கூட ஆடம்பரமில்லாமல் சிறு குழந்தையின் விளையாட்டுப் பொம்மை போல் இருந்தது. ஆடம்பரச் செலவுகளை **முட்டாள் தனமான செலவுகள்** என்று எப்போதும் கண்டிப்பார்.

# 11. கோஷாப் பெண்ணா

நெப்போலியன் போர் வீரனாக இருந்தபோது ஒரு ஊரில் படைகள் முகாமிட்டு இருந்தன. ஒரு நாள் பகற்பொழுதில் பாசறையில் இராணுவ வீரர்கள் விளையாட்டிலும், பாட்டிலும், வேடிக்கையிலும் தங்கள் ஓய்வு நேரத்தைச் செலவிட்டுக் கொண்டிருந்தனர். ஆனால் படைவீரன் நெப்போலியன் மட்டும் பொழுதை வீணாக்காமல் முகாமுக்குள்ளே புத்தகங்களைப் படித்துக் கொண்டு இருந்தான்.

இதனைத் தற்செயலாக அந்தப்பக்கம் வந்த ஊர் பெண்ணொருத்தி கவனித்துக் கொண்டிருந்தாள். ஒரு

நாள் நெப்போலியனிடம் சென்று "மற்ற வீரர்கள் எல்லாம் ஓய்வு நேரத்தைச் சிரித்து மகிழ்ச்சியாகக் கொண்டாடிக் கொண்டிருக்க, நீ மட்டும் எப்போதும் முகாமிலே அடைந்து கிடக்கிறாயே? **நீ என்ன கோஷாப் பெண்ணா?"** என்று ஏளனமாகக் கேட்டாள். நெப்போலியன் ஒன்றும் பேசவில்லை. சற்று நேரம் நின்று பார்த்துவிட்டு உதட்டைப் பிதுக்கிக் கொண்டு சென்று விட்டாள்.

12 ஆண்டுகள் கழித்து சக்ரவர்த்தி நெப்போலியன் தன் படைகளுடன் முன்பு முகாமிட்ட அதே இடத்தில் தங்கினார். பழைய நிகழ்ச்சி அவர் நினைவுக்கு வந்தது.

முன்னொரு சமயம் "கோஷாப் பெண்ணா? என்று கேட்ட பெண்மணியை நெப்போலியன் சந்திக்க நேரிட்டது அவளை அணுகி "அம்மா என்னை நினைவிருக்கிறதா?" என்று கேட்டார். அந்தப் பெண் அவனை ஏறிட்டுப் பார்த்து பேசாமலிருந்தாள்.

அன்றொரு நாள் இதே இடத்தில் நான் புத்தகங்களைப் படித்துக் கொண்டிருந்தபோது "கோஷாப் பெண்ணா?" என்று கேட்டீர்களே அந்தக் கோஷாப் பெண் நான் தான்" என்றார்.

மற்ற வீரர்களைப் போல அன்று விளையாட்டிலும், கேளிக்கையிலும், வேடிக்கையிலும் ஈடுபட்டிருந்தால் இன்று ஒரு சாதாரண போர் வீரனாகத் தான் இருந்திருப்பேன். முன்னோடிப் புத்தகங்களைப் படித்துச் செயல்படுத்தியதனால் தான் இன்று சக்ரவர்த்தியாக உங்கள் முன் நிற்கிறேன்" என்றார்.

நெப்போலியன் நினைவாற்றலையும், புத்திக் கூர்மையையும், சமயோகித புத்திசாலித்தனத்தையும் கண்டு அந்தப் பெண் பாராட்டிச் சென்றாள்.

# 12. இடுக்கண் களையும் நட்பு

நெப்போலியன் தனது உழைப்பால் உயர்ந்தவன். 16 வயதில் பீரங்கிப்படை அதிகாரியானான். அவனது வெற்றிக்கனவைக்கண்டு பிரான்ஸ் நாடே புகழ்ந்தது.அவனது புகழைக் கண்டு பொறுக்க முடியாதவர்களின் சூழ்ச்சியால் இராணுவ அதிகாரிகளின் பொறாமைக்கு ஆளானார் நெப்போலியன். பொறாமைக்காரர்களால் பீரங்கிப் படையிலிருந்து நெப்போலியன் காலாட் படைக்கு மாற்றப்பட்டார். தன்மானம்தான் வீரனுக்கு அழகு. நெப்போலியன் இராணுவத்திலிருந்து நீங்கி, வேறு வேலை தேடினார்.

குடும்பத்தில் வறுமை. வறுமை வந்தபோதும் மனம் தளராத நெப்போலியன் எப்போதும் தனது கொள்கையில் இலட்சியத்தில் உறுதியாக இருந்தார். இந்தச் சூழ்நிலையில் ஒரு நாள் ஆற்றங்கரையில் தனியே உலவிக்கொண்டிருந்தார். அந்த வழியே தனது நண்பன் தன்னையே கவனித்துக் கொண்டிருப்பதைப் பார்த்துத் திடுக்கிட்டார். அகத்தின் அழகை நெப்போலியன் முகத்தில் கண்டுபிடித்தான் அந்த நண்பன். தனக்கு ஒன்றும் மனச்சோர்வு இல்லையென்று நடித்தார் நெப்போலியன். உண்மையான நட்பு இடுக்கண் களைவதுதானே? “கொடிது கொடிது இளமையில் வறுமை கொடிது” என்று தெரியாமலா சொல்லி வைத்தார் ஔவையார்.

**உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே**
**இடுக்கண் களைவதாம் நட்பு.**

நெப்போலியன் வறுமையைத் துடைக்கதானே வலிய போய் தன்னிடமிருந்த 6000 டாலர்களைக் கொடுத்தான் நண்பன். உலகத்தை விட பெரியது காலத்தினால் செய்த உதவியல்லவா?

காலங்கள் ஆண்டுகள் உருண்டோடின. 15 ஆண்டுகள் கழித்து நெப்போலியன் அந்த நண்பனைச் தற்செயலாகச் சந்தித்தார். செய்த உதவியை மறந்திருந்தான் நண்பன். 6000 டாலர்களை வட்டியும் முதலுமாகக் கொடுத்தான். இது மட்டுமல்ல அவனது குடும்ப வறுமையைப் போக்க நிரந்தரமாக அவனுக்கு நல்ல வருவாயுள்ள வேலைக்கு ஏற்பாடு செய்தான்.

“தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்தெரி வார்”

என்ற குறள் வாக்குக்கு நெப்போலியன் வாழ்க்கை உதாரணமாயிற்று.

செய்நன்றி மறந்தவர்க்கு உய்வில்லை என்பதை உலகத்தவருக்கு எடுத்துக்காட்டினார். வறுமையில் நேர்மை, கொள்கைப் பிடிப்பு, செய்நன்றி அறிதல் போன்ற குணங்கள் மாவீரனுக்கு இயல்பாக அமைந்த குணங்கள் ஆகும். அதனால்தான் அவன் புகழ் இன்றும் வாழ்ந்து வருகிறது. வீரமும் விவேகமும் மட்டுமல்ல உயர்ந்த குணங்களும் நெப்போலியனை வரலாற்று நாயகனாக்கியதில் வியப்பேதுமில்லை.

தான் வாழ்ந்து இறந்து விட்டபோதும் நூற்றாண்டுகள் கடந்தும் உலகக் குன்றில் இட்ட விளக்காக, புகழ் வானில் குன்றாத புகழோடு வாழ்ந்து வருகிறார் நெப்போலியன்.

# 13. பொறுமை

**வே**லன்ஸ் நகரத்தில் இராணுவ முகாமில் லெப்டினெட் நெப்போலியன், ஓய்வு நேரங்களில் புத்தங்கள் படிப்பதில் அதிகம் கவனம் செலுத்தினார். கூர்ந்து ஆழ்ந்து படிப்பதில் நெப்போலியன் சுவாமி விவேகானந்தரைப் போல் நுண்ணறிவு கொண்டவராக இருந்தார். மேல் எழுந்தவாரியாக எதையும் படிக்க மாட்டார். எகிப்தில் இருக்கும் பிரமிட்களின் பெயர்கள், அவை ஒவ்வொன்றின் உயரம் எல்லாம் அவரது மூளையில் பதிந்திருந்தது.

இராணுவ முகாமில், நெப்போலியனின் அடுத்த அறையில் "பில்லார்ட்" என்னும் மேசைப் பந்து விளையாட்டு நடைபெறும். இளம் இராணுவ வீரர்கள் கூட்டமாகக் கூடி விளையாட்டை நின்று இரசிப்பார்கள். அடிக்கடி கைதட்டி ஆரவாரம் செய்வார்கள். பக்கத்து அறையில் புத்தகங்கள் படித்துக் கொண்டு இருக்கும் நெப்போலியனுக்கு இடையூறாக இருக்கும். ஆனால் பொறுமை என்ற ஆடையை எப்போதும் அணிந்து கொள்வார். உடன் பணிபுரியும் வீரர்கள் நெப்போலியனிடம் அன்பு பாராட்டினாலும் அவர்கள் உள்ளத்தில் "பொறாமைத் தீ" எரிந்து கொண்டிருந்தது.

"கார்சிக்காரன்" என்றும் பேசிக் கொள்வார்கள். இத்தகைய பொறாமையை நெப்போலியன் அலட்சியம் செய்துவிடுவார். அகழ்வாரைத் தாங்கும் நிலம் போலத் தம்மை இகழ்வாரைப் பொறுத்தல் நெப்போலியனின் பண்பு. ஒருவர் வளர்ச்சியைக் கண்டு பொறுக்க முடியாதவர்களின் ஏக்கப் பார்வைதான் பொறாமை என்பது அவருக்கு நன்கு தெரியும்.

ஒரு நாள் உணவு விடுதிக்குச் சென்று மேசை மீது நெப்போலியன் அமர்ந்தார். அந்த மேசையின் முன் மற்றொரு நாற்காலியில் தாமஸ் என்ற வீரன் உட்கார்ந்திருந்தான். அவனருகில் தான் நெப்போலியன் உட்கார்ந்திருந்தார். உடனே வேகமாக தன் இருக்கையிலிருந்து தாமஸ் எழுந்தான். "கார்சிகா நாட்டு அதிகாரியுடன் நான் ஒன்றாகச் சேர்ந்து சாப்பிட மாட்டேன்" என்ற ஆவேசக் குரலில் தாமஸ் சத்தமிட்டான். பொறுமையின் சின்னமான நெப்போலியன் இந்த அவமதிப்பை சகித்துக் கொண்டார். இந்தப் பொறுமைக்குக் கிடைத்த பரிசு என்ன தெரியுமா?

பிற்காலத்தில் மாவீரன் நெப்போலியன் படைத்தளபதிகளில் தாமஸ் ஒருவனாக இருந்தான். ரஷ்யபடையெடுப்பின் போது, நெப்போலியனை வரவேற்ற படைத்தளபதி தாமஸிடன் "அன்று என்னை அவமதித்தாய் இன்று என் விசுவாசமிக்க படைத்தளபதிகளில் ஒருவனாக உள்ளாய்" என்று தட்டிக் கொடுத்தார் நெப்போலியன்.

## 14. முதல் விழுப்புண்

**பி**ரெஞ்சு நாட்டில் அப்போது குடியரசு நடத்திய தேசீய சபைக்குத் திடீரென பெரிய சோதனை ஏற்பட்டது. பிரான்ஸ் நாட்டைக் கைப்பற்ற பிரிட்டன் பெரிய கப்பலை அனுப்பியது. நாட்டின் தேசீய சபை திக்குமுக்காடியது. பிரிட்டனை எதிர்க்க இராணுவத்தில் சேர மக்களுக்கு அழைப்பு அனுப்பப்பட்டது.

அப்போது நெப்போலியன் இராணுவத்தில் காமாண்டராகப் பணிபுரிந்தார். தேசீய சபை அவருக்குக் காப்டனாகப் பதவி உயர்வு கொடுத்து பிரிட்டிஷ் கடற்படையை எதிர்க்க உத்தரவிட்டனர். அப்போது நெப்போலியனுக்கு வயது 24.

முதலில் நெப்போலியன் தமது இராணுவ வீரர்களிடம் ஒற்றுமையும் கட்டுப்பாடையும் ஏற்படுத்தினார். டவ்லான் துறைமுகத்தில் பிரிட்டிஷ் கடற்படையை நெப்போலியனின் தலைமையில் பிரெஞ்சு படை எதிர்த்தது. எதிரிகளில் தாக்குதலை குதிரை மீது அமர்ந்தவாறே சமாளித்தார். கடும் சண்டை நடைபெற்றது. நெப்போலியனை நோக்கி ஆங்கிலேயே வீரர்கள் சுட்டனர். ஒரு குண்டு அவர் குதிரை மீது பாய்ந்து குதிரை கீழே சாய்ந்தது. கீழே விழந்து கிடந்த நெப்போலியன் மீது பிரிட்டிஷ் வீரன் ஒருவன் ஈட்டியை வீசினான். நெப்போலியனின் இடது புயத்தில் ஈட்டி பாய்ந்தது.

போரில் நெப்போலியனுக்கு ஏற்பட்ட முதல் விழுப்புண் இதுவே ஆகும். அவரது வாழ்நாளில் கடைசி காயமும் அதுதான். போரில் ஏராளமான பிரிட்டிஷ் வீரர்கள் கொல்லப்பட்டனர். நெப்போலியனின் போர்களச் செய்திகள் ஒவ்வொன்றும் நம்மை வியப்பில் ஆழ்த்தக் கூடியன. அந்த முறையில் டவ்லான் போரில் நெப்போலியன் தலைமையில் பிரெஞ்சு ராணுவம் மிகப் பெரிய வெற்றியைப் பெற்றது. நாடெங்கும் வெற்றிவிழா கொண்டாடப்பட்டது. நெப்போலியன் புகழ் பிரெஞ்சு நாட்டு மக்களின் இதயத்தில் பதிந்தது.

'தங்கச் சாவியைப் பயன்படுத்துதல்' அதாவது எல்லாத் திறமைகளையும் ஒழுங்குபடுத்தி காண்பது நெப்போலியனுக்குக் கை வந்த கலையாக இருந்தது.

# 15. அறுவை சிகிச்சை

நெப்போலியன் தளபதியாகப் பதவி உயர்வு பெற்று ஆங்கிலேயருடன் மோதிய முதல் போரில் மாபெரும் வெற்றி அடைந்தார். அப்போரின் போது அவருக்கு இடது புயத்தில் காயம் ஏற்பட்டது. அக்காயத்திற்கு அறுவை சிகிச்சை நடைபெற்றுக் கொண்டிருந்தது. அப்போது டாக்டரை நோக்கி நெப்போலியன் "எனது மார்பில் உங்கள் கத்தியை இன்னும் ஒரு அங்குலம் உள்ளே செலுத்திப் பார்த்தீர்களானால் அங்கு பிரெஞ்சுப் பேரரசை பார்ப்பீர்கள்" என்று கூறினார். அறுவை சிகிச்சை செய்த டாக்டர்கள் அனைவரும் நெப்போலியனின் வீரத்தையும் தாய்நாட்டுப் பற்றையும் வியந்து போற்றினார்கள்.

நாட்டுப் பற்றையே தன் மூச்சாகவும், பேச்சாகவும் கொண்டு வாழ்ந்தவர் நெப்போலியன். வரலாற்றில் மக்களின் அறியாமையை ஒழித்து தாய்நாடு என்றால் தன் உடலில் உள்ள ஒவ்வொரு சொட்டு இரத்தமும் துள்ளும் வண்ணம் அம்மக்களை உருவாக்கி நாட்டு மக்களிடம் தாய்நாட்டுப் பற்றை வளர்த்தார்.

புரட்சி, ராணுவம், நாட்டுப்பற்று, போர் செய்தல், வெற்றி, தோல்வி, சிறந்த நிர்வாகம் ஆகிய யாவற்றிலும் தன் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்து பிரான்ஸ் நாட்டுப் பெருமையை அதன் விதியை நிர்ணயித்த பெரும்பங்கு நெப்போலியனைச் சேரும்.

'நாடு உனக்கு என்ன செய்தது என்று எண்ணாதே, நாட்டிற்காக நீ என்ன செய்தாய்?' என்று கென்னடி கேட்டதை அன்றே செயல்படுத்தினார் நெப்போலியன்.

பிரிட்டிஷ் படையை எதிர்த்து தன்னத்தனியாகப் போரிட்ட ஜான்ஆப் ஆர்க் தோன்றிய பிரெஞ்சு பூமியில், அவரின் வாரிசாக நெப்போலியன் தோன்றினார் என்று கூறினால் அது மிகையாகாது.

# 16. பிறர் துயர் துடைப்பவன்

அப்போது நெப்போலியன் பாரிஸ் படையில் தளபதியாக இருந்தார். நாட்டில் குழப்பங்களும், பசியும் வறுமையும் சூழ்ந்து கொண்டிருந்தது. நாடெங்கும் வறுமையும், ஏழ்மையும் குடிகொண்டிருந்தது. செல்வந்தர்கள் பணத்தையும் பொன்னையும் எடுத்துக் கொண்டு அயல் நாட்டிற்குச் சென்று விட்டனர். இத்தகைய சூழலில் நாட்டில் குழப்பத்தை அடக்கினார் தளபதி.

ஒரு நாள் நண்பனின் விருந்துக்குச் சென்றார் நெப்போலியன். நண்பன் வீட்டுக்கு முன்பாக தன் வண்டியிலிருந்து இறங்கினார். கையில் இறந்த குழந்தையுடன் வறுமையினை ஆடையாக அணிந்து கொண்டு ஒரு பெண் ஓடோடி நெப்போலியன் முன் நின்றாள். நெப்போலியன் விசாரித்தார்.

"பல நாட்கள் உண்ண உணவில்லை. வீட்டில் மக்கள் ஒவ்வொருவராகச் செத்துக் கொண்டிருக்

கின்றனர். தற்கொலை செய்து கொள்வதைத் தவிர வேறு வழியில்லை" என்று கதறினாள் ஏழைப்பெண்.

நெப்போலியனின் இதயமும் அவள் கண்ணீருடன் சேர்த்து கண்ணீர் வடித்தது. அவள் குடும்ப நிலைமையை நேரில் அறிந்து வரச் செய்தார்.

ஏழைப் பெண்ணின் குடும்பத்திற்கு வாழும் வழிகளைத் தேடித்தந்தார். **"மீனைக் கொடுப்பதை விட மீன் பிடிக்கக் கற்றுக் கொடு"** என்பது சீனப் பழமொழி. ஏழைப் பெண்ணின் வீட்டில் இருந்த பெண்களைத் தன் நண்பர்கள் வீடுகளில் வேலைக்கு அமர்த்தினார்.

வறுமையில் தற்கொலை செய்து கொள்ளும் ஒரு குடும்பத்தை மட்டும் நெப்போலியன் காப்பாற்ற வில்லை. பல குடும்பங்களைக் காப்பாற்றினார். வீரனின் இதயம் மிகவும் அன்பானது. அருள் சுரப்பது. தனக்குள் இருக்கும் ஆற்றலைக் கொண்டு பலரை வாழவைத்ததில் அவருக்குப் பெருமை சேர்ந்தது.

தன்னலத்தைத் துறந்தவர் நெப்போலியன். பிறர் நலம் வேண்டுபவர். வறுமையைக் காணச் சகிக்காதவர். ஏழ்மையை அகற்றும் பண்புள்ளவர். நாம் மட்டும் வாழ்ந்தால் பயனேது? எல்லோரையும் வாழ வைக்கும் பண்புதான் உயர்ந்தது.

இத்தகைய உயர்ந்த பண்பு, மனிதராகிய ஒவ்வொருவரும் பின்பற்றி நடக்க வேண்டிய அருங்குணமாகும்.

# 17. வீரத்தைப் போற்றுதல்

**த**ளபதி நெப்போலியன் பாரீஸ் நகரத்தின் கலகத்தை அடக்கிக் கொண்டிருந்தார். கலகக்காரர்கள் பிரபுக்களை எல்லாம் கொலை செய்தனர். அவ்வாறு கொலை செய்யப்பட்ட ஒரு பிரபுவின் மகன் யூஜன். 12 வயது. கலகத்தை அடக்க, நாட்டில் உள்ளவர்களின் வாளினை எல்லாம் கைப்பற்ற உத்தவிட்டார் நெப்போலியன். யூஜன் வீட்டிலிருந்து வாளினையும் பறிமுதல் செய்து விட்டனர். தன் தந்தையின் நினைவாக வாளினைப் பாதுகாத்து வந்தான் யூஜன். எவ்வளவோ போராடியும் வாளினை வீரர்கள் கைப்பற்றி விட்டனர்.

புலிக்குப் பிறந்தது பூனை ஆகுமா? வீரப்பிரபுவின் மகன் யூஜன், புலியை அதன் குகையிலேயே சந்தித்தான். ஆம்! நெப்போலியன் முன் யூஜன் நின்றான். தன் தந்தையின் நினைவாகப் போற்றிய எங்கள் வாள்களைக் கைப்பற்றி விட்டனர் என்றான் வெறுப்புடன். "நாட்டின் கலகக்காரர்களை அடக்கும்போது சட்டம் எல்லோருக்கும் பொதுதான்" என்றார் நெப்போலியன்.

சிறுவன் விடவில்லை. என் உயிரினும் மேலாக தந்தையின் நினைவாக அந்த வாளைப் பாதுகாக்கிறேன். தன் விதவைத் தாயும் கணவன் நினைவாக வாளினைப் போற்றி பாதுகாத்து வருகிறாள். இந்த வாளினால் நாட்டிற்கு எந்தக் கெடுதலும் வராது என்று உறுதியளித்தான்.

சிறுவனின் துணிவையும், தந்தையின் மீது கொண்ட பாசத்தையும் தாயின் மீது கொண்டுள்ள

அன்பையும் சொல்வன்மையைக் கண்டு இரங்கினார் நெப்போலியன். வாளினைத் திருப்பிக் கொடுக்க உத்திரவிட்டார்.

சிறுவன் தானே என்று இலட்சியம் செய்யாத குணம். தந்தையின் நினைவையும், விதவைத் தாயின் கணவனின் அன்பையும் மதிக்கும் பண்பு. உயிர் நீத்த வீரப்பிரபுவின் வாரிசிடம் காட்டிய பரிவு, அன்பு இதுதான் நெப்போலியனின் குணங்களின் சிறப்பு.

அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ். அன்பினால் ஆகாதது எதுவுமில்லை. அன்று வாளைத் திருப்பித்தர நெப்போலியன் மறுத்திருந்தால் அந்த நெஞ்சங்கள் எப்படி வாடும் என்பதை உணர்ந்த இரக்க குணம் உடையவன் நெப்போலியன்.

யூஜனிடம் காட்டிய அன்பு தான் நெப்போலியன் வாழ்விலும் முக்கிய இடம் பெற்றது. ஆம்? யூஜனின் விதவைத்தாய்தான், நெப்போலியனின் **முதல் மனைவி ஜோசைப்பைன்.** ஜோசைப்பினை கண்டதுமே அவளது பேரழகிலே நெப்போலியன் தன் மனதை பறிகொடுத்தார். ஜோசைப்பினும் நெப்போலியன் வசமானாள். இதைத்தான் ஊழ்வினை உறுத்து வந்து ஊட்டும் என்பார்கள்.

# 18. எழுத்தாற்றல்

நூறு புத்தகங்கள் படித்தால் தான் இரண்டு புத்தகங்கள் எழுத முடியும் என்பது பழமொழி. சிறுவயது முதல் படிக்கும் பழக்கம் உள்ளவன் நெப்போலியன். கண்டதைப் படித்தால் பண்டிதராக ஆகலாம்

என்பதுபோல, படிப்பறிவு, நெப்போலியனுக்கு எழுத்தாற்றலை வழங்கியது. ஹோமர் காவியம் இவருக்கு வழிகாட்டியது.

நெப்போலியனுக்கு உலகப்படம் என்றால் பிடிக்கும். எப்போதும் தன் படிப்பகத்தில் சுவரில் உலகப் படங்களை விதவிதமாக மாட்டி வைத்திருப்பார். எப்போதும் அவற்றை உற்றுப் பார்த்துக் கொண்டிருப்பார். அல்லது புத்தகங்கள் படித்துக் கொண்டிருப்பார்.

நெப்போலியன் மாணவராக இருந்தபோது மைக்கூட்டு இறகுகளினால் பேனாவைத் தொட்டுத் தொட்டு எழுதுவார். அப்போது அவர் மூன்று விரல்களின் முனையாலும் மை அப்பிக் கொள்ளும். தினந்தோறும் கைவிரல்களில் உள்ள மைக் கறையைக் கழுவிச் சுத்தம் செய்ய பெரும் கஷ்டப்பட்டார்.

இந்தக் கஷ்டத்தை உணர்ந்துதான் அரசாங்க அதிகாரிகளுக்கு தன் உத்தரவுகளை, வாசகங்களை மின்னல் வேகத்தில் டிக்டேட் செய்வார். வாய்மொழியாகச் சொல்லும் உத்தரவுகளையும் உதவியாளர்கள் வேகமாக எழுதிக் கொள்வார்கள்.

நெப்போலியன் கட்டுரைகள், கதைகள் எழுதியுள்ளார். ஒரு நாவலும் எழுதியுள்ளார். அந்த நாவலில் பிரெஞ்சுக்காரர்களின் ஆடம்பரத்தை எள்ளி நகையாடியுள்ளார். தான் பிறந்த கார்சிகா தீவு மக்களின் பண்புகளைப் பாராட்டி உள்ளார்.

நெப்போலியன் எழுதிய கட்டுரைகளில் உலகப் புகழ் பெற்றவை "பெண்ணுக்குச் சம உரிமை" , "சர்வாதிகாரக் கொடுமை", "பெண்ணிடம் கண்ணியம்"

"தற்கொலை செய்து கொள்வது கோழைத்தனம்," காலம் மாறும்" முதலியன குறிப்பிடத்தக்கவை.

"வாளை விட பேனா மிகவும் கண்ணியமானது" என்பது நெப்போலியனின் சிறப்பான பொன் மொழியாகும்.

# 19. மற்றவரின் உணர்ச்சிக்கு மதிப்பு கொடுத்தல்

இங்கிலாந்தின் மீது படையெடுக்க வாய்ப்பை எதிர்பார்த்து, போலான் பாசறையில் இருந்தார் நெப்போலியன். அப்போது, பிரெஞ்சு சிறையிலிருந்து தப்பி சிறிய படகு மூலம் இங்கிலாந்துக்குத் தப்பிக்க முயன்ற ஆங்கிலேயக் கைதி ஒருவனைப் பிடித்து நெப்போலியன் முன் நிறுத்தினர்.

"ஆங்கிலேய வாலிபனே! சிறையிலிருந்து ஏன் தப்பினாய்? நீயே படகு ஒன்றையும் தயாரித்து விட்டாய். கடலை கடக்க முற்பட்டாய்" இதற்கு என்ன காரணம்?" என்று கேட்டார் நெப்போலியன்.

"என் வயதான தாய் வறுமையிலிருக்கிறாள். அவளுக்கு நான் ஒரே மகன். தாயைக் காண ஆசைப்பட்டேன். தாய்ப்பாசம் எனக்குத் தைரியத்தைத் தந்தது. எதற்கும் துணிந்தேன். மாட்டிக் கொண்டேன்" என்று உண்மையைக் கூறினான் வீரன்.

அவனது தாய்பாசத்தை எண்ணி நெப்போலியன் மகிழந்தார். தன் மகனைப் பார்க்கத் துடிக்கும் தாயின்

நிலையை எண்ணினார். வீரனின் தாய்ப்பற்றின் ஆழத்தை உணர்ந்தார்.

"வீரனே! உண்மையிலே உன் தாய் கொடுத்து வைத்தவள். உன் தாய் வறுமை நீங்க நான் தரும் பரிசை ஏற்றுக் கொள்"! என்று பரிசையும் வழங்கி, அவனைப் பாதுகாப்பாக இங்கிலாந்துக்கும் அனுப்பி வைத்தார்.

எதிரி நாடான இங்கிலாந்து நாட்டின் மீது படையெடுக்க காலம் பார்த்துக் கொண்டிருக்கும் வேளையில், ஆங்கிலேய வீரனை, பரிசுடன் பாதுகாப்புடன் தாயைக் காண அனுமதித்த நெப்போலியன், மற்றவர்களின் உணர்ச்சியை மதிக்கத் தெரிந்தவர். மாற்றான் கருத்துக்கும் உணர்ச்சிக்கும் மதிப்புக் கொடுப்பவர். மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு. தாயையும் சேயையும் சேர்த்து வைத்த பண்பாளர்.

நெப்போலியனின் பரிசைப் பெற்ற ஆங்கிலேயத் தாய் நெப்போலியனின் உயர்ந்த குணம் கண்டு மகிழ்ச்சியடைந்தாள். தாயினும் சாலப் பரிந்து அருள் சுரந்தவர் நெப்போலியன்.

## 20. திருமணத்தில் தூக்கம்

**நெ**ப்போலியன் எப்போதும் நேரத்திற்கும், திட்டமிடுதலுக்கும் முக்கியத்துவம் கொடுப்பவர். திட்டமிட்டப்படி காலத்தோடு எந்தக் காரியத்தையும் முடிக்கும் வழக்க முடையவர் போர்க்களத்தில் வெற்றியை இழந்தாலும் நேரத்தை இழக்கமாட்டேன்" என்று அவரே

கூறியுள்ளார். ஆனால் இவரது வாழ்க்கையில் மறக்கமுடியாத ஒரு சுவையான நிகழ்ச்சி ஏற்பட்டது.

ஜோசைப்பைனைத் திருமணம் செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டது. நேரத்தில் ஒழுங்குடைய நெப்போலியன் தன் திருமணத்திற்கு இரண்டு மணி நேரம் தாமதமாக வந்தார். மணமகள் ஜோசைப்பைன் இரண்டு மணி நேரம் காத்திருந்தாள். திருமணத்திற்கு வந்திருந்தவர்களும் காத்திருக்க நேரிட்டது.

அதைவிட பெரிய நகைச்சுவை, திருமணத்தை நடத்தி வைக்க வைத்திருந்த பாதிரியாரும் தூங்கிக் கொண்டே இருந்தார். நெப்போலியன் நேரம் தாழ்த்தியதால் பாதிரியாரும் தூங்கிவிட்டார். நெப்போலியன் வந்த பிறகுதான் விழித்தார்.

ஜோசைப்பைனின் இயற்பெயர் மேரி ஜோசப் ரோஸ் தாஷர்லா பாதெர் ஜோசைப்பைன். அப்போது ஜோசைப்பைன் ஒரு தேவதை போல் காட்சியளித்தார். போப்பாண்டவரின் முன்னிலையில் அழகிய சிம்மாசனத்தில் தளபதி நெப்போலியன் அமர்ந்திருந்தார். பக்கத்தில் ஜோசைப்பைன் அமர்ந்திருந்தாள். பக்கத்தில் நெப்போலியன் தாய் நின்றிருந்தாள்.... "இந்தக் காட்சியைக் காண நம் தந்தை இல்லையே" என்று தம்பி ஜோசப் தாயின் காதில் கிசுகிசுத்தார். பாதிரியார் பின் திருமணத்தை நடத்தி வைத்தார்.

பின்னர் விருந்துநடைபெற்றது. விருந்தின் போது **"நான் இப்படி விருந்து சாப்பிடுவதை விட ஏதேனும் ஒரு போர்களத்தில் சண்டையிட நேர்ந்தால் அதிக மகிழ்ச்சியடைவேன்".** என்று மனைவியிடம் நெப்போலியன் சொன்னார்.

# 21. கணவனின் பெருமைகள்

நெப்போலியன் மனைவி ஜோசைப்பைன் நெப்போலியனை விட ஆறு வயது மூத்தவள். ஒல்லியான தோற்றமும், நேர்த்தியும், அழகும் மிடுக்கும் நிரம்பியவள் ஜோசைப்பைனின். இரண்டு பிள்ளைகளுடன் விதவையான ஜோசைப்பைன் அறிவு ஆற்றல் கண்டு அவரை நெப்போலியன் மணந்து கொண்டார். நெப்போலியனைப் பற்றி ஒரு முறை தனது தோழிக்கு ஜோசைப்பைன் பின்வருமாறு கடிதம் எழுதினாள்.

"விதவையான எனக்கு வாழ்வு தரவும் எனது இரண்டு குழந்தைகளுக்குத் தந்தையாகி ஆதரவளிக்கவும் இந்த ராணுவ ஜெனரல் வந்திருக்கிறார். ஆற்றல் மிக்க இவரது ஆதரவால் நான் வியப்படைகிறேன். திகைப்படைகிறேன். நான் மனைவியாகி இவருக்கு ஈடு கொடுக்க முடியுமா? என்று மலைப்பாய் உள்ளது".

மற்றொரு கடிதத்தில்,

"தனது வெற்றியின்மீது முழு நம்பிக்கை வைத்திருப்பார். இவரது தன்னம்பிக்கை அசுரபலம் வாய்ந்தது. விந்தையான இந்த மனிதர் தன் மனதில் தினைத்ததைச் சாதிப்பார்" என்று குறிப்பிட்டிருந்தார்.

தோழிக்கு எழுதிய மற்றொரு கடிதத்தில், "இவரது இதயத்தை மூடியிருக்கும் இரும்புக் கதவின் சாவித் துவாரம் வழியாக நான் பார்க்கும் போது, ஆர்வத்தினால் அவரது இதயம் ஜொலிப்பதை உணர முடிகிறது" என்று எழுதியிருந்தாள்.

"கோழி தன் முட்டைகளை அடைகாப்பது போல் இந்தத் தளபதியும் உலகப் படங்களை அடை காக்கிறார்" என்று ஜோசப்பைன் ஒருமுறை தன் தோழியிடம் சொல்லி மகிழ்ந்தாள்.

ஜோசைப்பைனை நெப்போலியனின் குணங்கள் கவர்ந்ததைப் போல், ஜோசைப்பைனின் குணங்களும் அறிவும் நெப்போலியனைக் கவர்ந்திழுத்திருந்தது.

## 22. "ஒழுக்கமே உயிர்"

நெப்போலியன் ஜோசைப்பைனைத் திருமணம் முடித்துவிட்ட மூன்றாவது நாளே இத்தாலியின் மீது படையெடுக்க பிரெஞ்சு தேசிய சபை உத்தரவிட்டது. இத்தாலி படையெடுப்பைத் திட்டமிட்டு நடத்தினார் தளபதி நெப்போலியன். பத்து நாட்களில் 124 உத்தரவுகள் மூலம் தன் படை வலிமையைக் பெருக்கினார். 30000 வீரர்கள், 4000 குதிரைகள், 24 பீரங்கிகள் 3 லட்சம் படைவீரர்கள் ஆகியவற்றுடன் இத்தாலி மீது படையெடுத்து மாபெரும் வெற்றி பெற்றார்.

இப்போரின் வெற்றிக் களிப்பில் வீரர்கள் விபரீத வேலைகளில் ஈடுபட்டனர். பணக்காரர்கள் வீடுகளிலும், தேவாலயத்திலும் கொள்ளையடித்தனர். அழகான பெண்களை அனுபவிக்கத் தொடங்கினர். நெப்போலியன் காதுக்குச் செய்தி எட்டியவுடன் அவர்களைக் கண்டித்தார்.

"கொள்ளைக் கூட்டத் தலைவன் என்ற அவப்பெயரை நான் ஏற்கமாட்டேன். நாம் கொள்ளையடிக்கவா இங்கு வந்தோம்? கொள்ளையடித்த பொருட்களை உரியவர்களிடம் ஒப்படைத்து விட்டு மன்னிப்புக் கேட்க வேண்டும். 24 மணி நேரத்திற்குள் களவாடிய பொருட்களை ஒப்படைக்காவிட்டால் உங்களுக்குச் சவுக்கடி கிடைக்கும். தாய்மார்களிடம் தவறாக நடப்பவர்களைச் சுட்டுத் தள்ளிவிடுவேன்" என்று உத்தரவிட்டார்.

"இரவு நேரங்களில் வீரர்கள் ராணுவ முகாமை விட்டு வெளியே செல்லக்கூடாது என்றும், பெண்கள் எவரும் உத்தரவின்றி இராணுவ முகாம்களுக்கு வரக்கூடாது" என்றும் உத்தரவுகளைப் பிறப்பித்தார்.

பொதுமக்களின் உடமைக்கும் உயிருக்கும் துன்பம் விளைவிக்காமல் பாதுகாப்பது நமது முதல் கடமை. இதற்கு மாறாக எவரேனும் நடந்து கொண்டால், நான் அவர்களது தளபதி என்று சொல்வதற்கு வேதனையடைவேன், வெட்கப்படுவேன் என்று மேலும் கூறி வீரர்களிடம் வீரமிக்க அறிவுரைகளையும், அன்புரைகளையும், ஒழுக்கத்தையும், பண்புகளையும், நன்னடத்தை களையும் உருவாக்கி அதனைக் கவனிக்கவும் செய்தவர் தளபதி நெப்போலியன்.

**"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்**
**உயிரினும் ஓம்பப் படும்".**

என்ற குறளின் நெறிக்கு இலக்கணமாகத் திகழ்ந்தவர் மாவீரன் நெப்போலியன். உலக வரலாற்றில் எந்தத் தளபதியும் தனது வீரர்களிடம் இந்த அளவுக்கு ஒழுக்கத்தை நிலை நாட்டியது கிடையாது.

# 23. காதல் கடிதம்

முதன் முதலில் "அண்ணலும் நோக்கினான். அவளும் நோக்கினாள்" என்று கம்பர் கூறியது போல், முதல் சந்திப்பிலேயே தன்னை விட ஆறு வயது முதிர்ந்த ஜோசைப்பைனின் அழகில் மயங்கினார். ஜோசைப்பைனின் கள்ளங்கபடமற்ற பேச்சும், அறிவும், சுறுசுறுப்பும் கண்ட நெப்போலியன் அவளையே திருமணம் செய்து கொண்டார். தனக்கு மரணம் வந்த கடைசி நேரத்திலும் காதல் மனைவியின் பெயரை உச்சரித்தவர்.

ஜெர்மனியில் வெற்றி பெற்ற தளபதி நெப்போலியன், ஓய்வு நேரத்தில் தன் மனைவி ஜோசைப்பைன் நினைவில் இருப்பார். அத்தகைய நேரங்களில் அவர் எழுதிய காதல் கடிதங்கள் புகழ் பெற்றன. பெர்லின் நகரில் இருந்து கொண்டே, நெப்போலியன் தன் மனைவி ஜோசைப்பைனுக்கு ஒரு கடிதம் எழுதினார். "அன்பே, உன்னை நான் மிகவும் நேசிக்கிறேன். நீ நலமாக வாழ விரும்புகிறேன். அழகான எந்தப் பெண்ணுக்கும் அதிகாரம் செலுத்த வேண்டுமென்ற இயல்பான ஆசை இருக்கும். உனக்கும் அந்த ஆசை அதிகமாக உண்டு.

நீ எண்ணியதெல்லாம் நடைபெற வேண்டும். உன் ஆசைக்கு நானும் ஓர் அடிமை. இங்கே தினமும் எத்தனையோ அழகிகளை நான் பார்க்கிறேன். எனினும் இரவுப் பொழுதை தனிமையாகவே கழிக்கிறேன். என் கண்ணில் தென்படும் அழகிகள் மீதெல்லாம் நான் ஆசைப்படுவது கிடையாது.

இந்த உலகில் ஒரே ஒரு பெண்ணைத்தான் நான் விரும்புகிறேன். அவர் யார் தெரியுமா? நான் சொன்னால் அவளை நான் முகஸ்துதி செய்வதாகும். நான் சொல்லாமலே அவள் யார் என்று உனக்குப் புரிந்திருக்கும். மற்ற ஆடவர்களைப் போலவே நானும் என் மனைவிக்கு அடிமையாக இருப்பதில் பெருமைப்படுகிறேன்!" என்று உள்ளத்தின் காதலை எழுத்தில் வடித்தார். நெப்போலியன் காதல் கடிதங்கள் புகழ் பெற்றவை.

# 24. நகைச்சுவை பதில்

சக்ரவர்த்தி நெப்போலியன் எப்போதும் சிக்கனமாகவே வாழ்ந்து வந்தார். ஆனால் அவைக்கள பிரமுகர்கள் சிறப்பான முறையில் உடை அணிந்து இருப்பார்கள். தேவைப்படும் போது மட்டும் பட்டாடைகளை அணிவது சக்ரவர்த்தியின் வழக்கம். பழக்கத்திற்கும் எப்போதும் அடிமையாகாதவர் நெப்போலியன்.

உணவு, உடை, படுக்கையறை இப்படித்தான் இருக்க வேண்டும் என்று எப்போதும் அவர் வலியுறுத்தவில்லை.

ஆனால், மனைவி ஜோசபைன் மகாராணியான பிறகு ஆடம்பர வாழ்க்கை நடத்தினாள். அவளிடம் 700-க்கும் மேற்பட்ட பட்டாடைகளும் ஏராளமான தங்க வைர நகைகளும் 250 தொப்பிகளும் இருந்தன. சிகை அரங்காரத்திற்கான லட்சக்கணக்கில் செலவு செய்தாள். இதனை நெப்போலியன் "முட்டாள்தனமான செலவுகள்" என்று கண்டிப்பார்.

ஆனால் நெப்போலியன் தங்கைகள் மூவரும் ஊதாரிச்செலவுகள் செய்வதில் அண்ணியை மிஞ்சினர். எவ்வளவு கொடுத்தாலும் அண்ணன் மீது திருப்தி இல்லை.

ஜோசபைன் முதல் கணவர் மூலம் பிறந்த இரண்டு பிள்ளைகளில் இளையவரைப் பாரிஸ் நகர கவர்னராக்கினார் நெப்போலியன். மூத்தவர் ஹோர்டன்சை தம்பி லூயிசிற்கு மணம் முடித்தார். இரண்டு பிள்ளைகளும் நெப்போலியனிடம் நன்றியும், விசுவாசமும் கொண்டிருந்தனர்.

இதனால் பொறாமையும் பொச்சரிப்பும் அடைந்த சகோதரிகள் அண்ணனுடன் மோத முடியாமல் அண்ணி ஜோசைபைன்னைச் சீண்டுவது வழக்கம்.

"ஒரு நாள் எங்களைவிட அண்ணி உசத்தியா?" என்று நெப்போலியனிடமே நேருக்கு நேர் கேட்டனர் சகோதரிகள்.

"என்ன செய்வது? நம் தந்தை போனபார்டியின் ஆவி அவளது பிள்ளைகளைத்தான் ஆசிர்வதிக்கிறது" என்று நகைச்சுவையாக பதில் சொன்னார் நெப்போலியன்.

# 25. ஆழ்ந்த தூக்கம்

**உ**டல் உறுப்புகளைத் தளர்த்திக் கொள்ள இறைவனால் வழங்கப்பட்ட மாபெரும் கொடை தூக்கம். நம்மில் பலர் எப்படி தூங்குவது என்று தெரியாமல் தூங்குகின்றனர். தூக்கம் எப்படி இருக்க வேண்டும் என்பதை நெப்போலியன் வாழ்வில் நாம் அறியலாம்.

ஒருநாள் நெப்போலியன் மனைவி ஜோசைப்பைன் நெப்போலியனிடம் ஒரு கேள்வி கேட்டார்.

அதற்கு நெப்போலியன் "அன்பே நீ கேட்டது சரியான கேள்விதான். இரணுவத்துக்கு எந்த நேரத்தில் எத்தகைய தீமை நேரிடும் என்பதை முன்கூட்டி அறியமுடியாது. எனது மூளைப்பகுதியில் பல கூண்டுகள் போன்று பல அறைகள் உள்ளன. ஒவ்வொரு வேலையை நினைக்கும் பொழுது அதற்குரிய அறை திறந்து வேலையைச் செய்யும். நான் தூங்க வேண்டுமாயின் எல்லா அறைகளையும் மூடிவிடுவேன். தூக்கம் தானாக வந்துவிடும்.

தூங்குவது என்பது கால அளவைப் பொறுத்தது அல்ல. தூங்கும் ஆழத்தின் அமைதியைப் பொறுத்தது. நான் அன்றாடம் ஆழ்ந்து தூங்குவது இரண்டு மணியளவு தான்" என்று பதில் அளித்தார். நாட்டு மக்களின் நலனே தன் நலன் எனக் கொண்டு ஆட்சிப் புரிந்தார். ஒரு நாளைக்கு அதிகபட்சம் மூன்று மணி நேரத்துக்கு மேல் தூங்குவதில்லை. ஓயாமல் ஓழியாமல் நாட்டுக்காக தாய் நாட்டுக்காக உழைத்து வந்தார்.

குதிரையில் அமர்ந்து கொண்டே ஓரிரு நிமிடங்கள் தூங்குவதும் நெப்போலியன் இயல்பு. ஒரு நாட்டை வென்றவுடன் அடுத்த நாட்டிற்குச் செல்லும் வழியில் குதிரையில் அமர்ந்து கொண்டே இரண்டு மணிநேரம் மட்டும் ஆழ்ந்து தூங்குவதும் உண்டு. பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரனார் கூறியது போல் தூங்கிக் கெடுத்தவர்கள் எல்லாம் நாட்டைக் கெடுத்ததுடன் தாமும் கெட்டுப் போனார்கள் என்ற கொள்கை உடையவர் நெப்போலியன்.

சாதனையாளர்களும் வரலாற்று நாயகர்களும் கருமமே கண்ணாக இருப்பார்கள். மெய் வருத்தம் பார்க்க மாட்டார்கள். கண்ணயர மாட்டார்கள். நாமும் நெப்போலியனைப் போல் ஆழ்ந்து தூங்கி உடல்நலம் காப்போம்.

## 26. உழைப்புக்கு முதலிடம்

**மா**பெரும் வெற்றி அடைந்திருக்கும் தன் மகன் நெப்போலியனைச் சந்தித்து அன்போடு கட்டித் தழுவிக் கொண்டாள். ஈன்ற பொழுதில் பெரிதும் மகிழ்ச்சியடைந்த தாய் லதீதா ரமோலினி. "மகனே! உனது உடம்பு இளைத்து மெலிந்து இருக்கிறதே" என்று மகனை அன்போடு தடவினார்.

"நான் மெலிந்து போகவில்லை அம்மா! இப்பொழுது நான் நன்றாகத்தான் இருக்கிறேன். உன் உடம்பைக் கவனித்துக்கொள். நீ இறந்துவிட்டால் என்னைக் கட்டுப்படுத்த யாரும் இல்லாமல் போய்விடுவர்" என்றார்.

அப்போது வீரன் ஒருவன் வந்து படைத்துறை குறித்த நடைமுறைக்கு உள்ள குறிப்புகளைக் கொடுத்தான். நெப்போலியன் அந்தக் குறிப்புகளைக் குதிரைமீது அமர்ந்தவாறு படித்துவிட்டு "இதனை எடுத்துக்கொண்டு உடனே திரும்பு" என்றார். உடனே வீரன் "தளபதி அவர்களே, என்னிடம் குதிரை இல்லை. என் குதிரை இறந்துவிட்டது" என்றான். "எனது குதிரையில் ஏறிக்கொண்டு உடனே புறப்படு. "பிரெஞ்சுப் போர் வீரர்களைக் காட்டிலும் என் குதிரை பெரியது

அல்ல" என்று சொல்லி குதிரையிலிருந்து இறங்கி தன்னுடைய குதிரையை வீரனிடம் கொடுத்தார். தனது படைவீரர்களிடம் இவர் காட்டிய அன்பை இது காட்டுகிறது.

ஒருசமயம் நெப்போலியன் பணக்கார சீமாட்டியுடன் தெருவில் நடந்து கொண்டிருந்தார். சீமாட்டி இரண்டு அடி முன்னால் நடந்தாள். வழியில் ஒரு தொழிலாளி பெரிய பாரம் ஒன்றை தலையில் தூக்கி வைத்துக் கொண்டு எதிரே வந்து கொண்டிருந்தான். சீமாட்டி தொழிலாளியைப் பார்க்காததுபோல வழிவிடாமல் நடந்தாள். அதைக் கண்ட நெப்போலியன் "அம்மா உழைப்புக்கு மதிப்புக்கொடுத்து அந்த ஆளுக்கு வழிவிடுங்கள்" என்றார்.

உழைப்பால் உயர்ந்த உத்தமர் நெப்போலியன் உழைப்புக்கு முதலிடம் கொடுத்ததில் வியப்பேது மில்லை.

## 27. தேவ தூதன்

இத்தாலியை வென்று அங்கு மிலான் அரண்மனையில் நெப்போலியன் தங்கி இருந்தார். இங்கிருந்து கொண்டு ஆஸ்திரிய நாட்டின் மீது படையெடுக்கத் திட்டமிட்டுக் கொண்டிருந்தார். நெப்போலியனின் வளர்ச்சியைக் கண்டு பிரெஞ்சு ஆட்சி மன்றக்குழு பயந்தது. தங்களை ஒழித்துவிட்டு நெப்போலியன் பிரெஞ்சு அதிபதியாக வந்து விடுவாரோ

என்ற அச்சத்தில் இருந்த தருணம். இந்த சூழ்நிலையில் நெப்போலியன் ஒரு சாணக்ய அரசியல் செய்தார்.

இஸ்கான்புல் என்ற நகரத்தில் 350 வருடங்களாகத் தொடர்ந்து ஆட்சி செலுத்தி வந்த ஒட்டோமன் சுல்தான்கள் பல்வேறு நாடுகளில் இருந்தும் தங்கத்தைக் கொண்டு வந்து குவித்து மலைபோல் வைத்திருந்தனர். இந்தத் தங்க மலையைக் கைப்பற்றினார் நெப்போலியன்.

நூறு தங்க மூட்டைகளை நூறு குதிரைகளில் நூறு வீரர்களிடம் 1797 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் பிரான்ஸ் அனுப்பி வைத்தார் நெப்போலியன். மூட்டை மூட்டையாக வந்து குவிந்த தங்க மழையால் பிரெஞ்சு கருவூலம் நிரம்பி வழிந்தது. ஆட்சி மன்றக்குழவினருக்கும் தங்கப் பார்சல்களை அனுப்பி வைத்திருந்தார். இன்ப அதிர்ச்சியால் பிரான்ஸ் நாடே திகைத்துப் போனது. பிரான்ஸ் நாட்டில் தங்க மழை பெய்தது. நாடெங்கும் நெப்போலியன் புகழ் ஓங்கியது. நாடு முழுவதும் நெப்போலியன் படங்களே காணப்பட்டன. எதிர்த்துப் பேசி வந்த ஆட்சி மன்றக் குழுவினர் வாயடைத்துப் போயினர்.

நெப்போலியன் உருவம் பொறித்த டாலர்கள் ஏராளமாக விற்பனை ஆயின. இவரைப் பற்றியகார்டூன் படங்கள் ஏராளமாக வெளிவந்தன. பிரான்ஸ் நாட்டு நாடகத் தியேட்டர்களில், நடிகர்கள் நெப்போலியன் புராணம் பாடத் தொடங்கினர். மொத்தத்தில் தங்களை வாழ வைக்க வந்த தேவதூதனாக நெப்போலியனைப் பிரெஞ்சு நாட்டு மக்கள் போற்றி மகிழ்ந்தனர். நெப்போலியனின் தாய்நாட்டுப்பற்று கண்டு ஐரோப்பாவே வியப்பால் பார்த்தது.

நெப்போலியனின் மனம் நெகிழ்வுத் தன்மை உடையது. பெரிய விஷயம் முதல் சிறிய விஷயம் வரை அதனைத் தன் போக்குக்குத் தகுந்தவாறு மாற்றிக் கொள்ளும் திறமை அவருக்கு இருந்தது. இதனால் தான் பிரெஞ்சு ஆட்சி மன்றக் குழுவினரது வாயினை அடைக்கவும், நாட்டின் வலுவான பொருளாதரத்தை உயர்த்தவும் தங்க மழைப் பெய்யச் செய்தார் தேவதூதன்.

## 28. கருமமே கண்

இத்தாலி நாட்டின் மாட்டுலா அரண்மனையில் சக்ரவர்த்தி நெப்போலியன் தங்கியிருந்தார். 1807 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் ஒரு மாலை நேரம்; காலத்தின் அருமையை உணர்ந்திருந்த நெப்போலியன் தனது கனவுகளை இலட்சியங்களைத் திட்டமிட்டுக் கொண்டு ஆழ்ந்த சிந்தனையில் இருந்தார். தன்முன் வட்ட வடிவு மேசையில் மீது, மிகப்பெரிய தேசப்படம் ஒன்று விரித்து வைக்கப்பட்டிருந்தது.

உலக வரைபடத்தின் ஆங்காங்கே குண்டூசிகளை அவர் குத்தி வைத்திருந்தார். எந்தெந்த நாட்டைக் கைப்பற்றலாம் எங்கெங்குப் போரிடலாம் என்று உள் மனதுக்கு கட்டளைகளை வழங்கிக் கொண்டிருந்தார். இரவு வந்தது. அரண்மனையில் மெழுகுவர்த்திகள் வெளிச்சம் ஏற்றப்பட்டது.

அப்போது நெப்போலியனின் தம்பி லூசியன் அருகே வந்தார். தம்பி தனது குடும்பம் மற்றும் அரசியல் விஷயங்களைப் பேசிக் கொண்டிருந்தார்.

தம்பியிடம் பேசிக்கொண்டே அஷ்டாவதானியான நெப்போலியன் தனது கவனத்தின் முக்கிய பகுதியை உலக வரைபடத்தின் மேல் செலுத்திக் கொண்டிருந்தார்.

மெய் வருத்தம் பாரார் கண் தூங்கார் என்று தம்பியிடம் பேசிக் கொண்டே தனது கருமத்தில், கடமையில், கவனமாக இருந்தார்.

# 29. தவற்றை ஒத்துக் கொள்ளுதல்

**த**வறு செய்வது இயற்கை. மனிதனின் மனம் தவறு செய்யும். தவறு என்று கண்டுபிடிப்பதும் மனம். தவற்றை உணர்ந்து திருந்தி வாழ்வதும் தவற்றை ஒப்புக் கொள்வதும் மனிதனின் உயர்ந்த குணமாகும். உயர்ந்த குணங்களின் இருப்பிடமான நெப்போலியனும் தன் தவற்றை உணர்ந்த வரலாறு உண்டு.

ஐரோப்பா முழுவதும் நெப்போலியனின் ஆளுகைக்கு உட்பட்டு வந்த சமயம். இத்தாலி முழுவதும் பிரெஞ்சு நாட்டுக்குச் சொந்தமாயிற்று. இத்தாலிக்குக் குடியரசும் வழங்கப்பட்டது. நெப்போலியனே இத்தாலியில் மிலான் நகரத்தில் சில காலம் தங்கி நிர்வாகத்தை மேற்பார்வையிட்டு வந்தார். இத்தாலி நாடே நெப்போலியனைப் போற்றி மகிழ்ந்து கொண்டிருந்தது. வீரனுக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பல்லவா?

ஒரு நாள் நெப்போலியன் இத்தாலி நகரில் புகழ்பெற்ற கல்லூரிக்குச் சென்று பார்வையிட்டார். ஆசிரியர்களையும், மாணவர்களையும் சந்தித்துப்

பயனுள்ள ஆக்கப்பூர்வமான செய்திகளை வாரி வழங்கினார். கல்லூரியே வியந்து போனது.

ஒரு கணித வகுப்புக்குள் நுழைந்தார். கணக்கு என்றாலே நெப்போலியனுக்கு சர்க்கரை அல்வா மாதிரி. வகுப்பறையில் மாணவனிடம் ஒரு கணக்குப் புத்தகத்தை வாங்கினார். புரட்டினார். கடினமான கணக்கு ஒன்றை கொடுத்து மாணவர்களை விடை கண்டுபிடிக்கச் சொன்னார்.

எல்லா மாணவர்களும் சிரமப்பட்டுக் கொண்டிருந்த சமயத்தில் ஒரு மாணவன் தன்னுடைய கணக்கிற்கு விடையை எழுதிக் காட்டினான். அதைப் பார்த்த நெப்போலியன் "உன் விடை தவறு" என்றார்.

மாணவன் மீண்டும் தன் கணக்கின் வழிமுறைகளைச் சரிபார்த்து விட்டு "என் கணக்கும் விடையும் சரிதான். நீங்கள் தான் தவறாகச் சொல்கிறீர்கள்" என்று இளங்கன்று பயமறியாது ஆணித்தரமாகப் பதிலளித்தான்.

நெப்போலியன் மீண்டும் அந்தக் கணக்கை வாங்கி சரிபார்த்தார். உன் விடை சரிதான். மன்னித்துவிடு. நான் தான் தவறு செய்து விட்டேன்" என்றார். கல்லூரியே, ஏன் இத்தாலியே வியப்படைந்தது. வரலாற்று நாயகன் தவறு செய்தாலும் தவற்றினை உணர்ந்து மன்னிப்பு கோரிய பண்பு கண்டு உலகமே வியந்தது. வரலாறு புகழ்கின்றது. தவறு செய்தால் ஒப்புக் கொள்ள வேண்டும் என்பார் மாவீரன். அதனைத் தானும் தன் வாழ்நாளில் கடைபிடித்தார்.

## 30. ஏழைகளின் அரசர்

நெப்போலியன் வெற்றிகளில் இத்தாலியை வென்று, இத்தாலியின் அரசராக முடிசூட்டியது சிறப்பானதாகும். சிலகாலம் இத்தாலியில் மாட்டுலா அரண்மனையில் வாழ்ந்துவிட்டு தனது மகன் அங்கு யூஜினை அரசராக்கிவிட்டு மனைவியுடன் நாடு திரும்பினார்.

இத்தாலியில் இருந்து பிரான்ஸ் திரும்பும்போது நெப்போலியனுக்குப் பலரும் மரியாதை செலுத்தினார்கள். மரியாதை செலுத்தியவர்களுள் வயதான மூதாட்டி ஒருவர் இருப்பதைப் பார்த்து ஆச்சரியப்பட்டார். நெப்போலியன் அவருடன் உரையாடினார்.

"அம்மையாரே தாங்கள் யாரைப் பார்க்க வந்தீர்கள்?"

"பிரான்ஸ் சக்ரவர்த்தியைப் பார்க்க வந்தேன்"

"போர்பைன் அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்,

எவ்வளவோ நன்மை செய்திருக்கிறார்கள்; கேவலம்,

நெப்போலியன் அல்லவா இப்பொழுது அரசராக உள்ளார்"

"போர்பைன் அரசர் பிரபுக்களின் அரசர். பிரபுக்களுக்குத்தான் அரசர். ஆனால் நெப்போலியன் என்னைப்போன்ற ஏழைகளின் அரசர். ஏழை மக்களுக்காகப் பதவி வகிக்கிறார்."

அம்மையாருடன் பேசியதும் உள்ளம் உருகி மகிழ்ந்தார், நெகிழ்ந்தார் சக்ரவர்த்தி. மூதாட்டியின்

வறுமை நீங்க பணமுடிப்பை வழங்கினார். அம்மையாரும் சக்ரவர்த்தி நெப்போலியனை ஏழைகளின் அரசரைப் பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு வாழ வாழ்த்தினார்.

ஏழைகளின் அரசர் நெப்போலியன் படைவீரர்களுடன் சேர்ந்து உரையாடுவதையும், உணவருந்துவதையும் வழக்கமாகக் கொண்டிருந்தார். போர் வீரர்களுடன் நண்பர்களைப் போல் கேலி, கிண்டல், நகைச்சுவை செய்வதும் உண்டு. சாப்பாட்டிலும், ஆடை அணிவதிலும் எளிமையைக் கடைப்பிடித்தார்.

## 31. இந்தியாமீது காதல்

நெப்போலியன் இத்தாலியில் மிலான் நகரில் உள்ள அரண்மனையில் வசித்து வந்தார். ஐரோப்பாவை வென்ற நெப்போலியனுக்கு இந்தியா மீது ஒரு காதல் இருந்தது. பல்வகை வளமும் உள்ள இந்தியாவின் மீது நெப்போலியன் மனம் தாவிற்று.

"இந்தியா ஒரு பெரிய நாடு. தத்துவத்திலும் கலைகள் வளர்ப்பதிலும் சிறந்த நாடு பாரதம். இங்குப் பல அறிஞர்கள் உள்ளனர். அத்தகைய நாடு சுதந்தரமற்று இருக்கிறது. இந்திய நாட்டில் குடியாட்சியை ஏற்படுத்த வேண்டும்" என்று நெப்போலியன் கருதினார்.

இந்திய மக்களே ஆங்கிலேயரிடம் அடிமைகளாக வாழ்ந்து கொண்டிருந்த காலத்தில், ஏன் இந்தியர்களே தங்களுக்குக் குடியாட்சி வேண்டும் என்று எண்ணாத

காலத்தில், இந்தியர்களுக்குக் குடியரசுதான் நல்ல ஆட்சிமுறை என்று கருதிய பெருமை நெப்போலியனுக்கு உண்டு.

ஆனால் இந்தியாவை வெல்லுமுன் எகிப்தின் மீது நெப்போலியன் மனம் தாவிற்று. எகிப்தை வென்ற பின் கடல் மூலமாக இந்தியாவை அடைந்து ஆங்கிலேயரை விரட்டி விட்டு குடியாட்சி நிறுவ நினைத்தார். விதியானது, எகிப்தை வென்ற பின் உடனடியாக தாய்நாடு செல்ல வேண்டியிருந்ததால் இந்தியாவிற்கு அவரால் வர இயலவில்லை. ஒரு வேளை நெப்போலியன் இந்தியா வந்திருந்தால், ஆங்கிலேயரை அடித்து நொறுக்கி குடியாட்சியை நிறுவியிருப்பார். நாமும் நெப்போலியனிடமிருந்து அப்போதே தாய்நாட்டுப் பற்றையும், வீரத்தையும் தன்னம்பிக்கையையும், விடா முயற்சியையும் பெற்றிருப்போம்.

இருப்பினும் நெப்போலியனது எண்ணம் பிற்காலத்தில் நிறைவேறி இந்தியா குடியரசாக மலர்ந்தது. அறிஞர்களின் எண்ணமே நடப்பு.

## 32. இஸ்லாமியப் பற்று

**எ**கிப்து மீது போர் தொடுத்தார் நெப்போலியன். அலெக்சாண்டிரியாவில் இறங்கிய பிரெஞ்சு படைவீரர்கள் அணி வகுத்து நின்றனர். அப்போது படைவீரர்களுக்கு பின்வருமாறு அறிவுரை கூறினார்.

வீரர்களே உலக நாகரீகத்திலும் வாணிபத்திலும் சிறந்து விளங்கக் கூடிய ஒரு மாபெரும் போரில் நீங்கள்

இறங்கப் போகிறீர்கள். இஸ்லாமியர்ககளுடன் சேர்ந்து வாழக்கூடிய நிலைமை நமக்கு ஏற்படப் போகிறது.

இறைவன் ஒருவனே. அவனுடைய தூதர் முகமது நபி என்பது அவர்களது கொள்கை. முகமதியர்களைப் பகைத்துக் கொள்ளக் கூடாது. யூதர்களையும், இத்தாலியர்களையும் நேசித்தது போலவே இஸ்லாமியர்களையும் நாம் நேசிப்போம். கிறிஸ்துவ சமயக் குருமார்களை மதித்தது போலவே, இஸ்லாமிய சமய நெறிகளையும் நாம் மதிக்க வேண்டும்.

கிறிஸ்துவ சமய, யூத சமய மறைகளை மதித்ததைப் போலவே திருக்குரானையும் கௌரவித்து மதித்துப் போற்ற வேண்டும்.

எகிப்தை வென்ற பின் வீரர்களுக்கு திருக்குரானிலிருந்து, ஒரு வாசகத்தை நினைவுப் படுத்தினார். “இறைவனிடமிருந்து நமக்கு நன்மைகள் அனைத்தும் கிடைக்கின்றன. இறைவன் நமக்கு வெற்றியைத் தருகிறார். நமது நண்பர்களுக்குச் செல்வ செழிப்பை உண்டாக்குகிறார்.

உலகத்தையே கலக்கிய நெப்போலியன் திருக்குர் ஆனின் பிரெஞ்சு மொழி விளக்கத்தைப் படித்துவிட்டு அந்தப் புத்தகத்தின் மீது **“இல்லை - வேறு கடவுள் அல்லாவைத் தவிர”** என்றுஎழுதினார்.

“தங்களுக்கோ, இஸ்லாமிய சமயத்திற்கோ, திருக்குரான் நூலுக்கோ நான் எதிரியல்ல. பைபிளை நான் எந்த அளவிற்கு மதித்துப் போற்றுகிறானோ, அதே அளவிற்குக் குரானையும் மதிக்கிறேன். தெய்வ நம்பிக்கை இல்லாதவர்களை நாம் இருவரும் சேர்ந்து அடக்கி ஒடுக்கலாம்” என்று எகிப்திய மக்களிடம் கூறினார்.

## 33. பிரபஞ்ச அறிவு

1798-ல் நெப்போலியன் எகிப்து மீது படையெடுத்து வென்றார். எகிப்து மீது படையெடுக்க 4000 வீரர்களுடன் பல விஞ்ஞானிகளையும் அழைத்துச் சென்றார். வழியில் அலெக்சிந்திரியாவை வென்றார். பின்பு எகிப்து தலைநகர் கெய்ரோ நோக்கி பயணமானார்.

அறுபது மைல் நீளமுள்ள பாலைவனத்தை கடக்கும்போது விஞ்ஞானிகளுடன் உரையாடிக் கொண்டே சென்றார். வானத்தில் உள்ள விண்மீன்கள் அதிக ஒளியுடன் காணப்பட்டதைக் கண்டு வியந்தார்.

"கோள்களுக்கும் விண்மீன்களுக்கும் உள்ள வேறுபாடு யாது?" நெப்போலியன் கேட்டார்.

"கோள்கள் நிலைமாறும் விண்மீன்கள் நிலைமாறாது. கோள்களில் சூரிய ஒளி பிரதிபலிக்கும். விண்மீன்களுக்கு சுய ஒளி உண்டு" என்று விஞ்ஞானிகள் பதில் அளித்தனர்.

"வானத்தில் விண்மீன்கள் எப்படி உற்பத்தியாயின"? ஏன் சுழல்கின்றன?" நெப்போலியன் கேட்டார்.

மெய்ஞான தத்துவ விளக்கம் தருவதற்கு விஞ்ஞானிகள் தடுமாறினர். அப்போது நெப்போலியனே பதில் கூறினார்.

"வானத்து விண்மீன்கள் மிகப்பெரிய சக்தியால் படைக்கப்பட்டிருக்க வேண்டும். அச்சக்தியே இப்பிரபஞ்சம் முழுவதையும் ஆட்டி வைக்கிறது. இச்சக்திதான் படைப்புகளைச் செய்கின்றன. படைப்புச்

சக்தியை சிலரால் பார்த்து உணர முடிகிறது. சிலரால் பார்த்து உணர முடியவில்லை. சிலருக்கு நெருங்கிக் காணப்படுகிறது. சிலருக்கு எட்டாத தொலையில் உள்ளது! என்று தனது கேள்விகளுக்குத் தானே விடை கூறியதைக் கண்டு விஞ்ஞானிகள் ஆச்சரியப் பட்டனர். நெப்போலியனின் பிரபஞ்ச அறிவைப் போற்றி மகிழ்ந்தனர்.

## 34. வைர மோதிரம்

**எ**கிப்து நாட்டு மீது படையெடுத்துச் சென்ற போது முப்பது பிரெஞ்சு வீரர்கள் மடிந்தனர். அவர்களை நல்லடக்கம் செய்து வீரவணக்கம் செலுத்தினார் நெப்போலியன். கெய்ரோவில் நடைபெற்ற சண்டையில், எகிப்திய குதிரைப் படையில் முராத் என்பவன் தலைமையில் எகிப்தியர்கள் சிறப்பாகப் போரிட்டனர். இருப்பினும் நெப்போலியனின் படைகளிடம் தோற்று ஓடினர். போரில் வெற்றி பெற்ற நெப்போலியன் அன்று இரவு மூராத்தின் அரண்மனைக்குள் நுழைந்தார். கீழை நாட்டு அரசர்களின் ஆடம்பர வாழ்க்கை கண்டு அதிசயித்தார். அரண்மனையைப் பார்த்து வியந்து ஆச்சரியம் அடைந்தார்.

நெப்போலியன் தான் வெற்றி பெற்ற நாடுகளில் எப்போதும் கண்ணியமாகவும் கட்டுப்பாட்டுடனும் நடந்து கொண்டார். தனது படைவீரர்களையும் அவ்வாறே நடக்கச் செய்தார்.

மூராத்தின் அரண்மனைக்குள் நுழைந்ததும் தன் மனைவி ஜோசைப்பைனின் மகன் யூஜினை, மூராத்தின் மனைவியிடம் அனுப்பி தேவையான வசதிகள் செய்து தரப்படும் என்றும், எவ்வித துன்பமும் வராது என்றும், அவளுக்கு எவ்வித மரியாதை குறைவும், இழுக்கும் ஏற்படாது என்றும் செய்தி அனுப்பினார்.

இதனை அறிந்த மூராத்தின் மனைவி எல்லையற்ற மகிழ்ச்சி அடைந்தாள். நெப்போலியனின் பெருந்தன்மை வியந்து பாராட்டினாள். நெப்போலியனின் பெருந் தன்மைக்காக யூஜீனுக்கு வைர மோதிரம் ஒன்றை அவள் பரிசாகக் கொடுத்தாள்.

## 35. நான்கு உபாயங்கள்

நெப்போலியன் போர்த் திறமையில் மட்டும் திறமைசாலி அல்லர், தான் வெள்ற நாட்டு மக்களின் அன்பைப் பெறுவதிலும் திறமையானவர். இவரது சாணக்கியத்தனம் கண்டு ஐரோப்பா கண்டம் முழுவதும் பாராட்டு தெரிவித்தது.

எகிப்தை வென்று தன் கட்டுப்பாட்டில் கொண்டு வந்தார். ஒரு நாட்டைப் பிடிப்பது எளிது. பிடித்த நாட்டை போர்முறையில் நீண்ட நாட்கள் ஆட்சி செய்ய இயலாது. எப்போதும் வென்ற நாடுகளில் நான்கு உபாயங்களை நெப்போலியன் கையாள்வார். இதே நடைமுறையை

எகிப்திலும் அமல் செய்தார். மற்ற நாடுகளிலும் அமல் படுத்தினார்.

1. மக்களின் மத உணர்வுகளில் தலையிடாமை.
2. பெண்களுக்குப் பாதுகாப்பு அளிப்பது.
3. கொள்ளையடித்தல், சூறையாடுதல் நடவடிக்கையில் ஈடுபடாமல் இருப்பது.
4. உள்நாட்டு பிரமுகர்களையும், வல்லுநர்களையும், கல்விமான்களையும் அரவணைத்தல். அவர்கள் மூலமே வெற்றி பெற்ற நாட்டை ஆட்சி செய்தல்.

மேற்கூறிய நான்கு நெறிமுறைகளையும் நெப்போலியன் கடைபிடித்ததனால் தான் ஐரோப்பிய நாடுகளையும் ஏன் ஆப்ரிக்க நாடுகளையும் அவரால் வெல்ல முடிந்தது.

இத்தகைய உத்திகளினால்தான். 18ஆம் நூற்றாண்டின் துவக்கத்திலும், ஐரோப்பா கண்டம் முழுவதையும் அச்சமூட்டி, அடிமைப்படுத்தி, அலற வைத்து வெற்றிக் கொடியை நெப்போலியனால் நாட்ட முடிந்தது.

இத்தகைய உபாயங்களினால்தான் உலக வரலாற்றில் நெப்போலியனுக்குத் தனி இடம் கிடைத்தது. நெப்போலியன் பெயர் வீரர்கள் வரிசையில் முதலாவதாகத் திகழ்கிறது.

## 36. குடி உயர கோனுயரும்

**எ**கிப்து நாட்டை வென்று அங்கு அரசாட்சி செய்து வந்தார் நெப்போலியன். எகிப்து மக்களுடன் உறவினர்கள் போல பிரெஞ்சு வீரர்கள் ஒத்தும் உதவியும் வந்தனர்.

ஒருநாள் கெய்ரோ நகரப் பிரமுகர்களோடு நெப்போலியன் பேசிக் கொண்டிருந்தார். அப்பொழுது ஒரு குடியானவனைக் கொன்று அவன் ஆடுமாடுகளைச் சில கயவர்கள் திருடிச் சென்றதாக செய்தி வந்தது.

நெப்போலியனுக்கு உடனே கோபம் வந்தது. அருகில் இருந்த அதிகாரியைப் பார்த்து, "300 குதிரைப் படைகளோடு சென்று அக்கயவர்களைப் பிடித்துக் கொண்டு வந்து என் முன் நிறுத்துக! என்று உத்தரவிட்டார்.

உடனே அருகில் இருந்த பிரமுகர்கள், "மன்னரே, அக்கயவர்கள் உங்கள் உறவினர்கள்" என்றனர். உடனே நெப்போலியன் "அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை. அந்தக் குடியானவனைப் பாதுகாக்கும் பொறுப்பைக் கடவுள் எனக்குத் தந்துள்ளார். உறவினைக் காட்டிலும் ஏழைக் குடியானவனே எனக்கு முதன்மையானவன்" என்று பதிலளித்தார்.

"குடி உயரக் கோனுயரும் கோனுயர நாடு உயரும்" என்பதை அறிந்தவர் நெப்போலியன். சமத்துவம், சகோதரத்துவம் இரண்டும் நெப்போலியனின் இரண்டு கண்கள். குடிமக்களுக்கு நியாயமாக நேர்மையாகப் பாரபட்சமின்றி நாட்டு மக்கள் அனைவர் மீதும் பற்றும் பாசமும் கொண்டிருந்தார்.

# 37. சமத்துவம்

அப்போது நெப்போலியன் எகிப்தில் தங்கி இருந்தார். அச்சமயத்தில் இத்தாலி நகரில் ஆக்ரி என்ற இடத்தில் ஒரு பழைமையான கோட்டைக்குள் பிரிட்டிஷ் இராணுவம் பிரங்கிகளுடன் பதுங்கி இருக்கும் செய்தி கிடைத்தது.

ஆக்ரி கோட்டையை நெப்போலியன் முற்றுகையிட்டார். கடும் போர் நடைபெற்றது. வாரக்கணக்கில் சண்டை நீடித்தும் ஆக்ரி நகரை நெப்போலியனால் கைப்பற்ற முடியவில்லை.

இத்தகைய சூழ்நிலையில் ஆக்ரி நகரை முற்றுகையிட்டிருந்த நெப்போலியனது வீரர் களிடையே "பிளேக்" என்ற தொற்று நோய் பரவியது. இரண்டாயிரம் வீரர்களுக்கு தனியாக மருத்துவ மனையே நிறுவி சிகிச்சை அளித்தார்.

இந்த நோயாளிகளின் அருகில் இருந்து கொண்டு தளபதி ஆறுதல் கூறினார். உற்சாகப்படுத்தினார். கொடிய தொற்று நோயாளிகளின் மத்தியில் அச்சப்படாமல் உரையாடினார். ஆதரவாகத் தடவிக் கொடுத்தார்.

இந்நகரில் தொடர்ந்து இருந்தால் பிளேக்நோய் மேலும் பரவக்கூடும் எனக் கருதிய தளபதி அங்கிருந்து மீண்டும் எகிப்து திரும்பினார். நோயாளிகளைக் கொண்டுச் செல்ல குதிரைகள் கிடைக்கவில்லை.

எனவே, ஒவ்வொரு நோயாளியையும் நான்கு வீரர்கள் வீதம் தூக்கிச் சுமந்து நடந்து செல்ல உத்தரவிட்டார். நெப்போலியனும் நடந்து சென்றார்.

"தளபதியே தாங்கள் குதிரை மேல் வரலாமே?" எனக் கேட்ட வீரர்களிடம் மற்ற எல்லோரையும் போல் நானும் நடக்கிறேன் என்று நடந்து சென்றார்.

ஐரோப்பா கண்டத்தையே நடுங்க வைத்துக் கொண்டிருந்த ஒரு மாபெரும் வீரத் தளபதி, தனது போர் வீரர்களுடன் சமமாக நடந்து சென்றது அவரது சமத்துவத்தைக் காட்டும் நிகழ்ச்சியாக அமைந்தது.

## 38. மன்னிக்கத் தெரிந்த உள்ளம்

**எ**கிப்திலிருந்து சுமார் 1½ வருடங்கள் கழித்து பிரான்ஸ் நாட்டுக்கு நெப்போலியன் திரும்பினார். பிரான்ஸ் நாட்டு பத்திரிக்கையில் நெப்போலியனின் வருகைப் பற்றிய செய்திதான் தலைப்புச் செய்தியாக இருந்தது. நெப்போலியன் தன் மனைவி ஜோசைப்பைன் வீட்டில் இருப்பார் என்ற ஆசையுடன் வந்து கொண்டிருந்தார்.

தனது வீட்டை நெருங்கியவுடன் வீட்டு வாசலில் யாரோ நிற்பதை மனைவி ஜோசைபைன் தான் எதிர் பார்த்து காத்திருக்கிறார் என வேகமாக நடந்தார். ஆனால் அவரது அன்னையார்தான் மகனை வரவேற்றார்.

எகிப்தில் இருந்தபோது தனது ஜோசைபனைன் தனக்கு கடிதம் எழுதாதது குறித்தும் அவரது நடத்தை பற்றியும் கோபத்தில் இருந்தார். எரிகிற நெருப்பில் எண்ணெய் ஊற்றுவது போல், ஜோசைப்பைன் நடத்தைகள் பற்றி உறவினர்களும், அவரது அன்னையும் நெப்போலியனிடம் கோள் மூட்டினார்கள். மாமியார் இட்டத் தீ பற்றிக் கொண்டது.

கோபமுற்ற நெப்போலியன் ஜோசபைன் வீட்டின் கதவைத் தட்டினார். உரக்க தனது கணவனை அழைத்தாள். பயன் இல்லை, தனது மகன் யூஜின் மற்றும் மகள் ஹோர்டன்ஸ் ஆகியோரின் பெயர்களை சொல்லி அழைத்தாள்.

“எத்தனையோ போர்க்களங்களில் ஆயிரக் கணக்கான பல சாலிகளை வென்று வீழ்த்தி உள்ளேன். ஒரு ஒழுக்கங்கெட்டவள் என்னை வீழ்த்தப் பார்க்கிறாள்” என்று ஆத்திரம் கொண்டார். இரவு முழுவதும் கதவைத் திறக்கவே இல்லை.

ஆனால் ஜோசைப்பன் மனம் தளரவில்லை. தளபதி நல்லவர். “என்னை உயிருக்குயிராய் நேசிப்பவர்தான். மாமியாரும் மற்றவர்களும் இல்லாததும் பொல்லாததும் சேர்ந்து இவர் மனதை மாற்றிவிட்டனர்” என்று ஜோசைப்பைன் சிந்தித்துக் கொண்டிருந்தார். ஆனால் நெப்போலியன் அன்று இரவு முழுவதும் தூக்கமின்றி கதவருகில் படுத்திருந்தார்.

கோபம் அடங்கியதும் அதிகாலையில் கதவைத் திறந்தார். மோகனப் புன்னகையை கணவன் மீது வீசிக் கொண்டு வீட்டில் நுழைந்தாள் மனைவி.

**"ஊடுதல் காமத்திற்கு இன்பம் அதற்கின்பம்
கூடி முயங்கப் பெறின்"**

குடும்ப வாழ்க்கையில் ஊடுதலும் உண்டு. கூடுதலும் உண்டு. எவர் விட்டுக் கொடுக்கிறாரோ அவரே வெல்வரர். விட்டுக் கொடுத்தார். மன்னித்தார். வெற்றி அடைந்தார் நெப்போலியன்.

# 39. மனக் கவலைக்கு மருந்து

**மா**வீரன் இதயத்தில் இரக்க குணமே மிகுந்திருந்தது. போர் முனையில் பகைவர்களைப் புறமுதுகு கண்டு ஓடச் செய்யும் அவனது நெஞ்சம் மிகவும் மெல்லியது. முல்லைக்குத் தேர் தந்த பாரியின் குணம் கொண்டவர். வாடிய பயிரைக் கண்ட போது வாடும் இரக்க குணம் கொண்டவர்.

ஒரு சமயம் போர்க்களத்தில் வெற்றி பல கண்ட மாவீரன் முகவாட்டத்துடன் இருக்கும் ஒரு வீரனை பார்த்தார். வீரனின் வாட்டத்திற்குக் காரணம் கேட்டார். தளபதியோ நாம் பல வெற்றிகள் பெற்று வருகிறோம். ஆனால் கிழிந்த உடுப்புகள் தானே உடுத்தியிருக்கிறோம். நல் உடுப்புக்கள் நமக்கு இல்லையே? என்று வருத்தப்பட்டான்.

வீரனின் கவலை நெப்போலியனின் மனதைக் கலக்கமடையச் செய்து விட்டது. வீரன் சொல்வது சரியான நியாயம்தான்! ஆனால் இப்போதுள்ள சூழ்நிலையில் நெப்போலியனால் ஒன்றும் செய்ய இயலாது. இருப்பினும் அவ்வீரனின் வாட்டத்தைப் போக்க நினைத்தார் நெப்போலியன்.

புறநானூற்று வீரத்தாய் கூறியதுபோல் நெப்போலியனும் வீரனிடம் வீரம் செறிந்த வார்த்தைகளைக் கூறினார். நீ கிழியாத உடைகள் அணிந்தால் உன் உடலில் மார்பில் இருக்கும் வீரத் தழும்புகளை இந்த உலகம் எப்படிப் பார்க்க முடியும்? மதிக்க முடியும்? பெருமைப்பட முடியும்? போற்ற முடியும்? எனவே, கிழிந்த ஆடையை அணிந்திருப்பதற்குப் பெருமைப்படு வீரனே! என்று அவ்வீரனைச் சமாதனப்படுத்திச் சென்றான்.

மனக்கவலையை அடைந்த வீரனுக்கு, கவலையைப் போக்கும் மருந்தாகச் சமயோசிதமாக இனிய சொற்களையே பதிலாகத் தந்தார் நெப்போலியன். இத்தகைய பண்புகளின் உறைவிடமாக நெப்போலியன் திகழ்ந்தார்.

## 40. வெற்றியின் இரகசியம்

நெப்போலியன் மூன்றில் இரண்டு பங்கு போரில் தோற்றவர்தான். ஆனால் அவருடைய வெற்றிகள் அனைத்தும் தன்னம்பிக்கையும், துணிவையும், வீரத்தையும், விவேகத்தையும் அடிப்படையாகக் கொண்டவையாகும். அவரது வெற்றிகள் அவரது நுண்ணறிவாலும் போர்த் தந்திரத்தாலும் கிடைத்தவையாகும்.

ஒரு சமயம் ஒரு போரில் நெப்போலியன் படைகள் பெரிய வெற்றி பெற்றன. வெற்றியின் களிப்பில் இராணுவ தளபதி ஒரு அறிக்கையைத் தயாரித்தார்.

நெப்போலியனைப் புகழ்வதாகக் கருதி அந்த அறிக்கை தயாரிக்கப்பட்டிருந்தது.

ஒரு சிறிய படை கொண்டு எதிரியின் பெரும்படையைத் தோற்கடித்து மாபெரும் வெற்றி பெற்றுள்ளார் நெப்போலியன் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

அறிக்கையைப் படித்து ஆத்திரம் அடைந்தார் நெப்போலியன். உடனே அந்தத் தளபதியை வேலையை விட்டு நீக்கிவிட்டார்.

"ஒரு சிறிய படையைத் தான் நாம் வைத்திருக்கிறோம் என்ற இராணுவ இரகசியத்தை காப்பாற்ற தெரியாத தளபதி நமக்கு எதற்கு?" என்று கேட்டாராம் நெப்போலியன்.

படை சிறிதாக இருந்தாலும் வீரமும், சிறந்த தலைமையும், விவேகமும், ஆற்றலும் சமோயசிதமும் கொண்ட படையின் ஊக்கமும், இராணுவ இரகசியங்களும் தான் நெப்போலியனின் வெற்றியின் இரகசியமாகும். ஒரு படைக்கு வேறெதையும் காட்டிலும் அதிகமாக வெற்றியைத் தரும் இரகசியம் குறித்து நெப்போலியன் பின்வருமாறு கூறியுள்ளார்.

"உலகமே ஒரு போர்க்களம்; அதில் நம் வாழ்க்கையும் ஒரு போராட்டம். போராட்டத்தின் வெற்றிக்காக நாம் ஏந்தும் ஆயுதம் எது தெரியுமா? வெற்றி பெறுவோம் என்ற திடமான எண்ணமும், நம் பலத்தில் நாம் கொண்ட நம்பிக்கையுமே."

# 41. தாயின் எச்சரிக்கை

நெப்போலியன் இத்தாலி நாட்டை தன் கட்டுபாட்டில் கொண்டு வந்திருந்தார். இத்தாலி நாட்டுக்கு உட்பட்ட ரோமாபுரிக்கும் சக்வர்த்தியாக முயற்சி செய்தார்.

போப் ஆண்டவர் கிறிஸ்துவ மதத்திற்கு மட்டுமே அதிகாரம் கொண்டவராய் இருக்க வேண்டும். அரசாங்க நிர்வாகத்தில் தலையிடக் கூடாது என்று நெப்போலியன் எண்ணினார்.

போப் ஆண்டவரின் புனிதத் தன்மையை விட தனது வாக்குத்தான் அதிக வலிமை உண்டு என்று கருதினார்.

"ரோமாபுரியில் போப் ஆண்டவர் தனக்கு இடையூறு செய்தால் அவரை ரோமின் பிஷப்பாக பதவி இறக்கம் செய்வேன் என்று பேசி வந்தார்.இச்செயல் கடைசி வரை கிறிஸ்துவ எதிர்ப்பு மதவாதி என்ற அவப்பெயரை உண்டாக்கியது. இன்றும் கூட கிறிஸ்துவ மதத்துக்கு எதிரானவர் என்ற கருத்தும் சிலருக்கு உண்டு. அதனை அப்படியே ஏற்கமுடியாது என்பவர்களும் உண்டு.

மதபோதகரை நாடாளவிடக்கூடாது. போப் பாண்டவரிடம் அளவு கடந்த அதிகாரங்கள் இருக்கக் கூடாது. இத்தாலி, ஜெர்மன், போலாந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகளில் இருக்கும் தேவாலயங்களுக்கு நோட்டிஸ் அனுப்பப்போவதாகவும் சமயக் கூட்டம் ஒன்றை நடத்தப் போவதாகவும் அறிவித்தார். ரோமாபுரியைத் தனது பேரரசின் ஒரு பகுதியாக்க விரும்பினார்.

போப்பாண்டவரும் நெப்போலியனுக்கு பயந்து, அவருக்கு **"மேற்கு சாம்ராஜ்ய சக்ரவர்த்தி"** என்று முடிசூட்டினார்.

போப்பாண்டவரும் நெப்போலியனும் மோதுவதை அவரது தாய் ரமோலிக்கு பிடிக்கவில்லை. மகனின் போக்கு குறித்து கலக்கமுற்றாள். வேதனையடைந்தாள். மகனின் மண்ணாசையைக் கண்டித்தாள்.

"மகனே! நீ பேராசைப்படுவது பெருநஷ்டத்தை நோக்கிச் செல்கிறாய். என் மனதில் உள் உணர்வு உனக்கு இந்த எச்சரிக்கையைச் செய்கிறது. உனது பேராசையால் நீ மட்டுமல்ல நமது குடும்பத்திற்கே பேராபத்து நிகழப்போகிறது" என்று எச்சரித்தாள் அன்னை ரமோலி.

**ஏழுபிறப்பும் தீயவை தீண்டாபழிபிறங்காப்**
**பண்புடைய மக்கட் பெறின்.**

என்ற குறளின் கொள்கைப்படி தனது புதல்வனுக்குப் பழி வரக்கூடாது என்று அஞ்சினாள் தாய். தாயின் பாசம், வேறு எந்தப் பாசத்திற்கும், ஈடு இணையாக முடியாதல்லவா?

## 42. முடி சூட்டும் விழா

பிரெஞ்சு நாட்டு மக்கள் திறமைசாலியான தளபதி நெப்போலியனைத் தங்கள் நாட்டு அரசராக்க விருப்பப்பட்டார்கள். இதனால் சுற்றுப்புற அரசர்கள் அடங்கிப் போவார்கள். புரட்சிக் கருத்துக்களையும் பரப்ப முடியும் என்று மக்கள் நம்பினர். நெப்போலியனும் தன்னைப் பிரெஞ்சு நாட்டின் மன்னனாக முடிசூட்டிக் கொள்ள ஆசைப்பட்டார்.

முடிசூட்டும் விழா நடைபெறுவதற்கு நான்கு மாதங்களுக்கு முன்பே நெப்போலியனும் அவரது குடும்பத்தினரும் அரச மரபினரது பழக்க வழக்கங்களில் பயிற்சி பெற்றனர். இதற்கு முன்பு மன்னர்கள் போப்பாண்டவரிடம் போய் முடிசூட்டிக் கொண்டு ஆசிபெற்று தங்கள் நாடு திரும்புவது வழக்கம். இந்த மரபு நெப்போலியன் விஷயத்தில் மாறிப்போனது. நெப்போலியனுக்கு முடிசூட்ட ஏழாவது பயஸ் ரோமிலிருந்து பாரிஸ் நகருக்கு வந்தார். போப்பாண்டவரை பிரெஞ்சு மக்கள் மரியாதையுடனும் ஆர்வத்துடனுன் வரவேற்றனர். முடிசூட்டும் விழா ஏற்பாடுகள் பிரமாதமாகச் செய்யப்பட்டிருந்தது. பிரெஞ்சு மக்கள் அனைவரும் பாரிசில் குழுமியிருந்தனர்.

1804 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 2ஆம் நாள் முடிசூட்டும் விழா நாத்திரிதாம் மாதாக் கோயிலில் நடைபெற்றது. நெப்போலியன் மனைவி ஜோசைப்பைன் மற்றும் தளபதிகளுடனும் மற்ற பரிவாரங்களுடனும் மாதா கோயில் வந்தடைந்தார்கள். உள்ளே நுழைந்த நெப்போலியன் போப்பாண்டவர் முன்னிலையில் மண்டியிட்டு வணங்கினார்.

முடிசூட்டு விழா தொடங்கிற்று. தன் முன்னே மண்டியிட்டிருக்கும் நெப்போலியனுக்கு மகுடாபிஷேக எண்ணெயைப் போப் வார்த்தார். செங்கோலை கையில் எடுத்தார். நீண்ட நேரம் மண்டியிட்டிருப்பது நெப்போலியனுக்குப் பிடிக்கவில்லை. பக்கத்திலிருந்த முடியை எடுத்து தன் தலையில் தானே சூட்டிக் கொண்டார். மற்றொரு மலர்வளைய முடியை தன் மனைவி ஜோசைப்பைன் தலையில் சூட்டினார். எழுந்து சென்று சிம்மாசனத்தில் அமர்ந்தார். போப் சக்ரவர்த்தி

நெப்போலியனை ஆசிர்வதித்தார். வாத்தியங்கள் முழங்கின. முடிசூட்டுவிழா முடிந்தபின்பு நெப்போலியன் தன் ராஜ பரிவாரங்களுடன் அரண்மனைக்குத் திரும்பினார்.

## 43. வீரனின் பயம்

தனது ராணுவ வீரர்கள் கண்டிப்பையும், கடமையுணர்வையும், ஒழுங்கையும், கடைப்பிடிப்பதில் கண்டிப்பாக இருந்தார். அரசு நிர்வாகத்தில் தகுதியும் திறமையும் இல்லாதவர்களைச் சில சமயம் நியமனம் செய்தது உண்டு. ராணுவத்தில் திறமைக்கும் உழைப்புக்கும்தான் முதலிடம் தருவார். நெப்போலியன் பெயரைக் கேட்டாலே அழுத குழந்தையும் வாய் மூடும் என்று ஐரோப்பா மட்டுமல்ல இங்கிலாந்திலும் மக்களிடம் பய உணர்வு கலந்திருந்தது.

படைகளின் முகாம்களை இரவு நேரத்தில் பார்வையிட்டு வருவது நெப்போலியனின் வழக்கமாகும். ஒரு நாள் இரவில் தம் படைகளைப் பார்வையிட்டுக் கொண்டு வந்தார். படைக் காவலன் ஒருவன் தூங்கிவிட்டான். நெப்போலியனின் காலடி சப்தம் கேட்டதும் திடுக்கிட்டு எழுந்தான் அக்காவலன்.

காவலன் கையில் துப்பாக்கி இல்லை. பயத்தின் காரணமாக அருகிலிருந்த பீரங்கியைத் துப்பாக்கியென கருதி தூக்கித் தன் தோள் மீது வைத்து நின்றான்.

இந்தக் காட்சியை நெப்போலியன் புன்சிரிப்போடு பார்த்துக் கொண்டே கடந்து சென்றார்.

பத்து பேர் சேர்ந்தும் தூக்கமுடியாத பீரங்கியை ஒரு வீரன் தனியே தூக்கித் தோளில் வைத்துக் கொண்டான். நெப்போலியன் மீது இராணுவ வீரர்கள் பயமும், மதிப்பும், மரியாதையும் கொண்டிருந்தனர். இதனால்தான் நெப்போலியன் மாபெரும் வெற்றிகளை அடைய முடிந்தது. இங்கிலாந்தில் அழுதபிள்ளைகள் நெப்போலியனின் பெயரைக் கேட்டால் வாய்மூடியதாம்.

## 44. ஜெர்மனிய இளைஞனின் வியப்பு

**த**ளபதி நெப்போலியன் பாரிஸ் நகரில் ஆட்சி மன்ற குழு உறுப்பினர்களுக்கு, பிரெஞ்சு நாட்டின் விடுதலையைப் போன்று மற்ற ஐரோப்பிய நாடுகளுக்குப் பெற்றுத் தர வேண்டும் என்று கூறினார். அதற்கான முயற்சியிலும் தீவிரமாகத் திட்டமிட்டுக் கொண்டிருந்தார்.

அப்போது பாரிஸ் நகரில் இருந்து ஜெர்மானிய இளைஞன் தளபதி நெப்போலியனின் பேச்சு, நடை உடை முதலியவற்றை எல்லாம் கவனித்துக் கொண்டிருந்தான். ஒரு நாள் இது குறித்து தன் தந்தைக்கு, பின்வருமாறு கடிதம் எழுதினான்.

"நமது மகா பிரடரிக் மன்னர் உயரம் கூட நெப்போலியன் வளரவில்லை. குட்டையான இவரின் தலை மிகவும் பெரியது. நெற்றி உயரமானது. இவர் மூக்கு கிரேக்கர்களின் மூக்கு போல் நீளமாயுள்ளது. இவர் எப்போதும் ஊக்கத்துடன் தேனீ போல் சுறுசுறுப்பாக

இயங்குகிறார். நீண்ட படிக்கட்டில் ஏறும்போது ஒரே தாவில் பல படிகளை கடந்து போகிறார். அடிக்கடி மனிதாபிமானம் குறித்து ஏராளமாகப் பேசுகிறார்."

நமது பேரறிஞர் அண்ணாவைப் போல், லால்பகதூர் சாஸ்திரியைப் போல் நெப்போலியனும் அகத்தியரைப் போல் உயரத்தில் குள்ளமாக இருந்தாலும் உள்ளத்தால் உயரமானவர்தான். மூர்த்தி சிறியதாக இருந்தாலும் நெப்போலியனின் கீர்த்தி பெரியது.

## 45. விசுவாசம்

**போ**ர்வீரன் நெப்போலியன் தொடக்கத்தில் போர்களை விரும்பினார். ஆனால் பின்னாட்களில் பலமுறை போர்களை வெறுத்தார். போரினால் வரும் உயிர் இழப்புகளை அறிந்து வேதனைப்படுவார். போரின் கொடுமைகளால் உறுப்புகளை இழந்தவர்கள், உடமைகளை இழந்தவர்கள், உயிர் துறந்தவர்கள், விதவைப் பெண்கள் போன்றவற்றை எண்ணி மனக் கலக்கமடைந்துள்ளார். அசோக சக்ரவர்த்தியைப் போன்று போரின் கொடுமைகளை அவரால் தாங்க முடியவில்லை. ஆனால் புலி வாலைப் பிடித்ததுபோல் பின்னாட்களில் போரை இவரால் விடவும் முடியவில்லை.

அன்று முழு பௌர்ணமி நிலவு. போர்க்களக் காட்சிகளைப் பார்வையிட்டு வந்தார் நெப்போலியன். பௌர்ணமி நிலவு வெளிச்சத்தில் நாய் ஒன்று நெப்போலியனின் கால்களை வருடி வருடி கால்களைச்

சுற்றிக் கொண்டிருந்தது. நாயை உற்று நோக்கினார் நெப்போலியன். நாய் சிறிது தூரம் ஓடி அங்கு நின்றது.

நாய் ஓடி நின்ற இடத்திற்குச் சென்றார். அங்கே போர் வீரன் ஒருவன் வீர மரணம் அடைந்திருந்தான். அவனுடைய நாய்தான் அது. போர் வீரனுடைய முகத்தை நக்கியது நாய். பின்னர் 'ஓ' வென்று ஊளையிட்டது. தன் எஜமான் வீரனின் மறைவு நாயினை நிலைதடுமாறச் செய்து கொண்டிருந்தது. நாயைப் போல் நன்றி காட்டுவது வேறு எவருமில்லை.

ஒருபுறம் நாய் படும் துன்பம் கண்டு நெப்போலியனை ஆனந்தத்திலும் அதிர்ச்சியிலும் ஆழ்த்தியது. நாயினுடைய எஜமான் விசுவாசம் நெப்போலியனின் மனதை மிகவும் பாதித்தது.

இரக்கமும் அன்பும் விசுவாசமும் கொண்ட நெப்போலியன் அன்று அடைந்த துன்பத்திற்கு அளவே இல்லை. அந்த நாயின் விசுவாசம் வாழ்நாள் முழுவதும் நெப்போலியன் மனதிலே இருந்து மறையவில்லை.

## 46. யானைக்கும் அடி சறுக்கும்

நெப்போலியன் சக்ரவர்த்தியாக முடிசூட்டிக் கொண்ட ஒரு ஆண்டுக்குப் பின்னர், நெப்போலியனுக்கு எதிராகத் தொடங்கிய போர் அவர் வாழ்நாள் முழுவதும் முடிவு பெறவில்லை.

நெப்போலியன், கடற்படை பலம் வாய்ந்த இங்கிலாந்தைத் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முயன்றார். **கண்டத் திட்டம்** போன்ற திட்டங்களாலும்

இங்கிலாந்தின் கடற்படை பலத்தை ஒடுக்க திட்டமிட்டார். இதனால் தனது கடற்படை பலத்தை வலுவுள்ளதாக்க நினைத்தார். ஆனால் வலிமையான கடற்படை அமைக்க போதுமான சாதனங்களும் நிபுணர்களும் கிடைக்கவில்லை.

ஒருசமயம், தனது கடற்படைத்தளபதி புலோவிடம் கடற்படை அணிவகுப்புக்கு உடனடியாக ஏற்பாடு செய்யும்படி உத்தரவிட்டார். ஆனால் புயல் காரணமாக தளபதி சக்ரவர்த்தியின் உத்தரவை செயல்படுத்தவில்லை. இதனால் கோபம் கொண்ட நெப்போலியன் தளபதியை அழைத்தார்.

"எனது உத்தரவுக்கு நீர் ஏன் கீழ்ப்படியவில்லை?" -என்று நெப்போலியன் கேட்டார். மாபெரும் சக்ரவர்த்திக்கு போர் முறைகள் தெரிந்திருக்கலாம். ஆனால் கால நிலை சரியில்லாத நேரத்தில் வீரர்கள் உயிரை நான் இழக்க மாட்டேன்" -என்று பதிலளித்தார் தளபதி.

"தளபதியே என் உத்தரவுக்குக் கீழ்ப்படிவது தான் உனது வேலையே தவிர, விளைவுகளை பற்றிய பொறுப்பும் அதிகாரமும் உனக்குக் கிடையாது".

"நான் உங்கள் உத்தரவுக்குக் கீழ்ப்படிய முடியாது". பெரிய பதட்டம் ஏற்பட்டது. எல்லோரும் பயந்தனர். கையில் சவுக்குடன் தளபதியை நெருங்கினார் சக்ரவர்த்தி. அஞ்சா நெஞ்சம் கொண்ட தளபதி வாளை உருவத் தயாரானான். சூழ்நிலையைச் சமாளித்துக் கொண்ட நெப்போலியன், தளபதியை 24 மணி நேரத்தில் ஹாலந்துக்கு நாடு கடத்தினார். உதவி தளபதியைக் கொண்டு தனது கடற்படை அணிவகுப்பு உத்தரவுகளை நிறைவேற்றச் சொன்னார். கடும்புயலில் அணிவகுப்பு நடைபெற்றது.

**“பகல்வெல்லும் கூகையைக் காக்கை இகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது”**

திருவள்ளுவரின் காலமறிதலை அறியாத நெப்போலியனது செயலினால் பல கப்பல்கள் கவிழ்ந்தன. கடற்படை வீரர்கள் இறந்தனர். சிலர் கரை சேர முயன்றனர். நெப்போலியன் முதலில் சென்ற கப்பலில் குதித்து தப்பித்துக் கொண்டார்.

இந்நிகழ்ச்சி மூலம் 'யானைக்கும் அடி சறுக்கும்' என்ற பழமொழி நெப்போலியன் வாழ்வில் இருந்து நாம் அறிந்து கொள்ளமுடிகிறது.

# 47. மதிக்கத் தெரிந்தவன்

பதினெட்டாம் நூற்றாண்டில் இங்கிலாந்து நாட்டில் இருந்து 'ஜென்னர்' என்னும் அறிஞர் அந்தக் காலத்தில் பயங்கரமான கொள்ளைநோயாக இருந்த அம்மை நோயைக் கட்டுப்படுத்தும் சிகிச்சை முறையைக் கண்டுபிடித்தார். அவர் தான் 'வைசூரி' நோய்த் தடுப்புக்காகவும் அம்மைகுத்தும் முறையை அறிமுகப்படுத்தினார்.

அப்போது பிரான்ஸ் நாட்டை ஆண்டுவந்த நெப்போலியனுக்கு டாக்டர் ஜென்னர் மீது அளவு கடந்த அன்பும், மதிப்பும், மரியாதையும் உண்டு. ஒரு சமயம் டாக்டர் ஜென்னரின் நண்பர்களான இரண்டு ஆங்கிலேயர்களைப் பிரெஞ்சு அரசாங்கம் கைது செய்துவிட்டது. “அவர்கள் தமது நண்பர்கள் என்றும், குற்றமற்றவர்கள் என்றும், அவர்களை விடுதலை செய்து இங்கிலாந்து நாட்டுக்கு அனுப்ப வேண்டும்” என்றும்

டாக்டர் ஜென்னர், நெப்போலியனுக்குக் கோரிக்கைக் கடிதம் ஒன்றை அனுப்பினார்.

அந்தக் கோரிக்கைக் கடிதத்திலிருந்து கையெழுத்தை நெப்போலியன் சரியாகக் கவனிக்க வில்லை. "கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படவில்லை" என்று அனுப்புவதற்காக வைத்திருந்தார்.

தற்செயலாக அந்தப் பக்கம் வந்த நெப்போலியனின் துணைவியார் ஜோசைப்பைன் அந்தக் கடிதத்தைப் படித்துவிட்டு அதிர்ச்சியடைந்தார். "இந்த வேண்டுகோள் டாக்டர் ஜென்னரிடமிருந்து வந்திருக்கிறது என்பதைத் தாங்கள் கவனிக்க விலலையா?" என்று சொன்னாள். "அப்படியா?" என்று அந்தக் கடிதத்தை எடுத்துப் பார்த்த நெப்போலியன், "நல்ல வேளை நான் மிகப் பெரிய தவறு செய்ய இருந்தேன். டாக்டர் ஜென்னர் உலக மக்களுக்காக எவ்வளவு பெரிய தொண்டு செய்தவர். உலக மக்களின் துன்பத்தைத் துடைத்தவரின் கோரிக்கையை எவ்வாறு புறக்கணிக்க முடியும்" என்று தன் தவற்றை உணர்ந்தார். உடனே டாக்டர் ஜென்னரின் நண்பர்களான பிரிட்டிஷ்காரர்களை விடுதலை செய்து அவர்களை மரியாதையுடன் இங்கிலாந்து நாட்டுக்கு அனுப்புமாறு உத்தரவிட்டார்.

சமுதாயத்திற்குச் சேவை செய்யும் உள்ளத்தை, சேவை செய்யும் உள்ளம் தான் அறிய முடியும். உணர முடியும். தொண்டே தொழுகையாக வாழ்ந்த நெப்போலியன் மற்றவர்களை மதிக்கத் தெரிந்த பண்பாளர்.

# 48. தாயின் விருப்பத்தை நிறைவேற்றல்

நெப்போலியன் தன் அன்னை ரமோலியின் அறிவுரைகளைக் கேட்டு அடங்கி வந்ததால்தான் உலகமே போற்றும் உன்னத நிலையை அடைந்தார்.

சக்ரவர்த்தி நெப்போலியன் தாயின் மீது அளவு கடந்த பாசம் வைத்திருந்தார். தாயிற் சிறந்ததோர் கோயிலுமில்லை என்று அன்னையை வழிப்பட்டவர் நெப்போலியன். தாய் சொல்லைத் தட்டாதவர்.

நெப்போலியன் தாய் கார்சிகாத் தீவில் பிறந்தவர். தாய் லதீதா குலப் பெருமையைப் போற்றுவதிலும் தன் பிள்ளை மீதும், பிறந்த ஊரின் மீதும் பிரியம் கொண்டவள்.

அப்போது கார்சிகாத் தீவுக்குக் "கார்டி" தலைநகராய் இருந்து வந்தது. அதற்குப் பதிலாக தான் பிறந்து வளர்ந்த அஜாஜியோ நகர் தலைநகராய் இருக்க வேண்டும் என்று ஆசைப்பட்டாள். தன் விருப்பத்தை மகன் நெப்போலியனிடம் கூறினாள்.

தாயின் விருப்பத்தை சக்ரவர்த்தி நெப்போலியன் உடனே நிறைவேற்றினார். தாய் பிறந்த ஊரையே கார்சிக்காவுக்கு தலைநகராக்கினார்.

**"நாட்டை நிர்வாகம் செய்ய பிறந்தவள் என் அன்னை"** என்று நெப்போலியன் அடிக்கடி கூறுவதுண்டு.

தன் மகன் தன் விருப்பத்தை நிறைவேற்றியதும் ஈன்ற பொழுதிலும் பெரிதும் மகிழ்ந்தாள் அன்னை லதீதா.

# 49. தலைக்கு வந்தது ........

நெப்போலியன் செல்வாக்கு நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே இருந்தது. பதவி மோகம் கொண்டவர்களும், பதவி இழந்தவர்களும் நெப்போலியனைக் கொல்வதற்கு முயற்சி செய்தார்கள். ஆனால் அந்த முயற்சிகள் ஒரு போதும் வெற்றி பெறவில்லை.

அன்று கிறிஸ்துமஸ் தினம். நெப்போலியன் மனைவி ஜோசைப்பைன் நாடகம் பார்க்க ஆசைப்பட்டாள். கணவரையும் அழைத்துக் கொண்டு இரண்டு கோச் வண்டிகளில் புறப்பட்டார்கள்.

முதலில் சென்ற கோச்சில் நெப்போலியன் அமர்ந்திருந்தார். பின்னர் வரும் அடுத்தக் கோச்சில் ஜோசப்பைனும் அவளது மகளும் இருந்தனர். நாடகத் தியேட்டரை நோக்கி கோச்சுக்கள் சென்று கொண்டிருந்தன.

வழியில் குறுகலான தெருவைக் கோச் வண்டிகள் கடக்க முற்பட்டன. பாதையை மறைத்துக் கொண்டு கட்டை வண்டி ஒன்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. இரண்டு கோச்சுகளும் கடந்த பின்னர், கட்டை வண்டியில் இருந்த வெடிகுண்டு பலத்த ஓசையுடன் வெடித்தது.

நெப்போலியனும், ஜோசபைனும், மகளும் அதிர்ஷ்டவசமாகத் தப்பினார்கள். தலைக்கு வந்தது தலைப்பாகையோடு சென்ற கதையாகியது.

இந்நிகழ்ச்சி குறித்து விசாரணைக் கமிஷன் நியமிக்கவும், விசாரணை நடத்தவும் கூறிய

ஆலோசனைகளை நிராகரித்து விட்டார் மாவீரன் நெப்போலியன்.

தலைக்கு வந்தது தலைப்பாகையோடு சென்றது போல் வெடிகுண்டு விபத்தில் இருபது உயிர்கள் மட்டும் பலிகொண்டு விட்டு நெப்போலியனின் உயிரைக் காப்பாற்றி விட்டது.

# 50. குழந்தை ஏக்கம்

**குழல்இனிது யாழ்இனிது என்பர் தம்மக்கள்**
**மழலைச் சொல் கேளாதவர்.**

தனக்குப் பின் தன் வாரிசை உருவாக்கிட ஆசைப்பட்டார் நெப்போலியன். குழந்தையின் ஏக்கம் அவருக்கு ஏற்பட்டது.

நெப்போலியன் மனைவி ஜோசைப்பைன், இறந்து போன அவளது கணவர் மூலம் யூஜன் என்ற மகன் இருந்தான். இவனிடம் அதிகமாகப் பாசம் காட்டினார் நெப்போலியன்.

இவனை அரசனாக்கி, பல்கேரியா நாட்டு இளவரசியைத் திருமணம் செய்து வைத்தார், இளவரசி கருவுற்றதும் நெப்போலியன் மகிழ்ச்சியடைந்தார்.

ஒருநாள் அவர் தன் மருமகளிடம் “மருகளே! எனக்கு ஒரு ஆண் மகனைப் பெற்றுக்கொடு. ஆண்மகன் பிறக்க ஒரு மருந்துண்டு. நான் சொல்வதை நம்பு. கலப்பில்லாத தூய மதுவை நீ தொடர்ந்து பருகிவந்தால் நிச்சயம் ஆண் குழந்தை பிறக்கும்” என்றார்.

நெப்போலியன் சொன்னபடி மருமகள் செய்தாளா என்பது தெரியவில்லை. ஆனால் பெண் மகளைப் பெற்றெடுத்தாள்.

"முதலில் பெண் குழந்தைப் பெற்றவள் பிறகு பத்துப் பன்னிரண்டு குழந்தைகளுக்குக் குறையாமல் பெறுவாள்" என்று நெப்போலியன் ஆசிர்வதித்தார்.

நெப்போலியன் மக்கட்பேறில் அதிகளவு நாட்டம் கொண்டிருந்ததை இதனால் விளங்க முடிகிறது.

## 51. விவாக இரத்து

**ச**க்ரவர்த்தி நெப்போலியனுக்குத் தனது போனப்பாட்டு அரசு பரம்பரை ஒன்றை நிறுவ வேண்டும் என்று ஆசை வந்தது. மனைவி ஜோசைப்பைனுக்கு வயதாகி விட்டது. நெப்போலியன் ஜோசைப்பைனை உயிரினும் மேலாக நேசித்தார். நெப்போலியனுக்கு வாரிசு உண்டாக வேண்டுமென மக்களும் விரும்பினர். தனக்கும் ஜோசைப்பைன் மூலம் குழந்தை பிறாக்காத ஒரே காரணத்தால், அவளை விவாக இரத்து செய்து விட்டு மறு திருமணம் செய்ய முடிவு செய்தார்.

தாய், உடன் பிறப்புகள், உறவினர்கள் அரண்மனையில் கூடி இருந்தனர். பத்து வருடம் டுயல்லரி அரண்மனையில் வாழ்ந்த ஜோசைப்பைனும் சோகமாய் அருகே உட்கார்ந்திருந்தாள்.

"சக்ரவர்த்தினிக்கு ஆண்மகன் பிறக்க இனி வழியில்லை. அதனால் அவளை விவகாரத்து செய்ய வேண்டிய நிலை எனக்கு ஏற்பட்டுள்ளது. உயிரினும்

மேலாக நேசித்த என் கையாலே அவளுக்கு முடிசூட்டினேன். என் மீது அபிமானம் கொண்டிருந்த அவளைப் பிரெஞ்சு நாட்டின் நலத்திற்காக அரசிப் பதவியைத் துறக்க வேண்டியிருப்பது பெரிய தியாகமாகும்." என்று சொல்லிவிட்டு நெப்போலியன் விவாக விலக்குப் பத்திரத்தில் கையெழுத்துப் போட, ஜோசைப்பைனும் கையெழுத்திட்டாள். ஆனால் மனதால் இணைந்தே இருந்தனர். உற்றார் உறவினர்கள் சாட்சி கையொப்பமிட்டனர்.

"ஜோசைப்பைன் பல வகையிலும் தகுதியும் புகழும் கொண்டவள். எனக்கு எல்லா வகையிலும் இன்பம் கொடுத்தாள். அவளை நான் மறப்பது முடியாது. உடலால் இன்று வேறுபடுகிறோம். உள்ளத்தால் இணைந்தே உள்ளோம். இந்தத் தண்டனையை நாட்டின் நலனை முன்னிட்டு நாங்கள் ஏற்கிறோம்" என்று நெப்போலியன் கூறினார், அவளுக்கு 30 லட்சம் பிராங்குகள் மானியம் வழங்கினார். 4 லட்சம் மதிப்புள்ள நகைகளையும் ரத்தினங்களையும் கொடுத்து அனுப்பி வைத்தார்.

மறுநாள் டுயல்லரி அரண்மனையை விட்டு மால்மைசன் மாளிகைக்கு ஜோசைப்பைன் சென்று விட்டாள். அன்று இரவு நெப்போலியன் தூங்கவே இல்லை. 15 ஆண்டுகள் தன் வாழ்க்கையில் பங்கு பெற்ற துணையை நினைத்து மனம் கலங்கினார். மூன்று நாட்கள் சரியாகச் சாப்பிடவில்லை. யாருடனும் பேசவில்லை. எந்தப் பணிகளையும் செய்யவில்லை.

நான்கு நாட்கள் கழித்து மால்மைசன் மாளிகையில் ஜோசைப்பைனை சந்தித்தார் நெப்போலியன்.

"கவலை தரும் எண்ணங்களுக்கு இடம் கொடுக்காதே!" நான் நேசித்து போற்றிய உடம்பை ஆரோக்யமாக வைத்துக்கொள்" உன்னைப் பிரிந்தபின் என் அரண்மனை வெறிச்சோடி உள்ளது. உன்னிடம் எனக்கு எப்போதும் அன்பு உண்டு என்று சொல்லி வந்தார்.

இந்நிகழ்ச்சிகள் நெப்போலியனின் அன்பு, பாசம், கண்ணியம், பெருந்தன்மை போன்ற நற்குணங்களைக் காட்டுகின்றன.

# 52. வாளின்மீது ஆசை

**பி**ரஷ்ய நாட்டு பிரடரிக் உலக வரலாற்றில் முக்கியத்துவம் பெற்றவர். இவரிடம் நெப்போலியனுக்கு அளவற்ற மதிப்பு உண்டு. ராணுவ அணிவகுப்பு, தாக்குதல்கள், போர்முறைகள், அபாரத் தந்திரங்கள் ஆகியவற்றுக்கு பிரடரிக் மன்னனையே நெப்போலியன், முன் உதாரணமாகக் கொண்டிருந்தார்.

பிரஷ்யாவை வெல்ல நினைத்தார். போர் தொடுத்தார். 1806 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 14 ஆம் தேதி போர் நடைபெற்றது. ஜீனா என்ற இடத்தில் போர் நடைபெற்றது. தனது போர் தந்திர நடவடிக்கையினால் பிரஷ்யாவை வெற்றி கொண்டார் நெப்போலியன்.

இந்த வெற்றிக்குப் படைபலம் மட்டும் காரணமல்ல. நெப்போலியனின் திட்டம், வீரர்களின் அணிவகுப்பு, நடமாட்டம், காலமறிந்து தாக்கியது, வீரர்களின் உற்சாகம், தலைமை தாங்கும் பண்பு ஆகியவையே காரணமாக அமைந்தன என்று வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றனர்.

நெப்போலியனுக்கு, பிரடரிக் சக்ரவர்த்தியிடம் அளவுக்கதிகமான மதிப்பும், மரியாதையும் உண்டு. அவரைத் தெய்வமாகப் போற்றி வந்தார். வெற்றி பெற்றதும் அவர் வாழ்ந்த அரண்மனைக்குள் பெருமிதத்துடன் நுழைந்தார். பிரடரிக் வைத்திருந்த பொருள் எதையாவது தான் வைத்திருக்க வேண்டும் என்று அவரது நீண்டநாள் கனவு அன்று நினைவாகியது.

அரண்மனையில் மாமன்னர் பிரடரிக் வைத்திருந்த வாள் ஒன்று இருந்தது. அதை எடுத்து நெப்போலியன் அளவற்ற மகிழ்ச்சியுடன் பிரியமுடன் வைத்துக் கொண்டார். தனக்கு கிடைக்காத அரிய செல்வம் கிடைத்தாக எண்ணி மகிழ்ச்சி அடைந்தார்.

“பிரஷ்ய நாட்டு சிம்மாசனத்திற்கு ஈடாக அந்த வாளை மாற்றுவதற்குக்கூட நெப்போலியன் விரும்பவில்லை” என்று மாமன்னர் பிரடரிக் வாளின் மீது வைத்திருந்த ஆசையை வரலாற்று ஆசிரியர்கள் வியக்கின்றனர்.

“உலகத்திலேயே இரண்டு சக்திகள் உண்டு. ஒன்று வாள், மற்றொன்று ஆத்ம சக்தி” என்பார் நெப்போலியன்.

# 53. கொடை வள்ளல்

ஆஸ்திரியாவை வென்ற பின்னர் அதன் தலைநகர் வியன்னாவிலிருந்து நெப்போலியன் பாரீஸ் நகருக்குத் திரும்பிக் கொண்டிருந்தார். போகும் வழியில் ரஸ்டாட் என்ற நகரில் ஓய்வெடுத்தார். ஆஸ்திரிய நாட்டுப் பிரதிநிதிகள் இருவர் நெப்போலியனைக் கண்டு பேசினார்கள்.

தன்னைச் சந்தித்த அந்நிய பிரிதிநிதிகள் இருவரில் ஒருவருக்கு, நெப்போலியன் தங்க ஜரிகை இழைத்த தொப்பியைப் பரிசாக வழங்கினார். மற்றொரு ஆஸ்திரிய நாட்டுப் பிரதிநிதிக்காக தனது கைக்கடிகாரத்தைப் பரிசாக வழங்கினார்.

பஞ்சத்தில் வாழ்ந்து வந்த ஆஸ்திரிய நாட்டுப் பிரதிநிதிகள் இந்தப் பரிசுகளைப் பெற்றதும் பெரு மகிழ்ச்சியடைந்தனர்.

"தங்களது மன்னர் கூட இப்படி பரிசுகள் வழங்கியதில்லை. நமது மன்னரை விட இந்த தளபதி கம்பீரமானவர்" என்று அவர்கள் தங்களுக்குள் பேசிக் கொண்டனர்.

பரிசுகளை வழங்குவதில் கடையெழு வள்ளல்களைப் போலவும், அரபு நாட்டு கலிபா போலவும், நெப்போலியனும் வள்ளல்கள் வரிசையில் கொடைவள்ளல் என்ற பட்டம் பெற்றார்.

இது மட்டுமல்ல. அயல்நாட்டுப் பிரமுகர்களுக்கு நெப்போலியன் பரிசுகள் வழங்கியது நெப்போலியனின் சாணக்கியத்தனத்தைக் காட்டுவதாக அமைந்தது.

# 54. மாவீரனை எதிர்த்த பெண்

**த**னக்கு வாரிசு வேண்டும் என்பதற்காகத் தனது காதல் மனைவி ஜோசைபனை விவகாரத்து செய்தார் நெப்போலியன். பலநாடுகளிலும் தனக்குத் தகுந்த இளவரசியைத் தேடி வந்தார். ரஷ்ய இளவரசி மறுத்துவிட்டார்.

ஒரு நாள் நடன விருந்தில் ஒன்றில் கலந்து கொண்டார் நெப்போலியன். அங்கு வந்திருந்த கோமகளுடன் நடனமாடி விட்டு, அவளைத் தனியே அழைத்துச் சென்றார்.

"நான் விரும்பினால் எந்தக் கோமகளாவது என்னைத் திருமணம் செய்து கொள்ள இசைவு தெரிவிப்பாளா?" என்று கேட்டார்.

"நான் அறியேன்" என்று கோமகள் பதிலளித்தாள்.

"ஒரு கோமகள் பதவியில் நீ இருந்தால், எனது விருப்பத்துக்குச் சம்மதிப்பாயா?" என்று கேட்டார் நெப்போலியன்.

"நிச்சயமாக நான் மறுத்துவிடுவேன்" என்று பதில் சொன்னாள் அப்பெண்.

"அன்பு இல்லாமல் பேசுகிறாயே! என் விருப்பத்தை உன் கணவரிடம்சொல்லி, கோமகள் ஒருத்திக்கு எனக்கு ஏற்பாடு செய்வாயா?"

"இதைப்பற்றி, எங்கள் தூதுவரிடம் நீங்கள் பேசுவதுதான் நன்றாக இருக்கும்" என்று தைரியமாகப் பதிலுரைத்தாள்.

சக்ரவர்த்தியை எதிர்த்துப் பேசும் இந்தத் துணிவு, ஒரு கோமகளுக்கு உண்டானது புரட்சியால் உண்டான விளைவுகளில் ஒன்று என்று சரித்திர ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றனர்.

சக்ரவர்த்தி என்றும் பாராமல் தன் கருத்தைத் துணிச்சலாக வெளியிட்ட பெண்ணின் தைரியத்தை நெப்போலியனே பாராட்டினார்.

## 55. வாரிசும் 21 குண்டுகளும்

**த**னக்கும் நாட்டுக்கும் வாரிசு வேண்டும் என்று ஜெர்மானிய இளவரசி கார்னல் பெக் என்பவரை இரண்டாவது திருமணம் செய்து கொண்டார் நெப்போலியன். சாதாரண குடும்பத்தில் பிறந்த தான், அரச குடும்பத்தில் பெண் எடுத்து அதன் மூலம் அரசியல் வாரிசை உருவாக்க வேண்டும் என்ற நெப்போலியனின் எண்ணம் ஈடேறியது. மணமான மூன்று மாதங்களில் அரசி கருவுற்றாள்.

நெப்போலியன் தந்தையாவது குறித்து அளவற்ற மகிழ்ச்சியடைந்தார். இச்செய்தி நாடு முழுவதும் பரவிற்று. ஆண் மகன் பிறக்க வேண்டும் என்று நாடெங்கும் பிரார்த்தனையும் கோரிக்கைகளும் தொடர்ந்து நடந்தன. அரசிக்கு மகப்பேறு காலம் நெருங்கியது. பிரசவ வலியும் வந்து விட்டது. இந்த நிலையில், குழந்தையின் இருப்பு முறை சரியாக இல்லை என்றும் தாய்க்கோ குழந்தைக்கோ ஆபத்து என்றும் தெரிய வந்தது. இதையறிந்த நெப்போலியன் “நன்கு முறையாகக் கவனமாக மருத்துவம் செய்யுங்கள். தாய் உயிர் முக்கியம். கவனித்துக் கொள்ளுங்கள்” என்று உத்தரவிட்டார்.

இரண்டு மணி நேரத்திற்குப் பிறகு குழந்தை பிறந்தது. இந்த மகிழ்ச்சியான செய்தி குண்டு முழக்கம் மூலம் தெரிவிக்கப்பட்டது. இருபத்தொரு குண்டுகள் முழங்கப்பட்டன. என்ன குழந்தை என்று மக்களுக்குத் தெரியவில்லை. இருபத்து இரண்டாவது குண்டு முழங்கியதுடன் தான் இளவரசன் பிறந்திருக்கிறான் என்பதை அறிந்து மக்கள் கொண்டாடினர். அரண்மனை முன்பு மக்கள் கூடி தங்கள் மகிழ்ச்சியையும் ஆனந்தத்தையும் ஒருவருக்கொருவர் தெரிவித்துக் கொண்டனர்.

**"பெறுமவற்றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த**
**மக்கட்பே றல்ல பிற."**

என்ற குறளின்படி பிரெஞ்சு சாம்ராஜ்யத்தின் ஆண் வாரிசு தோன்றியது நெப்போலியனுக்கு மட்டுமல்ல பிரான்ஸ் நாட்டு மக்களுக்கே மட்டற்ற மகிழ்ச்சியைத் தந்தது.

## 56. போர்த் தந்திரங்கள்

ஒவ்வொரு போரைத் தொடங்கும் முன்னர் தேசப்படத்தை வைத்து நுணுகி ஆராய்வது நெப்போலியனின் பண்பு. அதில் ஊர், பெயர், நகர் பெயர், அவற்றில் இருப்பு நிலை, கால நிலை, ஆறு, ஓடைகள், இவற்றின் அகலம், நீளம் சாலைகளின் நிலைமைகள், தன்மைகள் ஆகியவற்றை நுணுக்கமாக ஆராய்ந்து பின்பே போர் தொடுப்பது வழக்கம்.

இத்தகைய திட்டங்களின் மூலமும், பகைவர்களின் படைகளைப் பிரிப்பது, சுற்றி வளைப்பது, மாற்றான் பலம்

குறைந்த இடத்தில் தாக்குவது, படைபலம் அதிகமாக இருக்கும் இடங்களில் நுழைந்து தாக்குவது ஆகிய போர்த் தந்திரங்கள் மூலமும் முதலில் பிற நாடுகளைக் கவர முற்படுவார். எதிரி தனக்கு ஒத்துவராவிட்டால் போரில் இறங்குவார். இதுதான் நெப்போலியனின் போர் முறை.

நெப்போலியனின் போர்த் தந்திரங்கள் மிகவும் உன்னதமானவை. போர் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது எதிரிப்படையுடன் சமாதானப் பேச்சு வார்த்தையில் ஈடுபடுவார். சமாதான முறையில் தனது லட்சியத்தைச் சாதித்துக் கொள்ள முயலுவார். சமாதானம் ஒத்து வராவிட்டால் போரில் இறங்குவார். வெற்றி பெற்ற பின்பும் அந்நாட்டவருடன் சமாதனத்துடன் தன் ஆட்சியை நடத்துவார்.

ஒரு சமயம் ஆஸ்திரியப்படையையும் ரஷ்யப் படையையும் முறியடிக்க முற்பட்டார். போர் 1865 ஆம் ஆண்டு அக்டோபர் 21-ல் நடைபெற்றது.

எதிரிப்படை எந்தெந்த பகுதியில் திசைகளில் உள்ளது என்றும் தெரிய வந்ததும் அளவு கடந்த மகிழ்ச்சியில் ஆர்ப்பரித்தார்.

மனோ தத்துவமுறையில் உள் மனதுக்கு முதலில் கட்டளைப் பிறப்பித்தார். பின்பு படைவீரர்களுக்கும் கட்டளையைப் பிறப்பித்தார். "எதிரிப்படைகள் நமது பிடியில் நன்கு மாட்டிக் கொள்ளப்போகின்றன" அந்தப்படைகள் நம்மிடம் தானாக வந்து சிக்கப் போகின்றன" "நம்மிடம் நன்கு அகப்பட்டுக் கொண்டார்கள்" "நாளை மாலையில் பகைவர்களின் படை அடியோடு அழியப்போகிறது" என்று கூறியே வெற்றியும் பெற்று விட்டார். எதை நினைக்கிறோமோ எதைக் கேட்கிறோமோ அதாக மாறுவது இயல்பு. தான்

நினைத்ததைப் போலவே மறுநாள் ரஷ்யப் படையையும் ஆஸ்திரியப் படையையும் ஆஸ்டர்லிஜ் சமவெளியில் தோற்கடித்து வெற்றி பெற்றார். தன்னுடைய தனித் திறமையாலும் முயற்சியாலும் நுண் அறிவாலும் தளராத முயற்சியாலும் ஐரோப்பாவுக்கே போர் முறைகளைப் புகட்டிய நெப்போலியனை ஆங்கிலேயர்களே போற்றுகின்றனர். இந்த உலகமே போற்றுகின்றது.

# 57. ஏக்கம்

புகழ் பெற்ற சக்ரவர்த்திகள், கலைஞர்கள், போன்றவர்கள் பெரிய இடத்தில் நன்கு மகிழ்ச்சியாக இருப்பதாக நம்மில் பலர் எண்ணுகிறோம். பல திரைப்பட கதாநாயக நாயகிகளுக்கும் புகழ் பெற்றவர்களுக்கும் சாதாரண மனிதர்களைப் போல் சுதந்திரமாகச் செயல்பட முடிவதில்லையே அமைதியாக இருக்க முடியவில்லையே என்ற ஏக்கம் வருவதுண்டு. மாமன்னர்கள் எல்லாம் முள் இருக்கையில்தான் அமர்ந்திருப்பார்கள். இதுபோன்ற ஏக்கம் நெப்போலியனுக்கும் ஏற்பட்டது.

ஒரு நாள் நெப்போலியனும் அவரது நண்பர் ஒருவரும் ஒரு வண்டியில் செயிண்ட் கிளப்புக்குப் பயணம் செய்து கொண்டிருந்தார்கள். பயணத்தின் போது "என்னுடைய அருமைப் புதல்வனையும் மனைவியையும் பிரிய நேரிட்டது. எனது நாட்டில் இருக்கும் ஏழை விவசாயிகளைப் பார்த்து நான் பொறாமைப்படுகிறேன். நாட்டிற்குச் செலுத்த வேண்டிய கடமையைச் செலுத்திவிட்டு, மனைவி மக்களுடன் ஏழை விவசாயி

மகிழ்ச்சியாக, அமைதியாக, நிம்மதியாக வாழ்கிறான். என் தலை எழுத்து மீண்டும் மீண்டும் நான் போர்க்களத்திலேயே கழிக்க வேண்டியிருக்கிறது என்று தனது ஏக்கத்தை அந்த நண்பனிடம் சொன்னார் நெப்போலியன். அக்கரைக்கு இக்கரைப் பச்சை என்ற பழமொழிதான் நினைவுக்கு வருகிறது.

# 58. பிரான்சின் தேவை என்ன?

**சோ**ம்பல் என்றால் என்ன என்று நெப்போலியனுக்குத் தெரியாது. முடியாது என்ற வார்த்தை தன் அகராதியில் இல்லை என்று உலகுக்கு உணர்த்தியவர். நெப்போலியனிடம் வீரமும் உண்டு. அரசியல் சாணக்கியமும் உண்டு. ஐரோப்பா கண்டத்தையே நடுநடுங்க வைத்த சக்ரவர்த்தியின் ஆட்சி ஆப்ரிக்காவிலும் பரவியிருந்தது.

நெப்போலியனிடம் ஒரு சமயத்தில் 30 இலட்சம் போர் வீரர்கள் இருந்தனர். இதில் 10 இலட்சம் பேர்கள் வெளிநாட்டில் இருந்து பிரெஞ்சு ராணுவத்தில் சேர்ந்தவர்கள். 60க்கும் மேற்பட்ட போர்களில் தலைமை தாங்கியவர் நெப்போலியன். இந்தப் போர்களில் கொல்லப்பட்ட வீரர்களின் எண்ணிக்கை 17 இலட்சமாகும்.

“சக்ரவர்த்தி நெப்போலியன் படையில் நானும் ஒரு வீரன்” என்று சொல்லுவதில் பெருமை கொண்டனர் மக்கள். ஒரு சமயம் நெப்போலியனிடம் “பிரான்சின்

தேவை என்ன?" என்று ஒருவர் கேட்டார். "தாய்மார்கள்" என்று பதிலளித்தார் நெப்போலியன்.

வீரர்களைப் பெற்றுத் தரும் தாய்மார்கள் தேவை என்பது நெப்போலியனின் கருத்து.

"பிரான்ஸ் தன் நிலையிலிருந்து உயர வேண்டுமானால் தாய்மார்கள் சிலர் இருந்தாலே போதும்" என்று கூறுவார் நெப்போலியன்.

"ஈன்று புறந்தருதல் தாய்மார்கள் கடமை" என்ற புறநானூற்றுப் புலவனின் கொள்கை கொண்டவர் மாவீரன் நெப்போலியன்.

"பிரான்ஸ் நாட்டுக்கு நல்லதாய்மார்களைத் தாருங்கள். அதன் பின்னர் பிரான்ஸ் நாட்டில் நல்ல வீரர்களை உருவாவார்கள்" என்பது நெப்போலியன் கூற்று.

நாட்டுக்கு நல்ல பிள்ளைகளைத் தரும் பொறுப்பு தாய்மார்களின் கைகளில் தானே இருக்கிறது. பிள்ளையைப் பெறுவதோடு தாயின் கடமை முடியவில்லையே? அவனை நன்கு வளர்த்து சின்ன வயதிலேயே நல்ல பழக்க வழக்கங்களை ஏற்படுத்தி, அவனை வீட்டுக்கும் நாட்டுக்கும் ஏற்ற நல்ல குடிமகனாக, நல்லொழுக்கங்கள் படிந்த வீர இளைஞனாக வளர்ப்பதில்தான் தாயின் பொறுப்பு அதிகம் இருக்கிறது. சின்ன வயதிலே தாய் சொல்லை பின்பற்றி அவள் சொல்வதை ஆர்வமாய்க் கேட்டு அதன்படி நடக்கிற பிள்ளைதான் பெரியவனான பின் பேரும்புகழும் பெறமுடியும் என்பது நெப்போலியனின் கருத்து.

# 59. திட்டமே உயர்வு

"**து**ணிவு மிக்கவர்கள் நிகழ்காலத்தில் சிறப்பாக வாழ்ந்து அதன் மூலம் சிறப்பாக எதிர்காலத்தைப் பலமாக உருவாக்குவார்கள். துணிவில்லாதவர்களே நிகழ்காலத்தை வீணாகக் கழித்து எதிர்காலத்திற்காக ஏங்கிக் கிடப்பார்கள்" என்று காலத் திட்டம் குறித்து நெப்போலியன் கூறுவார்.

ஒரு சமய போர் முனையில் நெப்போலியனின் படைகளை எதிரிகள் திடீர் தாக்குதல் தொடுத்தனர். ஒரு சங்கடமான நிலையில் பிரெஞ்சுப் படைகள் இருந்தன. அப்பொழுது இரவு நேரம். கூடாரத்தில் நெப்போலியன் உறங்கிக் கொண்டிருந்தார். உறங்கும் நேரத்தில் நெப்போலியனை எழுப்பித் தகவல் கூறி அவர் ஆலோசனையைப் பெறுவது எப்படி என்று நெப்போலியனின் படைத்தளபதி தயங்கினான். இருப்பினும் வேறு வழியில்லாததால் படைத்தளபதி நெப்போலியன் தூங்கிக் கொண்டிருந்த கூடாரத்திற்கு உள்ளே சென்றான். நெப்போலியன் ஆழ்ந்த உறக்கத்தில் இருப்பதை கவனித்தான். நெப்போலியனை எழுப்பலாமா, வேண்டாமா என்று படைத்தளபதி யோசித்தபோது, மேஜை மீது ஏதோ எழுதப்பட்ட காகிதம் ஒன்று விரித்து வைக்கப்பட்டிருந்தது தளபதியின் கண்களில் பட்டது. அந்தக் கடிதத்தை எடுத்துப் படித்தான். எதிரிப்படைகள் அன்று இரவு திடீர்தாக்குதல் நடத்தக் கூடும் என்று யூகித்து எதிரிப்படைகளை எவ்வாறு சமாளிக்கலாம் என்பதற்கான வழிவகைகளை அந்தக் கடிதத்தில் நெப்போலியன் தெளிவாகவும், விளக்கமாகவும், திட்டமிட்டு எழுதி வைத்திருந்தார். வியப்பும், மகிழ்ச்சியும் அடைந்த நெப்போலியனின்

தளபதி ஆலோசனைக் கடிதத்தை மட்டும் எடுத்துக் கொண்டு புறப்பட்டான். அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டிருந்த திட்டத்தின் ஆலோசனைப்படி நெப்போலியனின் தளபதி எதிர்த்தாக்குதல் நடத்தி எதிரிப்படைகளைப் புறமுதுகிட்டு ஓடச் செய்தான்.

## 60. அரவணைக்கும் பண்பு

சமுதாயத்தில் கடமை உணர்ச்சி நிறைந்தவர்கள் மதிக்கப்படுவர்களாக இருந்த வரலாறு உண்டு. பிரதமர் நேரு ஒருமுறை சாலையில் பயணம் செய்தார். நாட்டின் பிரதமருக்காக, சாத்திய இரயில்வே கேட்டினைத் திறக்க மறுத்தான் ஒரு ஊழியன். கடமை உணர்ச்சி ஊழியர்கள் இந்தியாவில் மட்டுமல்ல உலகெங்குமுள்ளனர்.

ஒருநாள் இராணுவ அதிகாரி நெப்போலியன் சாதாரண உடையில் இராணுவ முகாமை பார்வையிட்டுக் கொண்டிருந்தார். இராணுவ உயர் அதிகாரியை இராணுவப் பகுதியில் ஒரு இடத்தில் வாயில் காவலன் உள்ளே விட மறுத்தான்.

"யாரையும் உள்ளேவிட எனக்கு அதிகாரமில்லை. யாரையும் அனுமதிக்கக் கூடாது என்பது விதிக்கப்பட்ட உத்தரவு என்றான் காவலன்."

"நான் யார் தெரியுமா?" என்றார் நெப்போலியன்.

"யாராக இருந்தாலும் என்ன? என்கடமையிலிருந்து தவற மாட்டேன். மீறிச் சென்றால் சுட்டுவிடுவேன்"

நாமாக இருந்தால் என்ன செய்திருப்போம்? அவனை வேலையிலிருந்து நீக்கி விடுவோம்.

நெப்போலியன் என்ன செய்தார் தெரியுமா? கடமை உணர்ச்சிமிக்க வீரரைப் பாராட்டி உள்ளுக்குள் சிரித்து மகிழ்ந்தார்.

கடமையைச் சரியாகச் செய்த வீரர்களுக்கு இராணுவத்தில் உயர்ந்த பதவியையும் பணியையும் கொடுத்துப் பாராட்டினார்.

செய்யும் தொழிலே தெய்வம் என தொழிலைப் போற்றும் வீரர்களைப் பாராட்டினார். வெகுமதிகள் தந்தார். திறமைக்கு முதலிடம் தந்தார். இத்தகைய குணங்களைப் பெற்றிருந்ததனால்தான் நெப்போலியன் இராணுவத்தைக் கொண்டு ஐரோப்பாவையே ஆட்சி செய்ய வைத்தது என்றால் அது மிகையாகாது. நிர்வாக இயலில் நெப்போலியன் கெட்டிக்காரர். சிப்பாய்க்கும் உயர் அதிகாரிக்கும் திறமைக்குத் தகுந்தபடி பாராட்டி மகிழ்வார். கடமை உணர்ச்சியை மதிப்பார். இத்தகைய அருங்குணம் தான் இவரை வீரர்கள் மத்தியில் மாவீரனாக உயர்த்தியது. அதிகாரம் இருந்தும் ஆணவமின்றி அரவணைக்கும் பண்பு நெப்போலியனுடையது.

## 61. கண்ணீர் காணிக்கை

ஒரு சமயம் ஆஸ்திரியப் படைக்கும் பிரெஞ்சுப் படைக்கும் போர் நடந்து கொண்டிருந்தது. "ரெடிஸ்பன்" என்ற இடத்தில் நெப்போலியனின் படைகள் தீவிரமாகப் போர் புரிந்து கொண்டிருந்தது. போர்க் காட்சிகளை அருகே இருந்த குன்றின் மீது இருந்து நெப்போலியன் பார்த்துக் கொண்டிருந்தார்.

நெப்போலியன் படைகள் ஆவேசத்துடன் போர் புரிந்து ஆஸ்திரியப் படைகளைப் பின்வாங்கி ஓட விரட்டி அடித்தன. ஆஸ்திரியாவின் "ரெடிஸ்பன்" கோட்டை கைப்பற்றப்பட்டு, கோட்டையின் உச்சியில் நெப்போலியனின் கழுகுக் கொடி பறந்து வீசிக் கொண்டிருந்தது. குற்றுயிராகக் கிடந்த வீரன் ஒருவன் இந்த நல்ல செய்தியைச் சக்கரவர்த்திக்குச் சொல்ல குதிரை மீது ஏறி குன்றை நோக்கி வேகமாகச் சென்றான்.

தனது காயங்களையும் உயிரையும் பொருட்படுத்தாத வீரன் நெப்போலியன் அருகில் சென்றான். "சக்ரவர்த்தியே நாங்கள் ரெடிஸ்பன் கோட்டையைப் பிடித்து விட்டோம். கழுகுக் கொடி பறப்பதைப் பாருங்கள்" என்று முகம் முழுவதும் மகிழ்ச்சி பொங்கக் கூறினான்.

மார்பில் இரத்தம்வடியும் வீரனைப் பார்த்த நெப்போலியன் "உனக்கு காயம் ஏற்பட்டு விட்டதா? எனக் கேட்டார்.

"இல்லை சக்கரவர்த்தி, நான் கொல்லப்பட்டு விட்டேன்" என்றான் அந்த வீரன். உடனே குதிரையிலிருந்து அவனது உடல் மண்ணில் விழுந்தது.

நெப்போலியன் கண்ணீர் சிந்தினார். தனது கண்ணீரை அந்த வீரனுக்கு வீர அஞ்சலியாகச் செலுத்தினார்.

நெப்போலியன் தன்னுடைய வீரர்களுக்காக எதையும் செய்யத் தயாராக இருந்தார். அவருடைய தாராள மனப்பான்மையினால் வீரர்கள் நெப்போலியனுக்காகத் தங்கள் உயிரையும் தியாகம் செய்தனர்.

# 62. வெற்றிக் களிப்பு

"முயன்றால் முடியாதது இல்லை. முயற்சி திருவினையாக்கும். இதனை நெப்போலியன் தன் வாழ்க்கையில் நிருபித்துக் காட்டினார். விடா முயற்சியே அவரைப் பேரரசராக மாற்றியது.

ரஷ்யப் படைகளையும் ஆஸ்திரியப் படைகளையும் ஒரு சேர தோற்கடித்த பெருமை நெப்போலியனுக்கு உண்டு. இந்த வெற்றி அவருக்குப் பெருமையையும் புகழையும் தேடித் தந்தது. மட்டற்ற மகிழ்ச்சி கொண்ட நெப்போலியன் தன் படை வீரர்களிடம் பின்வருமாறு வீர உரைகளைக் கூறினார்.

"வீரர்களே உங்கள் புதல்வர்களுக்கு என் பெயரைச் சூட்டுங்கள் அவனை என் மகனாக சுவீகரித்து, எனக்குப் பின்னர் அரசாளும் வாரிசாக நியமிப்பேன்." என்றார்.

ஆயிரம் வீண் வார்த்தைகளை விட கேட்பவர்களுக்கு இதம் அளிக்கும் ஒரு நல்ல வார்த்தையே போதும் என்ற புத்தரின் கூற்றுப்படி நல்ல வார்த்தைகளையே நெப்போலியன் எப்போதும் கூறுவார்.

இந்தப் போர் குறித்து தனது மனைவிக்கு எழுதிய கடிதத்தில் "நேற்று போர்க்களத்தில் கடுமையான பணி. சிறிது நேரம் கூட ஓய்வில்லை. ஒருவாரமாக உணவோ,

உறக்கமோ இன்றி இருந்தேன். இருப்பினும் என் சுறுசுறுப்பைக் கண்டு என் படைவீரர்கள் அனைவருமே ஆச்சரியப்படுகின்றனர். இது என்னால் எப்படி முடிகிறது என்று எல்லோரும் திகைப்படைகின்றனர். என்ன? நான் எழுதுவது.... உனக்கு ஏதாவது புரிகிறதா? நீ எழுதும் கடிதங்களை என் சட்டைப் பையிலே எப்போதும் வைத்திருப்பேன். சோர்வு ஏற்படும் போது உன் கடிதங்களை எடுத்துப் படிப்பேன். உடனே சோம்பல் பறந்து விடும். உடல் முழுவதும் புத்துணர்ச்சி பரவும். அப்புறமென்ன? பசியாவது, தாகமாவது. ஆனால் என் துன்பங்களைக் கண்டு நீ மனதை வருத்திக் கொள்ளாதே. துன்பம் என் நண்பன். துன்பத்தை நான் வெறுக்க மாட்டேன் என்பது உனக்குத் தெரியும். உலத்தில் உன்னத வெற்றிகளைச் சாதிப்பதற்காகவே பிறந்த எனக்கு, துன்பம்தான் நண்பன். இன்பம் என் விரோதி. அது என்னை சோம்பேறியாக்கிவிடும் கோழையாக மாற்றிவிடும். அதை நான் வெறுக்கிறேன். இரவில் அதிக நேரம் கண் விழித்து உடம்பைக் கெடுத்துக் கொள்ளாதே. உடம்பை நன்கு கவனித்துக் கொள்" என்று எழுதினார்.

நெப்போலியன் எப்போதும் தன் வெற்றியின் மகிழ்ச்சியைப் படைவீரர்களிடமும், மனைவியிடமும் பகிர்ந்து கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைவார். இதுதான் அவரது வெற்றிக்குக் காரணமாக அமைந்தது.

# 63. இரண்டாம் ஜஸ்டினியன்

நெப்போலியன் தனது ஆட்சிக்காலத்தில் நீதித்துறையில் சிறப்பான சீர்திருத்தம் செய்தார். நாட்டின் பல்வேறு பகுதிகளில் பல்வேறு சட்டங்களால் நிலவி வந்த குழப்பங்களைச் செப்பனிட்டு அமைத்தார். நாடு முழுவதும் ஒரே மாதிரியான நீதி நிர்வாக முறையைச் செய்தார்.

சட்ட நிபுணர்க் குழு ஒன்றை அமைத்து நாடு முழுவதும் ஒரே மாதிரியான சட்டத்தை வகுத்தார். சிவில், கிரிமினல், வர்த்தகச் சட்டங்கள் ஒன்றாகத் தொகுக்கப்பட்டன.

தனிமனித சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் போன்ற புரட்சிக் கருத்துக்களை வளர்க்கும் நோக்கத்துடன் புதிய சட்ட தொகுப்பு அமைக்கப்பட்டது. இதற்கு **"நெப்போலியனின் சட்டத் தொகுப்பு"** என்று பெயரிட்டனர்.

பிரான்ஸ் மட்டுமல்லாமல் ஐரோப்பா முழுவதும் பிற்காலத்தில் பெரும்பாலான நாடுகளில் இச்சட்டம் பின்பற்றப்பட்டதிலிருந்து இதன் புகழினை உணரலாம்.

ரோமானியச் சட்டத் தொகுப்பை உருவாக்கி உலகப் புகழ் பெற்றவர் ஜஸ்டினியன் என்பவர். நெப்போலியனையும் இரண்டாம் ஜஸ்டினியன் என்று அழைக்கப்படுகிறார்.

இச்சட்டத் தொகுப்பினைப் பற்றி நெப்போலியனே பின்வருமாறு கூறியுள்ளார்.

"என்னுடைய பெருமைக்கு உண்மையான காரணம் நான் வென்ற நாற்பது போர்கள் அல்ல.

ஏனெனில் வாட்டர்லு தோல்வி அந்த எல்லா வெற்றிகளின் நினைவையும் அழித்துவிடும். ஆனால் அழிக்க முடியாத என்றும் நிலைத்திருக்கக்கூடிய ஒன்று என்னுடைய சிவில் சட்டத் தொகுப்பு".

# 64. பிச்சைக்காரர்களுக்கு மறுவாழ்வு

நெப்போலியன் பொதுநலத்தில் அதிக நாட்டம் செலுத்தினார். வேலை இல்லாதவர்களுக்கு வேலை கொடுப்பது அரசாங்கத்தின் கடமை என்பதை உணர்ந்திருந்தார். வேலை இல்லாதவர்களுக்கு வேலை கொடுப்பது பற்றி ஒரு உத்திரவும் பிறப்பித்தார்.

"சோப்பு செய்வோர். தையல்காரர்கள், செருப்புத் தைப்போர்கள் போன்ற பலர் வேலையின்றி இருப்பதை அறிந்தார். நாள் ஒன்றுக்கு ஐந்நுறு ஜோடி செருப்புத் தைத்துத் தருமாறு செருப்புத் தொழிலாளர்களுக்கு உத்தரவிட்டார்.

பிச்சையெடுப்பது நெப்போலியனுக்குப் பிடிக்காத ஒன்றாகும். பிச்சைக்காரர்களை ஒழிக்க ஒரு உத்தரவையும் பின்வருமாறு பிறப்பித்தார்.

"பிச்சைக்காரர்களைக் கண்டவுடன் அவர்களைப் பிடித்துக் கொள்ளுங்கள். அவர்களைப் பிடிப்பதோடு மட்டும் உங்களது செயல் நின்று விடுமாயின் அதைப்போல் பைத்தியக்காரத்தனமானதும் கொடுமையானதும் வேறு ஒன்றும் இல்லை. கைது செய்த பிச்சைக்காரர்களுக்கு முதலில் உணவு,

கொடுங்கள். பின்பு வேலையையும் கொடுங்கள். ஒவ்வொரு நிர்வாகத் துறையினரும் தங்கள் பொறுப்பில் பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு இல்லங்களை அதிகமாக அமைத்து அவற்றைக் கண்காணித்துக் கொள்வது அவசியமானதாகும்.

பாமர மக்களின் மீது நெப்போலியன் காட்டிய பரிவும், உழைக்காமல் சோம்பேறியாகப் பிச்சையெடுப்பது குற்றம் என்பதும் இந்த உத்தரவுகளால் உணர முடிகிறது.

## 65. பெண்ணின் பெருமை உணர்தல்

நெப்போலியன் காலத்தை நன்கு உணர்ந்தவர். சாப்பிடும் போது கூட அன்றைய செய்தித்தாளை பிறரை வாசிக்கச் சொல்லி கேட்டுக் கொண்டே சாப்பிடும் பழக்கமுடையவர். அன்று ஏதோ சிந்தனையில் உலவிக் கொண்டிருந்தார். தன் எதிரே தாயும் குழந்தையும் அழுது கொண்டு நிற்பதைப் பார்த்தார். தாயும்சேயும் கண் கலங்குவதைப் பார்த்து நெப்போலியனும் கலங்கினார்.

சிறுவன் முதுகைத் தடவிக் கொடுத்தார். மகனும் அன்னையும் அழும் காரணமறிந்தார். அப்பா, அம்மாவையும் குழந்தையையும் அடித்து விட்டதை அறிந்தார். உடனே அவனை அழைத்து வர உத்தரவிட்டார்.

அவன் 25 வயது நிரம்பிய பிரெஞ்சு வீரன். ஒரு இராணுவ வீரன் மனைவியை அன்பு பாராட்டாமல் அடிக்கலாமா?" என்று கேட்டார்.

"என் மனைவியை நான் அடிப்பதற்கு எனக்கு உரிமை உண்டு. உங்களுக்கென்ன?" பதிலுரைத்தான் வீரன்.

"அரசனே கேட்டாலும் இப்படித்தான் பதில் சொல்வாயா? என்று கேட்டார்.

"அரசனுக்கும் இதே பதில்தான். இது எங்கள் குடும்ப விஷயம். உங்களுக்கென்ன அக்கரை?" என்று கேட்பேன் என்றான்.

தன்னை யார் என்பதை அறியாத வீரனிடம் நான்தான் நெப்போலியன் என்று சொல்லி சிரித்தார்.

"அரசே மன்னித்துவிடுங்கள் நீங்கள் யாரென்றும் தெரியாமல் பேசிவிட்டேன்" என்றான்.

வீரனே! நான் நன்கு விசாரித்துத்தான் உன்னை வரவழைத்தேன். எங்கோ பிறந்து வளர்ந்து பற்றற்ற துறவியென உனக்குத் தொண்டு புரியும் உன் மனைவி குணமானவள் என்று அறிந்தேன். குறை உன்னிடம் இருப்பதாகத் தான் எனக்கு புரிந்தது. பிரெஞ்சு வீரன் இல்வாழ்க்கையில் ஒழுங்கீனமாக நடந்து கொள்வது அழகல்ல. உன் கோபத்திற்கு பணப் பற்றாக்குறைத்தான் காரணம் என்பதை அறிந்தேன். உன்னை உயர் பதவியில் அமர்த்துகிறேன். உன் மனைவியிடம் அன்பாக நடந்து கொண்டு இல்லறம் நடத்து" என்று அறிவுரை வழங்கினார் நெப்போலியன்.

பின்னாளில் அவ்வீரனின் மனைவியிடம் உன் கணவன் இன்னும் அடிக்கிறானா? என்று கேட்டார். "இல்லை அரசே உங்கள் அறிவுரை பெற்ற அன்றே எங்கள் துன்பமெல்லாம் பகலவனைக் கண்ட பனிபோல் போய்விட்டது. என் கணவர் என் மீது உயிரையே வைத்திருக்கிறார்" என்று பதிலுரைத்தாள்.

தனது குடிமக்கள் அனைவரும் துன்பமில்லாமல் மகிழ்ச்சியாக வாழ நடவடிக்கைகளை எடுத்தவர் நெப்போலியன். பெண்கள் நாட்டின் கண்கள் என்று போற்றினார் நெப்போலியன்.

## 66. அழகியின் காதல் வலை

பாரிஸ் நகரில் மேடம் டீ ஸ்டாயல் என்ற அழகி இருந்தாள். இவள் பிரான்சில் புகழ் பெற்று மிகவும் பிரபலமாகி இருந்தார். அரசுப் பிரமுகர்கள் பலர் இவரின் அழகில் மயங்கி இருந்தனர். அழகி தன் செல்வாக்கால் தல்லேரண்ட்டை, வெளியுறவு அமைச்சராக்கினாள் என்றால் அவளது செல்வாக்கை உணர்ந்து கொள்ள முடியும்.

மேடம் டீ ஸ்டாயல் நெப்போலியன் மீது காதல் கொண்டாள். காதல் வலையை வீசினாள். பலமுறை காதல் கடிதங்கள் எழுதினாள். ஆனால் தளபதி நெப்போலியன் அவளுக்குக் கடிதமும் எழுதவில்லை, அவளைப் பற்றி சிந்திக்கவுமில்லை. இதற்கெல்லாம் அவருக்கேது நேரம்?

ஆனால் இந்த அழகி தனது நாட்குறிப்பில் நெப்போலியனைப் பற்றி ஒரு குறிப்பு எழுதி வைத்திருந்தாள்.

"நிற்கும்போது இந்தத் தளபதி குள்ளமாகத் தோன்றுகிறார். ஆனால் இவர் குதிரை மீது அமர்ந்திருக்கும் போது இவரது குள்ளமான உயரம் தெரிவதில்லை. இவர் கம்பீரமானவர். ஆனால் காதல்

என்றால் காரணமின்றி வெட்கப்படுகிறார். என்னை இவர் விரும்பவும் இல்லை. வெறுக்கவும் இல்லை".

ச்ச்சி ச்ச்சி.... இந்தப் பழம் புளிக்கும் என்பது போல் இருந்தது இந்த அழகியின் குறிப்பு.

நெப்போலியன் இத்தாலியின் மிலான் நகரில் இருந்தபோது அந்த நகர அழகிய சீமாட்டிகள் சிலரும் அவர் மீது காதல் வலை வீசினர். இவரோ ஜோசைப்பைன் என்ற தன் கவசத்தை கழட்டவில்லை. அழகிகளின் கணைகள் யாவும் நெப்போலியனின் மீது மோதி மழுங்கிப் போயின.

## 67. மனுதர்மம்

நெப்போலியன் ஆட்சியில் நீதி நிர்வாகத்தைச் சிறப்பாகச் செய்தார். சிறந்த நீதிபதியாகத் தீர்பளிப்பார்.

ஒரு சமயம் திருடர்கள் சிலர் குடியானவன் ஒருவனைக் கொன்றுவிட்டு அவனது கால்நடைகளைத் திருடிச் சென்று விட்டனர். முக்கியமான அலுவல்களில் இருந்த நெப்போலியனுக்கு இந்தச் செய்தி எட்டியது. இறந்து போன ஏழைக் குடியானவனை எண்ணி மனம் வருந்தினான். திருடர்களைப் பிடித்துத் தண்டிக்க உடனடியாக உத்திரவிட்டார்.

"நாட்டில் இதெல்லாம் இயல்பான நிகழ்ச்சி. நீ ஏன் அந்தக் குடியானவனுக்காகப் பரிதாபப்படுகிறாய்? உனக்கு இவன் என்ன தம்பியா? உறவினனா? இது குறித்து உன்னிடம் யாருமே முறையிடக்கூட இல்லையே" என்றான் அருகிலிருந்த நண்பன்.

நண்பனின் பேச்சு நெப்போலியனுக்குச் சிரிப்பை உண்டாக்கியது. "இந்த நாட்டில் உள்ள ஒவ்வொரு குடிமகனும் எனக்கு உறவினர்கள்தான். நீ எவ்வாறு நெருக்கமோ அவ்வளவு நெருக்கம் அந்தக் குடியானவனிடமும் உண்டு" என்றார் நெப்போலியன்.

"வறியாரைத் தாங்கும் வலியான் அட்டூழியத்தை அடக்கத்தான் கடவுள் எனக்கு வலிமை தந்துள்ளார்" என்றும் நெப்போலியன் கூறினார்.

**"நலத்தின்கண் நாரின்மை தோன்றின் அவனைக்**
**குலத்தின் கண் ஐயப்படும்"**

என்ற திருக்குறளின் அறிவுரைகளின்படி குடிநலனின் மிகுந்த அக்கரைச் செலுத்தினார் நெப்போலியன்.

பிற்காலத்தில் சக்ரவர்த்தி நெப்போலியனைப் புகழ்ந்து கவிஞர் கோதே பாடினார். "நெப்போலியனை நான் பார்க்கும்போது ஏசுநாதரின் பன்னிரெண்டு சீடர்களில் ஒருவரான புனித ஜானின் நினைவு வருகிறது. அவருக்கும் இவருக்கும் அதிக ஒற்றுமைகள் உண்டு என்று வர்ணித்தார் கோதே.

## 68. சகிப்புத்தன்மை

நெப்போலியன் புகழ் ஐரோப்பாவையும் தாண்டி ஆசியா முழுவதும் பரவத் தொடங்கியது. இதனால் நெப்போலியன் மீது பொறாமை கொண்டவர்கள் அவனை வீழ்த்தத் திட்டம் தீட்டினார்கள்

பாரிசில் பெரிய மாதா கோயிலில் மேரி அம்மையார் சிலை ஒன்று இருந்தது. இச்சிலையின் கண்களில்

இருந்து நீர் வழிந்தது. நெப்போலியனின் தவறான ஆட்சியால் போப்பின் அரசுக்கு நெருக்கடி ஏற்பட்டதற்காக மேரி கண்ணீர் வடிக்கிறார் என்று பொய் புளுகு மூட்டையை மதகுருமார்கள் அவிழ்த்து விட்டனர். நெப்போலியன் மீது பல கட்டுக் கதைகளைப் பொய்யாகப் புனைந்தனர். மக்களும் உண்மையென நம்பத் தொடங்கினர். நெப்போலியன் மோசமானவன் என்று மக்களை நம்பச் செய்தனர்.

இந்நிகழ்ச்சி நெப்போலியனின் கவனத்துக்கு வந்தது. மக்களும் மதகுருமார்களும் தன் மீது சுமத்தும் பொய்யுரைகளை எண்ணி மனம் வருந்தினார். மக்களின் மூட நம்பிக்கையை முதலீடாக்கும் மதகுருமார்கள் செய்கையை எண்ணி வருத்தமுற்றார். ஆனால் கலங்கவில்லை. கோபப்படவில்லை. சகிப்புத்தன்மை என்ற பண்பை கவசமாக அணிந்தவர் நெப்போலியன். அதனால் அவர் சித்தம் கலங்கவில்லை.

ஆழ்ந்து யோசித்தார். மேரியின் சிலையருகே சென்று கண்களை உற்றுப் பார்த்தார். சிலையின் கண்களில் காணப்படும் நீர் உண்மையல்ல. கானல் நீரின் தோற்றம். ஒரு கண்ணாடி ஜெபமாலையின் துணைகொண்டு கானல்நீர் தோற்றத்தை உண்டாக்கியிருக்கும் உண்மையைக் கண்டறிந்தார். இந்த உண்மையை மக்களுக்கு எடுத்துச் சொல்லி சூழ்ச்சியை வென்றார். முள்ளை முள்ளால் எடுத்தார். “பழிகள் உண்மையாக இருப்பின் அவற்றிற்கு நான் ஏன் வருத்தப்பட வேண்டும்! ஆனால் பொய்ப் பிரச்சாரத்திற்கு நான் ஏன் செவி சாய்க்க வேண்டும்” என்றார் நெப்போலியன்.

சூழ்ச்சிக்காரர்களை மன்னிக்கவும் உத்தரவிட்டார். இதுமட்டுமின்றி நெப்போலியன் போப்பின் தாடியைப் பற்றி இழுத்ததாகவும், இராணுவ வீரர்களைக் கொடுமையாக நடத்துகிறார் என்றும் அவர் ஒரு இரத்த வெறியர் என்றும் பொய்ப் பிரச்சாரம் செய்தார்கள். பழுத்த மரத்தில்தான் கல்லடிபடும். எனவே, தனது பெருமை கண்டு அவதூறுகளைப் பரப்பும் பொய்யர்கள் நிறைந்த உலகம் என்பது அவருக்குத் தெரியும். அவதூறுகளையும் தனக்கு இன்னல் புரிபவர்களையும் எதிரிகளையும் மனத்திருந்தி வாழ வாய்ப்புக் கொடுத்தது நெப்போலியனின் சிறப்பான குணங்களில் ஒன்றாகும்.

## 69. வீழ்ச்சிக்கு வித்து

நெப்போலியனைக் கொல்ல பிரான்சில் பதவி இழந்த போர்போன் அரச வம்சத்தைச் சேர்ந்த இளவரசர்களும் மற்றவர்களும் திட்டம் தீட்டி வந்தனர். அடிக்கடி ரகசியக் கூட்டங்கள் கூட்டி நெப்போலியனை வீழ்த்தி மன்னராட்சியை நிலைநாட்டத் தீர்மானித்தார். இந்தப் பொறுப்பை நெப்போலியனின் பகைவன் மோராவிடம் ஒப்படைத்தார்கள். மன்னர் பிக்ருவும், மோராவும் கூட்டாக நெப்போலியனைக் கவிழ்க்கத் திட்டமிட்டனர். சதிசெய்தனர். இத்திட்டத்தை ஒற்றர்கள் மூலம் நெப்போலியன் கண்டுபிடித்தார்.

மன்னர் மோராவை கைது செய்து சிறையில் அடைத்தார். பிக்ரு என்பவனையும் சிறையில் அடைத்தார். சதிக்கு உடந்தையான பதிமூன்று குற்றவாளிகளுக்கும் மரண தண்டனை விதித்தார்.

இச்சதிக்கு ஆங்கிலேயர்கள் துணையுடன் நாட்டின் எல்லையில் வசித்து வந்த என்ஷியன் என்ற போர்போன் வம்ச இளவரசனைப் பிடித்து சிரச்சேதம் செய்தார். இதனால் அரச பரம்பரையினர் மீண்டும் தலைதூக்க முடியாதென நெப்போலியன் நினைத்தார். ஆகவே, இக்கொடுமையான தண்டனைகளை வழங்கினார்.

புலி வாலைப் பிடித்த கதையாக எதிரிகளைக் கொல்லாவிட்டாலும் துன்பம், கொன்றாலும் துன்பம் என்ற நிலையில் இருந்த நெப்போலியனால் இத்தண்டனைகளை வழங்க உத்திரவிடுவதில் இருந்து தப்ப முடியவில்லை.

இத்தண்டனைகள் குறித்து பல்வேறு கருத்துக்கள் நிலவிவந்தன. கூடாத செயல் என்று சிலராலும் அரசியலில் அவசியமான செயல் என்றும், நெப்போலியனின் ராஜ தந்திர நடவடிக்கை என்றும், தவறு இல்லை என்றும், நெப்போலியன் செய்தது பரம நியாயம் என்றும் எழுதி உள்ளார்கள். பீரங்கிப் படையால் உயர்ந்தவன் பிரிட்டிஷ் கடற்படையால் வீழ்ந்தான். மாஸ்கோ பனிக்காடுகளில் மண்டியிட்டுள்ளான். ஆனால் இச்செயல் நெப்போலியனின் வீழ்ச்சிக்கு வித்தாக அமைந்தது என்பது வரலாறு கூறும் உண்மையாகும்.

# 70. சிறந்த தீர்ப்பு

**ச**க்ரவர்த்தி நெப்போலியன் குடிமக்களில், 16 வயது நிரம்பிய ஒரு அழகிய மங்கையை 30 வயது வாலிபன் திருமணம் செய்து கொள்ள ஆசைப்பட்டான். ஆனால் அந்தப் பருவ மங்கைக்கு அவன் மீது விருப்பம் இல்லை. பெண்ணின் பெற்றோர்கள் பலவந்தமாக அவளை அவனுக்குத் திருமணம் செய்து வைத்தனர்.

திருமணத்திற்குப் பிறகும் அந்தப் பெண் அவனிடம் அன்பு காட்டவில்லை. வெறுப்பைக் காட்டினாள். ஆத்திரமுற்ற கணவன் அவளைக் கொன்று விட்டான். விசாரணையில் அவனுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

உயர்குடியில் பிறந்த அவனை மரண தண்டனையில் இருந்து விடுவிக்கும் மேல்முறையீடு நெப்போலியனிடம் வந்தது. வழக்கை நன்கு விசாரித்தார்.

"உயர்குடியென்ன? தாழ்ந்த குடியென்ன? எந்தக் குடியில் பிறந்தாலும் குற்றத்துக்குரிய தண்டனை உண்டு. தன்னை விரும்பாத பெண்ணை விரும்பியதே முதல் குற்றம். அதிலும் பலவந்தமாக அடைந்தது இரண்டாவது குற்றம். அவளைக் கொன்றது மூன்றாவது குற்றம் என்று மரண தண்டனையை உறுதிப்படுத்தினார் நெப்போலியன்.

சட்டத்திற்கு முன்பு அனைவரும் சமம் என்று உறுதியான சிறந்த தீர்ப்புகள் வழங்குவதில் நெப்போலியன் துலாக்கோல் போன்றவர். சமநோக்கு உடையவர்.

# 71. விருந்தோம்பல்

நெப்போலியனின் வளர்ச்சியை, புகழைத் தடுக்க வெளிநாட்டினர் பெரிதும் முயற்சிசெய்து கொண்டிருந்தனர். பிரெஞ்சுக்காரர்களைக் கொன்று பிரெஞ்சு நாட்டில் குழப்பம் ஏற்படுத்த முயன்றனர். ஒரு முறை பிரெஞ்சு நாட்டில் உள்நாட்டு கலகத்தை ஏற்படுத்த எதிரிகள் இங்கிலாந்திலிருந்து ஆயுதங்களை ஏற்றிக் கொண்டு கப்பலில் வந்து கொண்டிருந்தனர். கப்பல் வரும் வழியில் பெரும் சூறாவளிப் புயல்காற்று வீசியது. கப்பல் பாறை மீது மோதி சிதைந்து போனது. சதிகாரர்களும் சூழ்ச்சிக்காரர்களும் பிரெஞ்சு கடற்கரையில் கரை ஏறித் தப்பித்தனர். ஆனால் அவர்கள் பிரெஞ்சு அரசால் சிறைப் பிடிக்கப்பட்டனர்.

சிறைப்பிடிக்கப்பட்ட சதிகாரர்கள் மீது குற்றம் ஊர்ஜிதப்படுத்தப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்டது. இதனை அறிந்த நெப்போலியன் தன் பகைவர்கள் மீது பரிவு காட்டினார். பகைவர்களுக்கு அருள்வாய் நன்னெஞ்சே என்றவாறு அவர்கள் மீது கருணை காட்டினார் நெப்போலியன். “எதிரிகளாயிருந்தாலும் ஆபத்து என்று உயிர் பிச்சைக்கோரி நம் நாடு வந்துள்ளனர். அபயம் தேடி வந்த விருந்தாளிகளைக் கொல்வது நியாயமாகாது” என்று அவர்களை விடுவித்தார்.

ஒருவர் தன் மீது பகைகொண்டு துன்பம் செய்தாலும் அவனுக்குத் தீங்கு செய்யாமை நல்லோர் கொள்கை. தீங்கு செய்தாரைத் தண்டிப்பதைவிட அவர் வெட்கித் தலை குனியும்படியாக அவருக்கு நன்மைகள்

செய்வது நல்லோர் இயல்பு. வள்ளுவரின் குறள் நெறிப்படி இத்தகைய நல்லியல்புகளை அணிந்தவர் நெப்போலியன்.

## 72. புலவர்களின் பாராட்டு

நெப்போலியன் காலத்தில் வாழ்ந்திருந்த கவிஞர் பைரனும், இசை மேதை பீதோவானும் நெப்போலியனை மிகவும் புகழ்ந்தனர். அந்தச் சக்ரவர்த்தியை விட ஒரு வயது குறைந்தவர் பீதோவான். புகழ்பெற்ற கவிஞர் கோதேயும் அப்போது வாழ்ந்து வந்தார். இவர் நெப்போலியனிடம் அளவற்ற மதிப்பும் அன்பும் கொண்டிருந்தார். ஒரு சமயம் லிப்ஸிக் நகருக்குத் தென் மேற்கே 50 மைல் தூரத்தில் வெர்மர் நகரில் கவிஞர் கோதே தனது வீட்டில் ஏதோ எழுதிக் கொண்டிருந்தார். சுவரில் ஓர் ஆணியில் தொங்கவிடப்பட்டிருந்த சக்ரவர்த்தியின் படம் தீடிரேன தரையில் விழுந்தது. அதன் கண்ணாடிப் பிரேம் நொறுங்கிச் சிதறியது. அதே நேரத்தில் லிப்ஸிக் சண்டையில் நெப்போலியன் தோல்வியடைந்தார். இதைக் கேள்விப்பட்ட கோதே உடனே ஒரு கவிதையை எழுதினார்.

ஆபத்தைக் கண்டு அஞ்சாத அவனுக்கு
வீரமே கம்பீரம்! வெற்றியே சிம்மாசனம்!
பகைவர்கள் மிரட்டினால் பரவசமடைவான்!
பொய் மனிதர்கள் நிரம்பிய இவ்வுலகம்
செல்வம் இருப்பவனைச் சீராட்டும்!
பதவியில் இருந்தால் தான் பாராட்டும்!
சக்ரவர்த்திக்கு மட்டுமல்ல..........
எல்லா மனிதருக்கும் இறுதியுண்டு.........

ஞான திருஷ்டி கொண்ட கவிஞர் நெப்போலியன் தோல்வி கண்டு மனம் வருந்தினார். உடனே ஒரு கவிதையை எழுதினார். நெப்போலியனது வீரத்தையும், பிறப்பும், இறப்பும் இயல்பு என்பதையும் பொய் நிறைந்த உலகத்தையும் கவிதையில் சொல்லி வைத்தார்.

# 73. தலைவிதியை மாற்ற முடியாது

**ச**க்ரவர்த்தி நெப்போலியன் ஜெர்மனியில் ஸ்கான்பான் நகர அரண்மனையில் தங்கியிருந்தார். ஒருநாள் சுமார் 18 வயதான ஓர் இளைஞன் அத்து மீறி அரண்மனைக்குள் புகுந்தான். அவன் கைது செய்யப்பட்டான். அவன் பெயர் பிரட்ரீச்.

அவனைச் சோதனையிட்டதில் உடைக்குள் மறைத்து வைத்திருந்த நீண்ட கத்தி ஒன்றும், ஓர் அழகிய இளம் பெண்ணின் புகைப்படமும் சிக்கின.

நீ எதற்காக அரண்மனைக்குள் நுழைந்தாய்? என்று காவலர்கள் விசாரித்தனர்.

"என்னைக் கொலை செய்வதற்காக வந்தாயா?"

"ஆமாம்!"

"இளைஞனே.... உனக்கென்ன பைத்தியமா?"

"நான் பைத்தியமல்ல. நல்ல மனநிலையில் சுயநிலையில்தான் இருக்கிறேன்".

"அப்படியானால் எதற்காக என்னைக் கொலை செய்ய நினைத்தாய்?"

"எங்கள் நாட்டை நீங்கள் பாழாக்கி விட்டீர்கள்"

"உங்கள் நாடா?"

"ஆமாம், ஜெர்மானியர் எல்லோருக்கும் உரிமையான நாடு இது"

"கொலை செய்யும்படி உன்னைத் தூண்டியவர் யார்?"

"என் மனசாட்சிதான் தூண்டியது. உங்களைக் கொலை செய்வதன் மூலம், ஜெர்மனிக்கும் ஏனைய ஐரோப்பிய நாடுகளுக்கும் விடுதலை கிடைக்கும் என்று என் மனம் சொல்லுகிறது!"

"இதற்கு முன் எப்போதேனும் நீ என்னைப் பார்திருக்கிறாயா?"

"எர்பர்ட் நகரில் முதல் முதலாக உங்களைப் பார்த்தேன். அப்போது உங்களது அபிமானியாக இருந்தேன். இனிமேல் யுத்தமே செய்யமாட்டீர்கள் என நினைத்தேன். ஆனால் என் நம்பிக்கையை இழந்து விட்டீர்கள்"

தனது டாக்டரை வரவழைத்து இந்த இளைஞனின் உடலைப் பரிதோதனை செய்ய உத்தரவிட்டார். அவனுக்கு மூளை கோளாறு எனக் கண்டுபிடிக்கப்பட்டால் விடுதலை செய்துவிட நினைத்தார்.

பரிசோதனை செய்த மருத்துவர் "இவனுக்கு எவ்விதக் கோளாறும் கிடையாது" என்றார்.

எனவே, புகழ் வேண்டி ஜீலியஸ் சீசரைப் போல் உள்ள தன்னைக் கொல்வதற்கு கத்தியுடன் ஒரு புருட்டஸ் வந்திருக்கிறான் என்று நினைத்தார்.

"நீ மிகவும் சோர்வடைந்திருக்கிறாய், குடும்பத்திற்கு உன்னால் அவப்பெயர். என்னிடம் மன்னிப்பு கேள், விடுதலை செய்கிறேன்" என்றார்.

"உங்களைக் கொலை செய்யும் முயற்சியில் நான் தோல்வியடைந்ததற்காக வருந்துகிறேன். என்னை விடுதலை செய்தால் மீண்டும் முயற்சித்து வெற்றி பெறுவேன்."

"என்னைக் கொலை செய்வது, உனக்குக் குற்றமாகத் தோன்றவில்லை. அப்படித்தானே?"

"உங்களைக் கொல்வது குற்றமேயல்ல. ஐரோப்பிய மக்களுக்கு நான் செய்யும் தியாகம் இது."

அவனிடம் பறிமுதல் செய்யப்பட்ட அழகியின் புகைப்படத்தை சக்ரவர்த்தி உற்றுப்பார்த்தார். "இந்தப் படம் யாருடையது?" என்று கேட்டார்.

"என் காதலியின் படம்"

"நீ செய்யத் துணிந்த படுகொலைக்கு அவள் ஆதரவளித்தாளா?"

"என்னைப் போலேவே அவளும் உங்களை வெறுப்பாள் தான்"

இவனைக் கொன்றுவிட்டால், இவனுடைய காதலி - அழகான இளம் பெண் மிகவும் வருந்துவாள் எனக் கருதிய சக்ரவர்த்தி "உன்னை நான் உயிருடன் விட்டு விட்டால் உன் காதலி மகிழ்ச்சியடைவாள் அல்லவா?" எனக் கேட்டார்.

"என்னை உயிரோடு விட்டால், உங்களைக் கொல்வதற்கு எனக்கு இன்னொரு வாய்ப்பு கிடைக்கும். அப்போது நான் தோற்க மாட்டேன்" என்றான் இளைஞன்.

இவனது தலைவிதியைத் தன்னால் மாற்ற இயலாது என்று உணர்ந்த சக்ரவர்த்தி தனது அதிகாரிகளின் பொறுப்பில் அவனை ஒப்படைத்தார். அவர்கள் அவனுக்கு மரண தண்டனை விதித்துச் சுட்டுக் கொன்றனர். அவனிடம் பறிமுதல் செய்த கத்தியைச் சக்ரவர்த்தி பாரீஸ் நகருக்குக் கொண்டு போனார்.

மன்னிக்க நினைத்தார். விடுதலை செய்ய விரும்பினார். ஆனால் அந்த இளைஞனின் தலைவிதியை யாரால் மாற்ற முடியும்.

## 74. உட்பகை

**ப**கையில் மிகப்பெரியது உட்பகை. எள் அளவே இருந்தாலும் உட்பகை உண்டாயின் அந்தக் குடி அழிந்துவிடும்.

**"எட்பக வன்ன சிறுமைத்தே ஆயினும்**
**உட்பகை உள்ளதாம் கேடு"**

நெப்போலியன் வீழ்ச்சிக்கு உட்பகை காரணமாக அமைந்தது.

நெப்போலியன் தன் உடன்பிறந்த சகோதிரிகளுக்கும், சகோதரர்களுக்கும் ஆட்சியின் அதிகாரங்களை வழங்கினார். வென்ற நாடுகளின் ஆட்சி செய்யும் உரிமையைக் கொடுத்தார். உடன் பிறந்த பாசத்தால் செய்த உதவி இவருக்கே பின்னர் பகையாக மாறியது.

நோய்த் தருமாயின் குளிர்ந்த நீரும், தீமை தருவதாகும். அதுபோல உறவினரின் இயல்பும் கேடுதருமாயின் பகைமையே என்பார் திருவள்ளுவர்.

இவரது மாமானார் ஆஸ்திரிய நாட்டு அரசர். இவருக்கு எதிரியானார். தான் வென்ற பகுதிக்கு அரசனாக்கிய சகோதரி கணவனும் எதிரியானான். சகோதரன் ஜோசப்பு கோழை போல் நடந்து கொண்டான். நெப்போலியனின் படைத்தளபதிகள் எதிரிகளோடு சேர்ந்து கொண்டனர்.

உட்பகையைப் பற்றி நெப்போலியன் தனது நாட்குறிப்பில் பின்வருமாறு எழுதி வைத்துள்ளார்.

**"நான் என் உறவினர்களையும், சகோதரர்களையும் அரசர்கள் ஆக்கி இருக்கக் கூடாது. இது எனக்கு ஒரு மிகப் பெரிய அனுபவம் படிப்பினை. இந்த உண்மையை உணர்ந்து ஆட்சியாளர்கள் நடந்து கொள்வார்களாக"** என்று உட்பகைக் குறித்து திருவள்ளுவரைப் போல உலக ஆட்சியாளர்களுக்கு எச்சரிக்கையும் அறிவுரையும் செய்துள்ளார்.

# 75. எதிரியின் புகழ்மாலை

நெப்போலியனுடைய வெளிநாட்டு எதிரி ரஷ்ய சக்ரவர்த்தி சார் மன்னரும் உள்நாட்டு எதிரி டாலிராண்டு என்பவரும் சேர்ந்து நெப்போலியனை ஒழிக்கத் திட்டம் போட்டனர்.

நேச நாட்டுப்படைகள் பாரிஸ் நகரைக் கைப்பற்றின. 20 ஆண்டுகளாக நெப்போலியன் வசம் இருந்த பாரிஸ் நகரம் எதிரிகளின் ஆதிக்கத்தின்கீழ் வந்து விட்டது.

டாலிராண்டு சூழ்ச்சிகள் பல செய்தான். 'மாபரீல்' என்னும் பெயருள்ள அதிகாரி பணத்துக்காக எதையும் செய்வான். பாரிசுக்கு அருகில் சிறு படையுடன் இருக்கும் சக்ரவர்த்தி நெப்போலியனைக் கொல்ல மாபரிலை அனுப்பினான் டாலிரெண்டு. ஆனால் அவனுடைய முயற்சி பலனளிக்கவில்லை.

புளுசர் என்ற படைத்தளபதியிடம் "எப்படியாவது" நெப்போலியனை ஒழித்துக் கட்டிவிடுங்கள் என்று உத்தரவிட்டான் டாலிரண்டு. இந்த முயற்சியும் பலனளிக்கவில்லை.

இந்த நிலைமையில் சார் அரசரும் டாலிரண்டும் பாரிஸ் நகரில் யாரை அரசராக நியமிப்பது என்று ஆலோசித்தனர். டாலிரெண்டு முந்தைய அரசனையே மீண்டும் பதவியில் கொண்டு வர விரும்பினார். இருப்பினும் ரஷ்ய அரசின் கருத்தைக் கோரினார். "பெர்னோதாத்தைக் (படைத்தளபதி) கொண்டு வரலாம்" என்றார் சார் சக்ரவர்த்தி.

இந்தப் பதிலைக் கேட்டதும் டாலிரெண்டு சிரித்தான். "பிரெஞ்சு நாடு மீண்டும் ஒரு போர் வீரன் அரசனாக வருவதை விரும்பாது. அப்படி ஒரு விருப்பம் உங்களுக்கு இருக்குமாயின், உலகம் இது வரை பார்த்திராத திறமை மிக்க அனுபவமிக்க போர்வீரர் (நெப்போலியன்) எங்களிடையே இருக்கிறார். போர் வீரர்களை நூற்றுக்கணக்கில் இருந்தாலும் நெப்போலியனுக்கு இணையாக முடியாது" என்று பதிலளித்தார் டாலிரெண்டு.

எதிரியின் வாயால் புகழப்படும் பெருமையையும் புகழையும், வீரத்தையும் ஆட்சித் திறமையும் கொண்டவர்தான் நெப்போலியன்.

# 76. உருக்கமான பேச்சும் கண்ணியமான நடத்தையும்

நெப்போலியனை எல்பா தீவுக்கு அழைத்துப் போக நேச நாட்டு அதிகாரிகள் நான்கு பேர் வந்திருந்தனர். நெப்போலியன் இடத்தைவிட்டு வெளியே வந்தார். வாழ்த்தி அனுப்ப யாரும் முன் வரவில்லை.

ஆனால் செஞ்சோற்றுக்கடன் தீர்க்கும் நன்றியுள்ள வாயில் காவல்காரன் தைரியமாக "அரசர் வாழ்க! சக்ரவர்த்தி வாழ்க ! நீடுழி வாழ்க" என்று உரைக்க வாழ்த்தினான்.

இதைக் கேட்டதும் உணர்ச்சிவசப்பட்ட நெப்போலியன் கூடத்தின் முற்றத்தில் நின்று கொண்டு பின்வருமாறு கூறி விடைபெற்றார்.

"எனது பழைய காவல் வீரர்களே! 20 ஆண்டுகளாகப் பெருமையோடும் மதிப்போடும் நீங்கள் வாழ்ந்ததை நான் பார்த்து இரசித்து அனுபவித்தவன். என்னை நேசித்து மரியாதை செலுத்துவது உங்களுடைய வீரத்தையும் அரச விசுவாசத்தையும் காட்டுகிறது. நாட்டு நலத்தைக் கருத்தில் கொண்டும் உள்நாட்டுப் போர் ஏற்படாது தவிர்க்கும் பொருட்டும் நான் தியாகம் செய்கிறேன். நண்பர்களே! தொடர்ந்து பிரெஞ்சு நாட்டுக்குச் சேவை செய்யுங்கள். நீங்கள் நலம் பெற விரும்புகிறேன். எனக்கு நிகழ்ந்துள்ள விதியின் விளையாட்டை நினைத்து நீங்கள் கவலைபடாதீர்கள்.

நாம் அனைவரும் சேர்ந்து செய்த மகத்தான செயல்கள் குறித்து புத்தகம் ஒன்றை எழுத முடிவு செய்துள்ளேன். போய் வருகிறேன். கொடியை முத்தமிட என்னை அனுமதியுங்கள்" என்று பேசினார்.

படைத்தலைவனிடம் இருந்த கொடியை அணுகி, கொடியை முத்தமிட்டு விட்டு அவனைத் தழுவிக் கொண்டார். "தோழர்களே! உங்களிடமிருந்து விடை பெறுகிறேன்" என்று விடை பெற்றுக்கொண்டு வண்டியில் ஏறினார்.

"சக்ரவர்த்தி வாழ்க" என்று படைவீரர்கள் உரக்கக்கூறி வாழ்த்தினார்கள்.

வண்டி அங்கிருந்து கிளம்பிப் போயிற்று.

நெப்போலியனின் உருக்கமான பேச்சும், கண்ணியமான நடத்தையும் உலக சரித்திரத்தில் இடம் பெற்று விட்டன.

## 77. எனக்கொரு நீதி, உங்களுக்கொரு நீதியா?

நெப்போலியன் எல்பா தீவில் வசித்துக் கொண்டிருந்தார். ஒருநாள் இங்கிலாந்து நாட்டு பத்திரிகையாளர் ஒருவர் நெப்போலியனைப் பேட்டிக் கண்டார். அப்பேட்டியில் நெப்போலியன் இங்கிலாந்து

நாட்டின் சுயரூபத்தைச் சுயநலத்தை உலகுக்கு தோலுரித்துக் காட்டினார். பேட்டியில் நெப்போலியன் பின்வருமாறு கூறினார்.

“நான் சாதாரண வீரன் தான். பிரெஞ்சு நாட்டு சிம்மாசனம் காலியாக இருந்தது. காலியாக இருந்த அரியணையல் துணிச்சலாக அமர்ந்து கொண்டேன். எவ்வளவு காலம் சிம்மாசனத்தில் அமர்ந்திருக்க முடியுமோ, அவ்வளவு, காலத்திற்குச் சமாளித்தேன். மறுபடியும் சாதாரண மனிதனாகி விட்டேன்.”

“பிரெஞ்சு மக்களையும் தாய் நாட்டையும் பாதிக்கும் வகையில், உங்கள் நாட்டுடன் (பிரிட்டனுடன்) ஒப்பந்தம் செய்ய மறுத்தேன். ஐரோப்பா நாடுகளில் போரிட்டு தான் வென்ற பகுதிகளைத் திருப்பித் தரக் கேட்டீர்களே? இந்தியாவில் நீங்கள் கைப்பற்றியிருக்கும் நிலப்பகுதிகளை விட்டுக் கொடுத்தீர்களா? உங்களுக்கு ஒரு நீதி! எனக்கொரு நீதியா?” என்றார்.

ஆங்கிலேயரின் முகமூடியை அவர்கள் சுயநலத்தை அவர்கள் நாட்டு பத்திரிக்கை மூலமாகவே வெளியுலகுக்குத் தனது பேட்டியின் மூலமாகக் காட்டினார் நெப்போலியன். பிரிட்டன் பத்திரிக்கையில் வந்த இந்த பேட்டி இங்கிலாந்து நாட்டினரை வெட்கமடையச் செய்தது. உலகத்தவரிடம் ஆங்கிலேயரின் ஆதிக்க வெறியை வெளிச்சம் போட்டுக் காட்டியது. இந்திய மக்களைத் தட்டி எழுப்பியது.

# 78. காதல் மனைவிக்குக் கடைசிக் கடிதம்

மனைவி ஜோசைப்பைனின் வண்ணப்படம் ஒன்றுக்குக் கண்ணாடி பிரேம் போட்டு அதை எப்போதும் தன் கோட்டுப் பாக்கெட்டில் வைத்திருந்தார். போர்க்களங்களில் கூட அவளது படம் கோட்டில் இருக்கும்.

காதல் மனைவியை விட்டு விட்டு நெப்போலியன் எல்பா தீவில் வசிக்கப் புறப்பட்டார். பிரான்ஸ் நாட்டில் இருந்து அறுபது மைல் துரத்தில் உள்ளது எல்பா. தனது முதல் மனைவி ஜோசைப்பைனுக்கு ஒரு கடிதம் எழுதினார். நெப்போலியன் ஜோசைப்பைனுக்கு எழுதிய கடைசி கடிதமாகும்.

"அன்பு ஜோசைப்பைன், நான் எல்பா தீவில் வாசம் செய்யப் பயணித்துக் கொண்டிருக்கிறேன். இதுவரை வாள் பிடித்துக் காலம் கடத்தி வந்தேன். இனி பேனா பிடித்துக் காலங்கடத்துவேன். நானும் நீயும் பிரான்ஸ் நாட்டு நலனையும், மக்கள் நலனையும் கருதி பெரிய தியாகம் செய்தோம். ஆனால் அவர்கள் நம்மை வஞ்சம் தீர்த்துக் கொண்டனர். நான் உன்னை மறக்கவில்லை. என் கண்ணீரும் இரத்தமும் கலந்த மையினால் இக்கடிதத்தை எழுதுகிறேன். என்னை அடிக்கடி நினைத்துக்கொள்."

நெப்போலியனுடைய இது போன்ற காதல் கடிதங்கள் பிற்காலத்தில் பெரும் புகழும் மதிப்பும் ஏற்படுத்தின. 50 ஆண்டுகளுக்கு முன்னால்

நெப்போலியன் ஜோசைப்பைனுக்கு எழுதிய கடிதங்கள் இருபதனாயிரம் டாலருக்கு ஏலம்போயின. உயிர்க் கலப்பு பெற்ற வரலாற்றுப் புருஷர்களின் எழுத்துக்களுக்குத்தான் எவ்வளவு மதிப்பு.

# 79. காதல் மனைவி மறைவு

நெப்போலியன் எல்பா தீவில் வசித்துக் கொண்டிருந்தார். அப்போது ஒரு நாள் அவரது முதல் காதல் மனைவி ஜோசைபைனிடமிருந்து ஒரு கடிதம் வந்தது.

"என் பரமபிதாவே : என் மக்களையும் என் அருமைக் கணவர் நெப்போலியனையும் உம்மிடத்தில் விட்டுச் செல்கிறேன். அவர்களைக் காப்பாற்றியருளும். இதுவே என் கடைசி வேண்டுகோள்." என்று அக்கடிதத்தில் ஜோசைப்பைன் எழுதியிருந்தார்.

இக்கடிதத்திற்கு நெப்போலியன் பதில் எழுதுவதற்குள் 29.05.1814 ஆம் நாள் ஜோசைப்பைன் உயிர் துறந்தார். இதனை அறிந்த நெப்போலியன் பட்ட துன்பத்திற்கு அளவே இல்லை. தீயில் இட்ட புழுவெனத் துடித்தார். ஒவ்வொரு ஆணின் வெற்றிக்கு ஒரு பெண் துணையிருப்பாள். உலகைக் கட்டியாளும் ஓர் உயர்ந்த அரசனாக இருப்பதைக் காட்டிலும், ஆண்மகனாகிய நீ ஒரு பெண்ணின் மேன்மையான அன்பு நிறைந்த உள்ளத்தின் சக்ரவர்த்தியாக இருப்பது மேல் என்று இங்கர்சால் சொல்லியதைப் போல், நெப்போலியன் காதல் மனைவி ஜோசைப்பைனின் உள்ளத்தில் அரசராக

இருந்தார். உலக நாயகன் நெப்போலியன் சரித்திர புகழ் வெற்றிக்கு ஜோசைப்பைன் தான் வித்தாக இருந்தார். இவரது மறைவு தந்த துயரம், நெப்போலியன் வாழ்வில் மறக்கமுடியாத துயரமாகும்.

## 80. வந்ததுதான் போகும்

மனதை வென்றவர்கள்தான் உயர்வையும், தாழ்வையும், தோல்வியையும், வெற்றியையும், இன்பத்தையும், துன்பத்தையும், சமமாக பாவிப்பார்கள். நெப்போலியனும் சக்ரவர்த்தியாக இருந்தபோது எல்பா தீவில் 10 மாதம் சிறைவாசம் இருந்த போதும் மனம் கலங்கவில்லை. எப்போதும் போல் இருந்தார். துறவி நிலையில் இருந்தார் நெப்போலியன்.

400 படைவீரர்களுடன் எல்பா தீவில் சிறைவாசம் செய்யப்புறப்பட்டார் நெப்போலியன். எல்பா தீவில் நான் மகிழ்ச்சியாக வாழ்வேன் என்று சொன்னார். ஆக்கமும் ஊக்கமும் கொண்ட அவர் தனது படை வீரர்களைக் கொண்டு எல்பா தீவில் பல சீர்திருத்தங்கள் செய்தார். சாலைகளைச் செப்பணிட்டார். மருத்துவமனை கட்டினார். சாலைகள், பாலங்கள், அணைக்கட்டுகள் கட்டினார். இரும்புச் சுரங்கத்தையும், உட்பாதையையும் விரிவுப்படுத்தினார். தீவு மக்கள் கேட்காமலேயே அவர்களுக்குத் தேவையான நன்மைகள் செய்தார்.

ஒருநாள் அத்தீவில் இருந்த பெரியவர் ஒருவர் நெப்போலியன் நிலை கண்டு வருந்தினார். ஆனால் அவரிடம் "மன்னராகப் பிறந்தவர் அரச பதவியைப் பறிகொடுத்தால் மனத்துயரம் அடைவார். நான்

சாதாரணமானவன். சாதாரண வீரன். அதிர்ஷடவசமாக அரியணை ஏறினேன். ஆட்சிப் பொறுப்பு எனக்குச் சுமையாக இருந்தது. எனவே, அதனை இழந்ததற்காக வருந்தவில்லை. எப்போதும் போல் இருக்கிறேன்". என்று நெப்போலியன் கூறினார்.

தாமரை இலைத் தண்ணீர் போல் உயர்வு வந்த போதும் தாழ்வு வந்த போதும் பற்றற்ற துறவியென வாழ்ந்தவர் நெப்போலியன்.

எந்தச் சூழ்நிலையையும் தனக்குச் சாதகமாக எடுத்துக் கொள்ளும் தன்மையும் பக்குவமும் உடையவர் நெப்போலியன்.

"வந்தது தான் போகுமே அல்லாது வருமுன்னே இருந்த ஒன்று போவதுண்டோ? இந்த உண்மை எண்ணி எண்ணி உணர்ந்து கொண்டால் எவருக்கும் எப்போதும் நஷ்டமேது?" என்ற மகரிஷியின் கொள்கைக்கு வடிவம் கொடுத்தவர் நெப்போலியன்.

## 81. கிண்டல்

**எ**ல்பா தீவில் பத்துமாதம் வாசம் செய்தார் நெப்போலியன். இக்காலத்தில் பிரான்ஸ் நாட்டின் ஆட்சி சீர்கேடுகள் குறித்து வருந்தினர். நாட்டினை மீண்டும் சீர்திருத்திட அவரை மீண்டும் பிரான்ஸ் வர நண்பர்கள் அழைத்தனர். பிரான்ஸ் நாட்டினர் சிலர்தங்கள் சக்ரவர்த்தி நெப்போலியனைக் காண "பெல்லரோபென்" என்ற கப்பலில் எல்பா நாட்டிற்குச் சென்றனர். தீவில் சக்ரவர்த்தியைக் கண்டு பேசிய பின்பு, அந்தக் கப்பல் அன்று இரவே பிரான்ஸ்க்குத் திரும்பியது. அதில் நெப்போலியனும் ஏறிக் கொண்டனர்.

எல்பா தீவில் இருந்து நெப்போலியனை ஏற்றிக் கொண்டு கப்பல் பிரான்ஸ் நோக்கி சென்று கொண்டிருந்தது. கப்பல் மேல் தளத்தில் வெண்ணிலா வெளிச்சத்தில் நெப்போலியன் உலவிக் கொண்டிருந்தார்.

நடுக்கடலில், பிரிட்டிஷ் கப்பல் எல்பா நோக்கி வந்து கொண்டிருந்தது. இரண்டு கப்பல்களும் நேர் நேராகச் சந்தித்துக் கொண்டன. நெப்போலியனை அடையாளம் தெரியாத பிரிட்டிஷ் கப்பல் கேப்டன் "உங்கள் சக்ரவர்த்தி எப்படி இருக்கிறார்?" என்று இளக்காரமாகக் கேட்டார். அதற்கு நெப்போலியன் "ஓ மிக நன்றாக இருக்கிறாரே" என்று கிண்டலாக பதில் சொன்னார். எல்பா தீவை அடைந்த போதுதான் நெப்போலியன் ஆங்கிலேயர்களின் கண்ணில் மண்ணைத் தூவி தப்பிச் சென்றது தெரிய வந்தது.

சிறையிலிருந்த மராட்டிய வீர சிவாஜி தனக்கு வந்த பழக்கூடையின் உள்ளே புகுந்து சாமர்த்தியமாகத் தப்பினார். ஆனால் மாவீரன் நெப்போலியன் எதிரிகளின் முன்பே அவர்களின் கண்ணில் மண்ணைத் தூவிவிட்டுச் சாமாத்தியமாகத் தப்பித்த வரலாறு மெய்சிலிர்ப்பதாகும்.

## 82. வசீகரத் தன்மை

**எ**ல்பா தீவிலிருந்து நெப்போலியன் தப்பித்து பிரெஞ்சு கரையில் வந்து இறங்கினார். இதனைத் தடுத்து நிறுத்த 1000 போர் வீரர்களை லுயி மன்னன் அனுப்பி வைத்தான்.

அந்தப் படைகளின் முன்பு துணிச்சலாக நின்ற நெப்போலியன் "உங்கள் எதிர்காலச் சக்ரவர்த்தியைச் சுடக்கூடியவர் உங்களில் யாரேனும் இருக்கிறீர்களா?" என்று சிங்கம் போல் கர்ஜித்து படையினுடே சென்றார். ஆயிரம் துப்பாக்கிகளும் கீழே விழுந்தன. படையினர் அனைவரும் நெப்போலியன் வசமாயினர். தளபதி தலை தப்பித்தால் போதும் என்று ஓட்டமெடுத்தான். நெப்போலியன் படைவீரர்களுக்காக எந்தத் தியாகமும் செய்யத் தயாராக இருந்தார். இந்தக் குணமே வீரர்களை நெப்போலியனால் எளிதில் வசீகரம் செய்ய முடிந்தது.

முயன்றால் முடியும் என்பது நெப்போலியனின் பொன்மொழியாகும். விடாமுயற்சிக்கு நெப்போலியனை உதாரணம் காட்டலாம். ஊக்கமும், விடாமுயற்சியும் துணிவும், தன்னம்பிக்கையும், இவருக்கு இயல்பாகவே இயற்கையாகவே வசீகரத்தன்மையைக் கொடுத்தது.

மூர்த்தி சிறியதானாலும் கீர்த்தி பெரியது என்பார்கள். தான் குள்ளமாக இருந்தாலும், தன் பெயரைக் கேட்டவுடனே இராணுவமே நடுங்கும் படியான நடவடிக்கைகளை அமைத்துக் கொண்டார் நெப்போலியன். இதனால் நெப்போலியனைக் கண்டவுடன் ஆயிரம் சிப்பாயிகளும் அவர் வசமாயினர்.

நெப்போலியன் இராணுவ உடையில் கம்பீரமாக காட்சியளிப்பார். தனது காந்தக் கண்களால் மற்றவர்களையெல்லாம் லேசர் வீச்சுக் கொண்டு அளந்து தன் வசப்படுத்தும் வசீகரத் தன்மை கொண்டவர்.

# 83. பச்சோந்திகள்

**ப**ச்சோந்திகள்என்ற ஒருவகை விலங்கினம். தன்னைப் பாதுகாக்க இடத்திற்கு ஏற்றார் போல் தன் நிறத்தை மாற்றிக் கொண்டு தப்பிக்கும் தன்மை கொண்டது. இதே போன்று மனிதர்களும் பிறரை அண்டிப்பிழைக்க பச்சோந்தியாக மாறுவது சமுதாயத்தில் இருக்கத்தான் செய்கிறது. பச்சோந்திகளை அலட்சியம் செய்யும் சுபாவமுடையவர் நெப்போலியன்.

நெப்போலியன் எல்பா தீவிலிருந்து தப்பி மீண்டும் பாரிஸ் வந்தார். நெப்போலியன் எல்பா தீவில் இருந்த போது 18 ஆம் லூயி அரசு பொறுப்பு வகித்தார். நெப்போலியன் எல்பா தீவிலிருந்து மீண்டும் பாரிஸ் வரும் வரை பத்திரிகைகள் பின்வருமாறு எழுதின.

“எல்பாத் தீவில் சிறைப்பட்ட அரக்கன் அதைவிட்டு வெளியேறினான்.”

“தலைநகருக்கு 150 மைல் தூரத்தில் ஆக்ரமிப்பாளன்!”

“சக்ரவர்த்தி வந்து விட்டார்”

எல்பா தீவில் இருந்தபோது ஒரு மாதிரியாக இகழ்ந்து எழுதிய பத்திரிகைகள் பாரிஸ் நுழைந்தவுடன் வேறு மாதிரியாக புகழந்து எழுதின. பத்திரிகைகள் மட்டும் பச்சோந்திகளாகச் செயல்படவில்லை. அன்றைய பிரெஞ்சு அரசியல்வாதிகள், உயரதிகாரிகள் அனைவரும் பச்சோந்திகளாக மாறினார்கள். “என் உயிரைக் கொடுத்தால் 18 ஆம் லூயி மன்னரைக் காப்பேன்” என்று சொன்னவர்கள், இப்போது “சக்ரவர்த்தி

உயிருக்கு ஆபத்து நேராமல் என் உயிரைத் தியாகம் செய்வேன்" என்றனர். ஆனால் இந்தப் பச்சோந்திகளை எல்லாம் ஒதுக்கி விடும்படி உத்தரவிட்டார் நெப்போலியன்.

# 84. 100 நாட்கள்

1814 ஆம் ஆண்டு நெப்போலியன் பிரான்சில் இருந்து எல்பா தீவிற்கு நாடு கடத்தப்பட்டார். பிரான்சில் மீண்டும் முடியாட்சி நிறுவப்பட்டது. 1815 ஆம் ஆண்டு நெப்போலியன் எல்பா தீவிலிருந்து தப்பித்து மீண்டும் பிரான்ஸ் வந்தடைந்தார். பிரான்ஸ் மக்களாலும் போர் வீரர்களாலும் ஆர்வத்துடன் வரவேற்கப்பட்டார்.

மீண்டும் ஐரோப்பாவை தன் ஆளுகைக்கு உட்படுத்த முடியும் என்று நெப்போலியன் நம்பினார். ஆனால் 1815 ஆம் அதே ஆண்டில் வாட்டர்லூ போரில் தோல்வியடைந்து சிறைபிடிக்கப்பட்டார். வாட்டர்லு போரில் தோல்வியடைந்து சிறைபிடிக்கும் வரை இடைப்பட்ட காலப் பகுதி நெப்போலியனின் 100 நாட்கள் என்று வரலாற்றில் அழைக்கப்படுகிறது.

1821 வரை கைதியாக வாழ்ந்து கொண்டிருந்த நெப்போலியன் வாழ்வு, அந்த ஆண்டுடன் முடிவடைந்தது. நெப்போலியனின் பேரரசு அழிக்கப்பட்ட போதிலும், அவரால் ஐரோப்பா முழுவதும் பரப்பப்பட்ட புரட்சிக் கருத்துகள் அமரத்துவம் பெற்றன. 19 ஆம் நூற்றாண்டில்

அவருடைய புரட்சிக் கருத்துக்கள் ஐரோப்பாவின் பொதுச் சொத்தாக கருதப்பட்டன.

நெப்போலியனை ஒரு தடவை மதகுரு சந்தித்தார். "சாம்ராஜ்ய ஆசை கொண்டு ஊர் ஊராக அலைகிறாயே, நீ இறந்துபோன பின்பு உன்னுடைய சாம்ராஜ்யங்கள் உன்னுடையவையாக இருக்கப் போவதில்லையே" என்று கேட்டார்.

நெப்போலியன் கம்பிரமாகச் சிரித்துக் கொண்டு "சாம்ராஜ்யம் என்னுடையதாக இருக்காது என்று எனக்குத் தெரியும், புரியும். சாம்ராஜ்யங்களை எப்படி அமைக்க வேண்டும் என்ற எண்ணமும் அதன் காரணமாக எழுந்த துணிவும், வீரமும் அந்த வீரத்தினால் எழுந்த புகழும் இந்த உலகம் உள்ள வரை என்னுடையதாக இருக்கும்" என்று பெருமிதத்துடன் பதில் சொன்னார். இது உண்மையே.

## 85. மனக் கலக்கமில்லாதவன்

**வா**ட்டலூ சண்டையில் நெப்போலியன் தோற்றுப்போனார். பிரெஞ்சு நாட்டு இரு சபைகளும் நெப்போலியன் அரசைத் துறக்க வேண்டும் என்று தீர்மானம் இயற்றியது. நெப்போலியனும் அரச பதவியை 100 நாட்களில் இரண்டாவது முறையாக அதாவது கடைசியாகத் துறந்தார்.

தொடர்ந்து பிரெஞ்சு நாட்டில் இருக்க நெப்போலியன் விருப்பப்படவில்லை. அப்போதைய

அரசும் அவருக்கு அதற்குரிய வசதிகளை செய்து கொடுக்கத் தயாராகவில்லை. ஐரோப்பியா நாடுகள் பலவற்றிக்கு அரசனாய் இருந்த நெப்போலியன் இப்போது எந்த நாட்டில் அடைக்கலம் அடைவது என்று தவித்துக் கொண்டிருந்தார்.

"அடைக்கலம் அடைய வேண்டாம். ஒரு கப்பலை ஏற்பாடு செய்து கொண்டு, நீங்கள் விரும்பும் நாட்டுக்கு போய்விடுங்கள்" என்று சிலர் ஆலோசனை கூறினர்.

"இது நல்ல ஆலோசனை இல்லை. ஆங்கிலேயர்களிடம் அகப்பட்டு அவதிப்பட நேரிடும்" என்று வேறு சிலர் அந்த ஆலோசனையை மறுத்தனர்.

"ஆங்கிலேயர்கள் பெருந்தன்மையாகவும், கண்ணியமாகவும் நடந்து கொள்வார்கள். ஆனால் அவர்களுக்கு நல்ல முறையில் ஆட்சி செய்ய தெரியாது" என்றார் நெப்போலியன்.

"ஆங்கிலேயர்களிடம் அகப்பட்டுக் கொள்வதைக் காட்டிலும் வேறு சிறந்த முறையில் நீங்கள் உங்கள் உயிரை முடித்துக் கொள்வது பெருமையாக அமையும்" என்று சிலர் கூறினர்.

"தற்கொலையா? மனக்கலக்கம் அடைந்தவர்கள் தான் பயம் உள்ளவர்கள் செய்யும் இழிவான செயல் தற்கொலை. எனது வாழ்நாளில் ஒரு நாளைக்கூட குறைத்துக்கொள்ள நான் விருப்பப்படவில்லை" என்று அவர்களுக்கு ஆணித்தரமாகப் பதிலுரைத்தார் மாவீரன் நெப்போலியன்.

# 86. கடைசி வணக்கம்

1815 ஆம் ஆண்டு ஜூன் திங்களில் நடைபெற்ற வாட்டர்லூ சண்மையில் நெப்போலியன் தோற்றுப் போனார். தம் அரசபதவியை வேண்டாமென உதறித்தள்ளினார். அமெரிக்கா செல்ல விருப்பம் கொண்டார். ஆனால் ஆங்கிலேயர்களால் சிறைபிடிக்கப்பட்டார்.

நெப்போலியனைச் சுட்டுக்கொல்வதா? செயின்ட் ஹெவினாவில் சிறை வைப்பதா என்று பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் விவாதம் நடைபெற்றது. ஆனால் பிரிட்டிஷ் மக்களோ நெப்போலியனின் புகழில் மயங்கி அவரைக் காண ஆசைப்பட்டனர். ஆனால், ஆங்கிலேய அரசு அவரைப் பிரிட்டிஸ் மக்கள் காணாதவாறு செயிண்ட் ஹெிவினா தீவில் சிறை வைக்க உத்தரவிட்டது.

நெப்போலியனை ஒரு கப்பலில் ஏற்றினர். நீதிமன்ற உத்தரவுபடி அக்கப்பலில் டாக்டர் ஒமிரா உட்பட நால்வர் பயணித்தனர். 09.08.1815 ஆம் நாள் இங்கிலாந்திலிருந்து கப்பல் செயிண்ட் ஹெலினா தீவிற்குப் புறப்பட்டது. சிறிது நேரத்தில் பிரான்ஸ் நாட்டு கடற்கரை நெப்போலியனின் கண்களில் தென்பட்டது.

“என் அருமைப் பிரான்ஸ் தேசமே! ஆஹா! பிரான்ஸ், பிரான்ஸ் நாடு என்று உணர்ச்சி வசப்பட்டு கப்பலில் மகிழ்ச்சியில் குதித்தார். நான் சென்று வருகிறேன் : வணக்கம்; நீ என்னை மறவாதே!” என்று கண்ணீர் வடித்தார். தாய்நாட்டை பார்த்து கடைசி வணக்கம் செலுத்தினார். அவர் உடலிலும், உயிரிலும், இரத்தத்திலும் தாய்நாட்டுப் பற்றே மிகுந்திருந்தது.

நாட்டுப்பற்று என்றால் நெப்போலியன் நினைவுதான் நமக்கு வருகிறது.

## 87. குழந்தை மனம்

17.10.1815 ஆம் ஆண்டு நெப்போலியன் சிறைக் கைதியாகச் செயிண்ட் ஹெலினா வந்தடைந்தார். நெப்போலியனுடன் தளபதி பெர்டிரண்டு, அமைச்சர் மாந்தோலன், பணியாளர் மூவர், சமையல்காரர் வந்திருந்தனர். இத்தீவில் "பிரியார்ஸ் விடுதியில்" வந்து முதலில் தங்கினர்.

அந்த விடுதியின் அறையிலிருந்து பதினைந்து வயதுள்ள பிரிட்டிஷ் சிறுமி அச்சத்துடன் நெப்போலியனை எட்டிப்பார்த்தாள். முரட்டு ஆள் என்று ஏற்கனவே நெப்போலியனைப் பற்றிக் கேள்விப்பட்டிருந்த சிறுமியின் கண்களில் பயம் தெரிந்தது.

உங்களைக் கண்டு அந்தச் சிறுமி பயப்படுகிறாள் என்று ஒரு பணியாள் நெப்போலியனிடம் கூறினார். நெப்போலியன் அந்தச் சிறுமியை உற்றுப் பார்த்தார். அவளது பயத்தைப் புரிந்து கொண்டார்.

உடனே தனது தலைமுடியை வலது கையால் கோதிவிட்டுக்கொண்டார். முகத்தை கொடூரமாக வைத்துக் கொண்டு, தலையைப் பக்கவாட்டில் அசைத்துக் காட்டி மிருகம் போல் கூச்சல் போட்டு வேடிக்கை காட்டினார். அதனால் அந்த சிறுமி மேலும் மேலும் பயந்தாள். அவளது அன்னை சிறுமியை அணைத்துக் கொண்டாள்.

மாபெரும் வீரனின் மனம், குழந்தை மனமாகவும் விளையாட்டுப் புத்தியும் நிறைந்திருந்ததை இதனால் அறியலாம்.

பொதுவாக மனிதர்கள் வயது வந்த குழந்தைகளே என்பது நெப்போலியனின் பொன்மொழி. ஷேக்ஸ்பியரும் மனிதனின் நிலையை ஏழ வகையாகப் பிரிப்பார். ஏழாவது நிலையை "Old fools are babes again" அதாவது, வயதானவர்கள் மீண்டும் குழந்தைத் தன்மையை அடைவார்கள் என்று கூறியுள்ளார்.

## 88. துன்பம் வரும்போது சிரியுங்கள்

**செ**யின்ட் ஹெலினா தீவில் சிறை வைக்கப்பட்ட நெப்போலியன் தங்க பொருத்தமான கட்டிடம் அமையும் வரை தனது குழுவுடன் ஒரு விடுதியில் தங்கியிருந்தார். விடுதியின் பிரிட்டிஷ் சொந்தக்காரர் பால்கொம்பே தனது மனைவியுடனும் நான்கு குழந்தைகளுடனும் ஒரு அறையில் வசித்து வந்தனர். இவர்களது முதல் பிள்ளை எலிசபெத் அழகானவள். சுறுசுறுப்பானவள். குறும்புத்தனம் அதிகம் கொண்டவள்.

ஒருநாள் எலிசபெத் குறும்பு செய்ததற்காக அவரது தந்தை அவளை ஒரு இருட்டு அறையில் வைத்து தனிமையில் அடைத்துவிட்டார். சிறுமி எலிசபெத் தேம்பி தேம்பி அழுது கொண்டே இருந்தாள். சன்னல் வழியாக பார்த்து நெப்போலியன் சிறுமிக்கு ஆறுதல் கூறினார். "இதோ பார் நானும் கைதி நீயும் கைதி. இருவரும் கைதிகள். நான் அழவில்லை. நீ மட்டும் அழலாமா?" என்று ஆறுதலும், தேறுதலும் கூறினார்.

"நீங்களும் ஒரு நாள் அழுதீர்கள்" என்றாள் எலிசபெத். ஒரு நாள் தனிமையில் அழுததை சிறுமி பார்த்திருப்பதை எண்ணி அதிர்ச்சியடைந்தார் நெப்போலியன்.

"அழுதால் சிறை நீங்காது, அழுவதைவிட சிரிப்பதே நல்லது" என்று நெப்போலியன் கூறியதும் எலிசபெத் சிரித்து விட்டாள். துன்பம் வரும்போது சிரியுங்கள் என்று பட்டினத்தார் சொல்லி வைத்தார். அன்றே பட்டினத்தார் போல் துன்பத்தைக் கண்டு சிரித்தவர் நெப்போலியன்.

## 89. புலி பசித்தாலும்

நெப்போலியன் செயிண்ட் ஹெலினா தீவில் சிறைக் கைதியாக இருந்தார். 1815 ஆம் ஆண்டு தீவுக்கு வந்தார். 1816ல் இத்தீவின் கவர்னராக ஹட்சன் லோவே என்ற திமிர்பிடித்த ஆணவக்காரன் வந்தான். இவன் நெப்போலியனுக்குப் பல வகையிலும் தொந்தரவு கொடுத்தான். தீவிரமாக கண்காணித்தான். ஒரு மாவீரனுக்குக் கொடுக்கக்கூடிய மரியாதைக் கொடுக்கத் தவறியதோடு, இழிவாக நடத்தவும் முற்பட்டான்.

நெப்போலியனுக்கு வரும் கடிதங்களைத் தடுத்தான். இதனால் கடிதம் எழுதுவதையே நிறுத்திக் கொண்டார் மாவீரன். உடற்பயிற்சிக்காக நெப்போலியன் குதிரைச் சவாரி செய்வார். குதிரைப் பயிற்சிக்குச் செல்லும் துரத்தை கவர்னர் லோவே குறைத்தான். அதுவும் பிரிட்டிஷ் அதிகாரி ஒருவர் துணையுடன்தான் சவாரி செய்ய வேண்டும் என உத்திரவிட்டான். மாபெரும் வீரன் தங்கியிருந்த

மாளிகையைப் பழுதுபார்க்க மறுத்தார் கவர்னர். இதனால் நெப்போலியன் இறக்கும் வரை, அவர் தங்கியிருந்த இடத்தில் மழை பெய்த போதெல்லாம் கூரை ஒழுகும். தரை எப்போதும் ஈரமாக இருக்கும். சுவர்களில் பூசணம் நாற்றம் அடிக்கும். எலித் தொல்லை அதிகம் இருக்கும்.

ஹெலினா தீவில் இருக்கும் நெப்போலியனுக்கு ஆண்டுக்கு 12000 பவுன் தர ஆங்கில அரசு ஒப்புக் கொண்டு வழங்கி வந்தது. ஆனால் கவர்னர் லோவே ஆண்டுக்கு 8000 பவுன் தான் அனுமதித்தார். அடிக்கடி நெப்போலியன் இருக்கும் இடத்திற்கு வந்து கண்காணிப்பான். ஒருநாள் நெப்போலியனைக் காண கவர்னர் வந்தார். உடனடியாக இருவருக்கும் காப்பி கொண்டுவந்து பணியாளர் கொடுத்தார். நெப்போலியன் அதனைப் பருகவில்லை. லோவே போனவுடன் இந்தக் காப்பியை எடுத்து அப்பால் கொட்டச் சொன்னார் தன்மானமிக்கவர். ஒரு சமயம் நெப்போலியன் தோட்டத்தில் உலா வந்து கொண்டிருந்தார். அங்கு வந்த கவர்னர் "உங்கள் பராமரிப்புச் செலவு, அதிகமாக உள்ளது. பணியாளர்களைக் குறைத்துக் கொள்ளுங்கள்" என்று நெப்போலியனிடம் கூறினான்.

இதைக் கேட்டதும் சிங்கம் சீறியது. ஆத்திரம் கொண்டது. "எனக்கு ஆங்கிலத் தளபதிகள் பெயர்கள் அனைத்தும் தெரியும். உயர்ந்த தளபதி பட்டியல்களில் உன் பெயர் கிடையாது. இதனால் ஒன்றுக்கு உதவாத கழிசடை நீ."

"கேவலம் ஒரு சாதாரண சிறைக் காவலன் நீ. இது குறித்து பேச உனக்கு அதிகாரம் இல்லை. திருடர்களையும் கொள்ளைக்காரர்களையும் காவல் காக்கும் வேலைக்குத்தான் நீ பொருத்தமானவன். உண்மையான

போர் வீரனை உணர்வதற்கு உரிய தகுதியோ, திறமையோ, இல்லாதவன். அதற்குரிய தகுதிகள் உன்னிடம் கிடையாது. இனிமேல் நீ எனக்கு உணவு, அனுப்ப வேண்டாம். எனது உயிரை வேண்டுமானால் உன்னால் போக்கமுடியும். என் இதயத்தை உன்னால் அபகரிக்க முடியாது. இதை நினைவில் வைத்துக்கொள். உனக்கு துணிவு, இருந்தால் என்னை விஷமிட்டு கொல். தைரியமிருந்தால் அதற்கான உத்தரவையாவது போடு" என்று கூறினான்.

இந்தச் சிங்கத்தின் ஆத்திரத்தைக் கண்டு வெலவெலத்துப் போனான் கவர்னர் லோ. எதுவுமே பேசாமல் பயந்து திரும்பினான். கடுகு சிறுத்தாலும் காரம் குறையாது. புலி பசித்தாலும் புல்லைத் தின்னுமா?

# 90. வரலாற்று ஆசிரியர்

செயிண்ட் ஹெலினா தீவில் முதலில் இரண்டு மாதங்கள் ஒரு விடுதியில் நெப்போலியன் தங்க வைக்கப்பட்டார். (நெப்போலியன் இரண்டு மாதம் தங்கியிருந்த இந்த "பிரியார்ஸ்" விடுதியைப் பிரான்ஸ் அரசாங்கம் தற்போது விலைக்கு வாங்கி நினைவுச் சின்ன மாக்கியுள்ளது.) பின்னர் லாங்வுட் என்ற இடத்தில் உள்ள பழைய கட்டிடத்தைப் புதுப்பித்து அங்கு தங்க வைக்கப்பட்டார். 23 சிறிய அறைகள் கொண்ட இக்கட்டிடம் லாங்வுட் மாளிகை என்றழைக்கப்பட்டது.

முதலில் விடுதியில் தங்கியிருந்தபோது, விடுதியின் காப்பாளர் பால்சொம்பே குடும்பத்தினருடன் நெப்போலியன் அன்னியோன்யமாகப் பழகினார். இந்த

உறவு, லாங்வுட் மாளிகைக்குப் போன பிறகும் தொடர்ந்தது. பால் சொம்பே மூத்த பெண் எலிசபெத் தினமும் குதிரை சவாரி செய்து லாங்வுட் மாளிகை சென்று நெப்போலியனுடன் அரட்டை அடிப்பாள். பிரிட்டிஷ் சிறுமியுடன் நெப்போலியன் வெறுப்பு காட்டாமல் அன்புடன் பழகிவந்தார். நெப்போலியனை "அன்புள்ள போனி", "அன்பார்ந்த நண்பரே" என்றெல்லாம் எலசபெத் வம்படிப்பாள். நெப்போலியன் இதனையெல்லாம் ரசிப்பார்.

நெப்போலியன் எப்போதும் உலக வரைபடைத்தையும், குளோப்பையும் வைத்துப் பார்த்துக் கொண்டிருப்பார். அவர் மனதில் பூகோள வரைபடமே பதிவாகியிருந்தது.

நாள்தோறும் எலசபெத்துக்கு வரலாற்றுப் பாடம் எடுக்கத் தொடங்குவார். பிரான்ஸ் நாட்டையும், தான் உருவாக்கிய பேரரசின் வெற்றியைப் பற்றியும் அவளுக்கு பாடம் கற்பித்தார்.

ஒரு நாள் "ரஷ்யாவின் தலைநகர் எது?" என்று கேட்டார்.

"மாஸ்கோ"

"அந்த நகரை யார் எரித்தது."

"தெரியாது"

"நான் ............. நான்தான் அதனை எரித்தேன்."

வரலாற்று பாடம் சொல்லிக் கொடுப்பதற்காக எலிசபெத்தை நாள்தோறும் ஆவலுடன் எதிர்பார்ப்பார் நெப்போலியன். ஓய்வுக் காலத்திலும் தான் படித்தவற்றை தான் அறிந்தவற்றைப் பிறருக்குச் சொல்லிக் கொடுக்கும் பெருந்தன்மையுடையவர் நெப்போலியன்.

## 91. குளோப்பில் கீறல்

செயிண்ட் ஹெலினா தீவில் லாங்வுட் மாளிகையில் நெப்போலியன் எப்போதும் சுறுசுறுப்புடன் இருப்பார். அவரது மாளிகையில் வரவேற்பு அறை, பார்வையாளர் அறை, நூலகம், குளியல் அறை, சாப்பாட்டு அறை, தூங்கும் அறை என 23 அறைகள் இருந்தன. படிக்கும் அறையில் இருந்த பெரிய மேசையின் மீது உலக வரைபடங்கள் விரித்து வைக்கப்பட்டிருந்தன. இரண்டு பெரிய பூகோள உருண்டைகளும் (குளோப்புகள்) இருந்தன. நெப்போலியன் உலக வரைபடத்தில் அடிக்கடிக் குண்டூசிகள் குத்தி திட்டமிடுவது வழக்கம்.

அரசாட்சியை இழந்தபோதும் உலக வரைபடத்தைத் தன் மனதிலிருந்து அவரால் அழிக்க முடியவில்லை.

விளையாட்டு நேரம் தவிர மற்ற நேரங்களில் புத்தகத்தை எடுத்து உரக்கப் படிப்பார். மற்றவர்கள் அதனைக் கேட்பார்கள். உலக வரைபடங்களையும் குளோப்களையும் உற்றுப் பார்ப்பார்.

தனது அனுபவங்களை, அறிவுரைகளை அவர் சொல்லச் சொல்ல அவரது செயலாளர் லாஸ்கோஸ் எழுதி பதிவு செய்வார். ஒரு நாள் அவ்வாறு தனது அனுபவத்தை சொல்லிக் கொண்டிருக்கையில் எதிரே இருந்த குளோப்பில் தன் விரல் நகத்தினால் கீறினார். அந்த கீறல் உள்ள குளோப் இன்று பார்வையாளர்கள் பார்க்கும் வண்ணம் அப்படியே இருக்கிறது.

# 92. வீர சகாப்தத்தின் கண்ணீர்

நெப்போலியன் செயிண்ட் ஹெலினா தீவில் 6 ஆண்டு காலம் வாழ்நாளில் இறுதியாக வாழ்ந்தார். கடைசி காலத்தில் அவர் உள்ளத்தில் எழுந்த பூகம்பங்களை எழுத்துக்களில் எழுத இயலாது.

தன்னிடம் பரிவு காட்டிய நண்பர்கள், டாக்டர்கள் அனைவரையும் கவர்னர் லோ சிறைப்படுத்தினார். சிலரை நாடு கடத்தினார். மிகவும் மனமுனடைந்தார் நெப்போலியன்.

ஒருநாள் தன் பெட்டியை திறந்து பார்த்தார். பல கடிதங்களிடையே ஜோசைப்பைன் படமும் மேரிலூயின் படமும் தன் மகன் படமும் காணப்பட்டன. அதைப் பார்த்துக் கண்ணீர் வடித்தார். தன் மகன் படத்தை எடுத்து தன் மார்ப்போடு அனைத்துக் கொண்டு முத்தமிட்டார். "எனக்கு மகனாகப் பிறந்து நீ துன்பப்பட வேண்டுமா? நீ சுகமாயிரு" என்று கூறினார். (நெப்போலியன் மகன் தன் 21 வயதில் அகால மரணம் அடைந்துவிட்டார்)

தன் மகன் படத்தை நடுவில் வைத்து ஒருபுறம் முதல் மனைவி ஜோசைப்பைன் படத்தையும் மறுபுறம் மேரிலூயினா படத்தையும் வைத்தார். அப்படங்களைப் பார்த்துப் புன்முறுவல் பூத்தார். அதன் அழகை இரசித்தார். உள்ளமோ கண்ணீர் வடித்தது. மாவீரன் நெப்போலியன் வாழ்வில் இது படிப்பவர்களின் கண்களைக் குளமாக்க வைத்த சம்பவம் என்று வரலாற்று ஆசிரியர்களும் கண்ணீர் வடிக்கின்றனர்.

சக்ரவர்த்தியாக இருந்தாலும் மாவீரனாக இருந்தாலும் உற்ற பாசமும் உயிர்க்கலப்பும் இரத்த பாசமும் ஒன்று தானே!

# 93. அது ஒரு மனப்பக்குவம்

**மா**வீரன் நெப்போலியன் சக்ரவர்த்தியாக இருந்து பின்னர் வாட்டர்லு போரில்தோல்வி அடைந்து செயிண்ட் ஹெலினா தீவில் கைதியாக வைக்கப்பட்டார். அவருடைய உடல் நலத்தைப் பேணிக் காக்க டாக்டர் ஒருவரும் நியமிக்கப்பட்டிருந்தார்.

ஒரு நாள் நெப்போலியனும் டாக்டரும் வயல் வெளியில் நடந்து சென்று கொண்டிருந்தார்கள். ஒரு குறுகலான வரப்பின் மீது அவர்கள் சென்று கொண்டிருந்தபோது, ஏழை குடியானவப் பெண் ஒருத்தி எதிரில் வந்து கொண்டிருந்தாள்.

நெப்போலியன் வரப்பில் இருந்து விலகி வழிவிடுவாரென்று எதிர்பார்த்து அந்த குடியானப் பெண் வரப்பின் மீது காத்திருந்தாள். அதைப் பார்த்த டாக்டர் "ஏய் பெண்ணே, வருவது நெப்போலியனென்று உனக்குத் தெரியவில்லையா? அவருக்கு முதலில் வழிவிடு" என்றார்.

உடனே நெப்போலியன் "இப்போது இருக்கின்ற நெப்போலியன் சக்ரவர்த்தி நெப்போலியன் அல்ல, மற்றவர்கள் விலகி அவனுக்கு வழிவிடுவதற்கு. இன்றைய நெப்போலியன் குடியானவப் பெண்ணுக்கும் விலகி வழிவிட வேண்டியவன்" எனச் சொல்லியபடியே அந்தப் பெண்ணுக்கு வழிவிட்டு விலகினார்.

நெப்போலியன், வாழ்க்கையில் உயர்வையும், தாழ்வையும், ஒரே சமமாகப் பாவித்தவர். தோல்விகளைத்

தவிர்க்க முடியாத விஷயமாக ஏற்றுக்கொண்டவர். ஆகவே, எந்த நிலையிலும் எதையும் ஏற்றுக் கொள்வதற்கு அவர் தயாராகவே இருந்தார். வெற்றிகளுக்கு அவன் பொறுப்பென்பதைப் போலவே, தோல்விகளுக்கான பொறுப்பினையும் அவர் ஏற்றுக் கொண்டார்.

அது ஒரு பரிபக்குவ நிலை. அது வந்தால் மட்டுமே மனிதனுக்கு அமைதி கிடைக்கும்.

## 94. பிரிட்டிஷ் சிறுமியின் புத்தகம்

**செ**யிண்ட் ஹெலினா தீவில் சிறை வாசம் இருந்தபோது சிறுமி எலிசபெத்துடன் நெப்போலியன் வம்படிப்பது பொழுது போக்குவது வழக்கம். வம்படிப்பது என்றால் அர்த்தமுள்ள விஷயங்களை சத்துள்ள செய்திகளைப் பகிர்ந்துகொள்வார்கள். இவருடன் தனக்கு ஏற்பட்ட அனுபவங்களை எலிசபெத் பிற்காலத்தில் ஒரு புத்தகம் வெளியிட்டாள்.

முதன் முதலில் நான் நெப்போலியனை நேரில் பார்த்த போது பயம் ஏற்பட்டது. ஆனால் பின்னர் அவர் மீது உயர்ந்த மதிப்பு ஏற்பட்டது.

குதிரை சவாரி செய்யும் போது அவர் மிகவும் கம்பீரமாக அமர்ந்து சவாரி செய்வார். அவர் குதிரை சவாரி செய்வதை பார்ப்பதே அழகு.

பெருந்தன்மையான அவரது வசீகரப் புன்னகையும் அலட்சியப் பார்வையும் கம்பீரமும் அவரது கவர்ச்சிக்குக் காரணங்களாக அமைந்தன.

நடக்கும்போதும் காலடி எடுத்து வைப்பதிலும் கம்பீரமாகக் காட்சியளிப்பார். ஐரோப்பாவில் சக்ரவர்த்தியின் கம்பீரம் கடைசி வரை இருந்தது.

உலகில் நெப்போலியனைப் போன்ற சிறந்த மனிதரைப் பார்த்ததில்லை என்று எலிசபெத் தனது புத்தகத்தில் எழுதியிருந்தாள்.

**வருங்காலத்தில் அவரதுபுகழ் சிறந்து விளங்கும்** என்பதையும் அப்புத்தகத்தில் குறிப்பிட்டிருந்தாள்.

தன் புகழ் கண்டு மிரண்டு தன்னைச் சிறைபிடித்த ஆங்கிலேயர்களாலேயே பாராட்டும் புகழ் பெற்றவர் நெப்போலியன்.

## 95. நட்பின் அவசியம்

**உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு.**

என்பார் வள்ளுவர். நல்ல ஆழமான நட்பு அமைதியான வாழ்க்கைக்கு அவசியமென்பார்கள் மனவியல் அறிஞர்கள். ஆம். நம் துயரங்களை, துன்பங்களை, தோல்விகளை ஏன் வெற்றிகளை, சாதனைகளை பகிர்ந்து கொள்ளக்கூடிய உண்மையான நட்பு இருத்தல் அவசியமாகும். உண்மையான நம் நட்பு உணர்ச்சிகளுக்கு ஒருவடிகாலாக அமைகின்றன. நமக்கு ஏற்படும் மன அழுத்தங்கள், மன இறுக்கங்கள், மன உளைச்சல்கள், டென்சன்கள் நீங்கும்.

படிக்கப் படிக்க நூலின் பொருள் மிகுந்து விளங்குவது போல, நல்லோர் நட்பு பழகப் பழக இனிமையளிக்கும்.

செயிண்ட் ஹெலினா தீவில் இருந்தபோது நெப்போலியன் நட்பைப் பற்றிச் சிந்தித்தார். உண்மையான நண்பர்களைதான் ஏற்படுத்திக் கொள்ளவில்லையே என்று வருந்தினார். தன்னைச் சுற்றியும் முகஸ்துதி செய்பவர்களும், அரசு அதிகாரிகளும், போர் வீரர்களும் இருந்தனர். ஆனால் உண்மையாகத் தன்னை நேசிக்கக்கூடிய தன் தவற்றை எடுத்துச் சொல்ல நல்ல நட்பினை ஏற்படுத்த இயலாத தன் தவற்றை உணர்ந்தார். நட்பு என்பது சிரித்து மகிழ்வதற்கு விளையாடுவதற்கு அல்ல. தவறு செய்யும் போது அதனைக் கண்டிப்பதேயாகும். நண்பனுக்குக் கெடுதிகள் வரும்போது அவற்றை நீக்கி அவனை நல்வழியில் செலுத்துவது நல்ல நட்பாகும். இத்தகைய நட்புகளை தான் ஏற்படுத்திக் கொள்ளவில்லையே என்று நெப்போலியன் மிகவும் மனம் வருந்தினார்.

நெப்போலியனின் இந்தக் கூற்று நமக்கு ஒரு பாடமாக அமையட்டும். வாழும் காலத்தில் நட்புகளை ஏற்படுத்தி அமைதி காண்போம். உடுக்கை இழந்தவன் கை போல இடுக்கண் களையும் நட்பை நாடுவோம்.

## 96. தன்னம்பிக்கை

**த**ன்னம்பிக்கை என்றால் நெப்போலியன் தான் நமக்கு நினைவுக்கு வருவார். சாதாரணக் குடும்பத்தில் பிறந்து தனது தன்னம்பிக்கையால் நாட்டின் சக்ரவர்த்தியாக உயர்ந்தார். தனது நிர்வாகத்திறமையால் வரலாற்றில் இடம் பெற்றார். தனது உழைப்பால் ஐரோப்பாவையே நடுங்க வைத்தார்.

உலகில் வெற்றி பெற வேண்டுமானால் ஏற்கனவே வெற்றி பெற்றது போல் நீங்கள் தோற்றம் தர வேண்டும் என்று நெப்போலியன் கூறுவார்.

தன்னம்பிக்கைதான் எனது வெற்றிக்கு அடிப்படை என்பது நெப்போலியன் கூற்று. "நான்தான் புரட்சி" I am revolution "புரட்சியின் குழந்தை" என்றெல்லாம் தம்மை அழைத்துக் கொண்டது நெப்போலியனின் தன்னம்பிக்கையைக் காட்டுகிறது. "துணிவு மிக்கவர்கள் நிகழ்காலத்தில் சிறப்பாக வாழ்ந்து அதன் மூலம் எதிர்காலத்தைப் பலமாக உருவாக்குவார்கள். துணிவில்லாதவர்களே நிகழ்காலத்தை வீணாகக் கழித்து எதிர்காலத்திற்காக ஏங்கிக் கிடப்பார்கள்" என்று துணிவைப் பற்றி நெப்போலியன் கூறுவார்.

நெப்போலியன் "காலத்தை வென்றவர்" என்று வரலாற்று ஆசிரியர்களால் புகழப்படுகிறார். 1779 ஆம் ஆண்டு அவர் டைரக்டரி அரசாங்கத்தை கவிழ்த்துவிட்டு பதவியைக் கைப்பற்றியதன் மூலம் "புரட்சியை அழித்துவிட்டேன்" என்று கூறினார். அதே சமயத்தில் புரட்சியின் இரண்டு அடிப்படை தத்துவங்களான 'சகோதரத்துவம், சமத்துவம்' ஆகியவற்றை நிலைநாட்ட முயற்சிகள் மேற்கொள்ளத் தவறவில்லை.

**"வாய்ப்புகள் ஒருபோதும் தேடி வராது. நானே எனக்காக வாய்ப்புகளை அழைத்துக் கொள்கிறேன்"** என்று அடிக்கடி கூறுவார்.

ஒருசமயம் விருந்தினர்கள் மத்தியில் அவர் பேசிய போது "இந்த உலகில் நான் மிகவும் தாமதமாகப் பிறந்திருக்கிறேன். எனக்கு முன் பிறந்த பலர் ஏற்கனவே ஏராளமான சாதனைகளைப் புரிந்தார்கள். புதிதாக நான்

சாதிப்பதற்கு அவர்கள் எதையும் விட்டு வைக்கவில்லை. உதாரணமாக கிரேக்க மாவீரன் அலெக்சாண்டரை எடுத்துக்கொள்வோம். அவர் ஆசியாக் கண்டத்தை வெற்றி பெற்றுத் திரும்பிய போது தன்னைக் கடவுளின் வாரிசு என்று சொல்லிக் கொண்டார். கீழை நாட்டு மக்களும் அதை நம்பினார்கள். தாமதமாகப் பிறந்ததால் என்னால் இந்தச் சாதனையைச் செய்ய முடியவில்லை என்றார்.

"உலக வரலாற்றில் தலை சிறந்த வீரனாக நீங்கள் யாரை நினைக்கிறீர்கள்" என்று நெப்போலியனிடம் ஒரு சமயம் கேட்டார்கள். அதற்கு நெப்போலியன் சொன்ன பதில் என்ன தெரியுமா?" "ஜீலியஸ் சீசரை. இரண்டாவது மாபெரும் வீரனாக என்னைக் கருதுகிறேன்". என்று தன்னையே முதல் வீரனாக முன் நிறுத்தி சொன்னான் தன்னம்பிக்கையாளான் மாவீரன் நெப்போலியன்.

மொத்தத்தில் தன்னம்பிக்கை உள்ளவன் தரணி ஆள்வான் என்ற கூற்றை மெய்ப்பித்தவன் நெப்போலியன்.

## 97. கடைசி வார்த்தை

செயிண்ட் ஹெலினா தீவில் இறுதி நாட்களில் நெப்போலியன் நோய்வாய்ப்பட்டார். வயிற்று வலி அடிக்கடி வரத் தொடங்கியது. நோய் குணமாகவில்லை. உடலும், உள்ளமும் ஒரே சேர ஓய்வெடுக்க விரும்பின.

1821 ஆம் ஆண்டு ஏப்ரல் 28 ஆம் நாள் அவருக்கு மீண்டும் வயிற்று வலி ஏற்பட்டது. நிறைய தண்ணீர் பருகினார். ஐந்து நாட்கள் வயிற்று வலியால் துடித்தார். மே திங்கள் 3, 4 ஆம் நாட்கள் நெப்போலியனை பார்க்க மக்கள் கூட்டம் கூட்டமாக வந்தனர்.

லாங்வுட்டிலிருந்து குழந்தைகள் அணிவகுத்து வந்தனர். மாவீரனின் கைகளில் முத்தமிட்டுச் சென்றனர். அக்குழந்தைகளை ஒவ்வொருவரையும் கண்ணீர் மல்க ஆசை தீர தடவிக் கொடுத்தார் நெப்போலியன்.

கடைசியாக மே மாதம் 5 ஆம் நாள் மாலை நெப்போலியன் எதுவும் பேசவில்லை. உடல் சலனமற்று போனது. கை கால்கள் அசையவில்லை. உதடுகள் மட்டும் துடித்தன. அவரது உதடுகள் கடைசியாக என்ன சொன்னது தெரியுமா? பிரான்ஸ், என் மகன் ........., ஜோசைப்பைன் என்றன. மூன்று வார்த்தை கூறியதும் அவர் உயிர் பிரிந்தது. உலகமே வருந்தியது. இக்கோரக் காட்சியை காண ஆதவனும் கண்ணீர் சிந்தி மறைந்து கொண்டான்.

கொடியவர்களின் செய்கையால் வெளிச்சமும் மறைந்து இருட்டு கவ்வியது. ஆனால் நாட்டுப்பற்றும், வீரமும், ஊக்கமும், தன்னம்பிக்கையும் கொண்ட மாவீரனது புகழ் மறையவில்லை. அவரது புகழ் உலக வரலாறு உள்ள வரையில் இருந்து கொண்டே இருக்கும்.

## 98. நினைப்பே நடப்பு

**“எண்ணிய எண்ணியாங்கு எய்துவர் எண்ணியர்
திண்ணிய ராகப் பெறின்”**

நமது குடியரசுத் தலைவர் திரு. அப்துல் கலாம் அவர்களுக்கு மிகவும் பிடித்த இரண்டு திருக்குறளில் இதுவும் ஒன்று. நாம் எதை நினைக்கிறோமோ அதுபோல் மாறிவிடுவோம்.

செயிண்ட் ஹெலினா தீவில் சிறை வாசத்தில் இருந்த நெப்போலியன் அறுபதுக்கு மேற்பட்ட போர்க் களங்களைக்

கண்டவர். நாற்பத்துக்கும் மேற்பட்ட போர்களை வென்றவர். கடைசி நாட்களில் தீவின் கவர்னராக இருந்த ஹட்சன் லோ நெப்போலியனை அவமதித்து நடத்தினார். 46 வயதில் சிறையில் தீவுக்கு வந்த நெப்போலியன் 52 வயதில் இயற்கை எய்தினார்.

கடைசி நாட்களில் நெப்போலியன் தன் வாழ்நாள் எண்ணத்தை உயிலில் எழுதி வைத்தார். தான் இறந்த பிறகு தனது உடலை பிரான்ஸ் நாட்டின் சீன் ஆற்றங்கரையில் புதைக்க வேண்டும் என்று தனது எண்ணத்தை எழுதியிருந்தார். ஆனால் ஆணவம் பிடித்த கவர்னர் லோ நெப்போலியன் இறந்த பிறகு அவர் உடலை அதே தீவில் லாங்வுட்டிலிருந்து 1½ கி. மீ. தூரத்தில் புதைத்தார். கல்லரை மீது சமாதி கட்டுவதிலும் கவர்னர் குறுக்கிட்டார். நெப்போலியன் பெயருக்கு முன்பு சக்ரவர்த்தி என்று எழுதக்கூடாதென தடுத்தார். சமாதி மேல் எதுவுமே எழுதக்கூடாது என்று தடுத்தார்.

ஆனால் நெப்போலியன் எண்ணத்தின் ஆற்றலை, புகழை கவர்னர் லோவால் எப்படித் தடுக்க முடியும்? நெப்போலியன் நினைத்தபடி 19 வருடங்களுக்குப் பிறகு 1840 ஆம் ஆண்டு கல்லறையைத் தோண்டி, சவப் பெட்டியை எடுத்து பிரான்ஸ் நாட்டிற்கு எடுத்துச் சென்றனர் மக்கள். பாரிஸ் அரண்மனையின் வழியே நான்கு பேர்கள் சவப் பெட்டியைத் தூக்கி வந்து கோச் வண்டியில் வைத்தனர். ஸல்-இஸ்வாலிடஸ் என்னும் மயானத்தை நோக்கி இறுதி ஊர்வலம் புறப்பட்டது. 1840 ஆம் ஆண்டு இறுதி ஊர்வல நிகழ்ச்சி மிகப் பிரமாதமாக இருந்தது. பிரான்ஸ் நாடே சோகமாக இருந்தது. பாரிஸ் மாநகரில் நடைபெற்ற இறுதி ஊர்வல நிகழ்ச்சி ஒலி - ஒளிக் காட்சியாகக் காண்பிக்கப்பட்டது. இறுதி ஊர்வலக் காட்சி காண்பவர் மனதைக் கவரும் வகையில் அமைந்தது.

இதில் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டனர். சோகத்தின் வடிவாய் தலை கவிழந்து நடந்து சென்றனர். வாத்தியங்கள் மெதுவாக சோக கீதம் பாட பீரங்கிகள் முழங்கி மரியாதை செலுத்தின. எங்கும் அமைதி, மக்கள் மலர் வைத்தனர். சிலர் நீண்ட வாளையும், துப்பாக்கிகளையும் உடல் மீது சாத்தினர். இறுதி அஞ்சலி செலுத்தினர். நெப்போலியன் எண்ணப்படியே அவரது உடல் சீன ஆற்றங்கரையில் வைத்து நினைவுச் சின்னம் எழுப்பப்பட்டது. நினைப்பே நடப்பு. நெப்போலியன் எண்ணம் சக்தி வாய்ந்தது. இறந்த பின்பு அவர் நினைத்தது நடந்தது.

# 99. கல்லறையில் கருவறை தரிசனம்

பிரான்ஸ் நாட்டில் நெப்போலியன் உடல் சீன் ஆற்றங்கரையில் புதைக்கப்பட்ட பிறகு 15 ஆண்டுகள் வரை அவரது தாய் ரமோலினி உயிருடன் இருந்தார். இவர் தன் ஆயுள்காலத்தில் பல பாதிரியார்கள் முடி சூட்டியதையும் பலர் முடியிழந்ததையும் பார்த்தவர்.மூன்று போப்புகளை கண்டவர். மக்கள் நெப்போலியனின் தாயைப் பார்த்து ஆறுதல் கூறினார்கள். மாவீரனின் கல்லறையும், மாவீரனின் தாயின் வீடும் பிரான்ஸின் புனித இல்லங்களாக மாறின.

தன்னைக் காண வந்த மக்களிடம் எல்லாம், தன் புதல்வனின் வீரத்தையும், தீரத்தையும், சாதனையும் சொல்லி மகிழந்தார். பேரப் பிள்ளைகளுக்கு நெப்போலியனின் கதைகளைச் சொல்லி வந்தார். வருவோர் போவோர்களிடம் நெப்போலியனின் புகழைக் கூறிக் கொண்டே இருந்தார்.

நாள்தோறும் கரு சுமந்த கருவறை கல்லறை சென்று மலர்தூவி தரிசனம் செய்தது. ஆம்! தாய் தினமும் நெப்போலியனின் கல்லறை சென்று வந்தார். "எனக்கு நீ செய்ய வேண்டியதை நான் உனக்குச் செய்கிறேன்" என்று மலர் தூவி வணங்கி வருவார். இங்கு உலக வரலாற்று நாயகனைச் சுமந்த கருவறை, 15 ஆண்டுகள் வரை, கரு சுமந்த மாவீரனைக் கல்லறையில் தரிசனம் செய்து வந்தது.

அரசியல் மேதை இன்று சீன் ஆற்றங்கரையில் அமைதியாகத் தூங்குகிறார்.

# 100. அவர் ஒரு சகாப்தம்

**கா**லத்தை வென்றவர், புரட்சியின் குழந்தை என்றெல்லாம் வர்ணிக்கப்பட்வர் சக்ரவர்த்தி நெப்போலியன். உலகமே வியக்கத்தக்க முறையில் பிரான்சில் எழுச்சிப்பெற்று 1779 முதல் 1815 வரை ஐரோப்பிய வரலாறு முழுவதையும் ஆக்ரமித்துக் கொண்ட கதாநாயகன் நமது நெப்போலியன். இதனால்தான் இக்காலக்கட்டம் ஐரோப்பிய வரலாற்றில் "நெப்போலியனின் சகாப்தம்" என்று வரலாற்று ஆராய்ச்சியாளர்களால் வர்ணிக்கப்படுகிறது.

நெப்போலியன் போர்களில் பெற்ற வெற்றியைவிட நிர்வாகத்துறையில் ஆற்றிய சாதனைகள் கருங்கல்லின் அடித்தளத்தில் அமைக்கப்பட்ட கட்டிடம் போல் என்றும் அழியாத் தன்மை கொண்டது. இருடைய நிர்வாகத்திறமை தான் இவரைப் புகழின் உச்சிக்குக் கொண்டு சென்றது. பிரான்ஸ் நிர்வாகமே சீர்குலைந்து குழப்பத்தில் இருந்தபோது, கலகத்தை அடக்கினார். நிர்வாகத்தைச் செப்பணிட்டார்.

திறமையுடையவர்களை அரசுப்பணிக்குக் கொண்டு வந்தார். நாட்டின் நிதி நிர்வாகத்தை செப்பணிட்டார். இவர் எத்தனை வீரம் உள்ளவரோ அத்தனை அரசியலில் வல்லுநரும் ஆவார். அவர் இயற்றிய சட்டங்களே இன்று அவருடைய நினைவுச் சின்னங்களாக வாழ்கின்றன. பொதுப்பணிகளிலும் சிறந்த நிர்வாகத்தை அமல் செய்தார்.

இவர் ஒரு அரசியல் மேதை. சட்ட வல்லுநர். பேரன்புள்ள கணவர், அன்புள்ள தந்தை, குடிகள் போற்றும் அரசர். பிரான்சின் பேரரசர். வீரம் செறிந்த தளபதி. இவரைப் போல சகல கலா வல்லவர்களை உலகில் விரல் விட்டு எண்ணிவிடலாம். உறவிலே கண்ட உண்மைத் தெளிவே துறவு என்பதை உலகுக்கு உணர்த்தியவர். எதையும் உடன் துறந்து விடும் மனப்பண்பும் மனத்திட்பமும் கொண்டிருந்தார். இவரது முயற்சியால் தான் ஐரோப்பா முழுவதும் சமத்துவ உணர்ச்சி நிலவியது.

ஒவ்வொரு துறையைப் பற்றியும் அறிந்தவர். நினைவாற்றல் மிக்கவர். தன்னம்பிக்கை நிறைந்தவர். ஒரு செயலை முடிக்க வேண்டுமென்றால் உடனுக்குடன் முடித்துவிடுவார். ஒன்றையொன்று மாற்றி வைத்து குழப்பும் செயல்பாடு அவரிடம் இல்லை. ஒரு வீர சகாப்தம் நெப்போலியன் வாழ்க்கையுடன் முடிந்து விட்டது. இதுபோன்ற வீரர்கள் ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒருமுறைதான் தோன்றுவார்கள். பிரான்ஸ் நாட்டு மக்கள் நெப்போலியனைத் தெய்வமாக கருதுகின்றனர்.

அரச குடும்பத்தில் பிறந்தவர்கள் மட்டும்தான் ஆட்சி செய்ய வேண்டும் என்ற நிலையைத் தகர்த்தவர். தகுதியுள்ள எவரும் நாட்டை ஆள முடியும் என்று நிரூபித்தவர். இதனால் உலகத்து மக்களின் இதயங்களில் பெருமைக்குரிய இடத்தில் வசித்து வருகிறார். அவர் ஒரு சகாப்தம்.

## வாழ்க்கைக் குறிப்பு

போனபார்ட் வம்சம்

↓

சார்லஸ் போனபார்ட் (தந்தை)

↓

லதீதா ரமோலின் (தாய்)

ஜோசப் | நெப்போலியன் | லூசியன் | லூயிஸ் | ஜரோமி | எலிசா | பாலைன் | கரோலின்

| | |
|---|---|
| பிறந்த இடம் | : கார்சிகா தீவு |
| பிறந்த தேதி | : 15.08.1769 |
| படிப்பும் பதவியும் | : 5 வயதில் ஆரம்பக் கல்வி<br>10 வயதில் ராணுவக் கல்லூரியில் படித்தல்<br>15 வயதில் இராணுவ வீரன்<br>16 வயதில் லெப்டினென்ட்<br>23 வயதில் ராணுவ காமாண்டர்<br>35 வயதில் சக்ரவர்த்தி<br>46 வயதில் ஹெலினா தீவு சிறைவாசம்<br>52 வயதில் இறப்பு |
| குடும்பம் | : ஜோசைப்பைன் (முதல் மனைவி)<br>சார்னல் பெக் (இரண்டாவது மனைவி)<br>இரண்டாம் நெப்போலியன் (மகன்) |
| வாழ்ந்த காலம் | : 51 ஆண்டுகள் 8 மாதங்கள் 20 நாட்கள் |
| இறப்பு | : 05.05.1821 |
| பின்பற்ற வேண்டிய பண்புகள் | : தன்னம்பிக்கை, நாட்டுப்பற்று, வீரம், துணிவு, விடாமுயற்சி, உழைப்பு, நினைவாற்றல், இரக்கம், மன்னித்தல், ஊக்கம் முதலியன. |